

"இந்தியா தடுப்பூசி செலுத்துவதில் ஒரு புதிய சாதனையை எட்டியுள்ளது. இது, விரைவில் தடுப்பூசி தயாரிப்பதற்கான உலகின் மிகப்பெரிய மையமாக மாறும்"

பேட்டி: மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா

பக்கம் 22 -25

» தொகுதி 2, இதழ் 8

» அக்டோபர் 16-31, 2021

»இலவச விநியோகத்துக்காக

# நியூ இந்தியா சமாச்சார்

NEW INDIA SAMACHAR

Volume 2, Issue 8

October 16-31, 2021



## தடுப்பூசி,

## நாட்டின் பாதுகாப்புக் கேடயமாகிறது

கோவிட் பெருந்தொற்றுக்கெதிரான போராட்டத்தில் தடுப்பூசி செலுத்துவதில், இந்தியா, தடுப்பூசி செலுத்தக்கூடிய மக்கள் அனைவருக்கும் 100% தடுப்பூசி செலுத்த வேண்டும் என்பதை நோக்கி தொடர்ந்து நடைபயின்று, புதிய சாதனையளவை ஏற்படுத்துகிறது.



# “சில சிறிய முயற்சிகள் சில சமயங்களில் பெரிய மாற்றங்களை உருவாக்குகின்றன”

சிறிய முயற்சிகள் இந்தியாவின் உருமாறும் பயணத்தை வழிநடத்துகின்றன- கோவிட்டுக்கு எதிரான போராட்டத்தில், ஒட்டுமொத்த இந்தியாவின் உறுதிப்பாடு; உள்ளூர் தயாரிப்புகள் மீது தொடர்ந்து அதிகரித்து வரும் பற்று; தூய்மை என்பதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுதல்; நதிகளைப் புதுப்பிக்கும் முயற்சிகள்; இதுவரை வெளிச்சத்திற்கு வராத வீரர்களின் பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்தி, குடிமக்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் இந்தியா ஒரு பெரும் பாய்ச்சலுக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த விஷயங்கள் குறித்து, பிரதமர் நரேந்திர மோடி தனது ‘மன் கி பாத்‘ நிகழ்ச்சியில் குடிமக்களுடன் உரையாடினார்.

- **உரையின் சில சிறப்பம்சங்கள்:** தூய்மை என்பதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுதல்: தூய்மை என்பது மரியாதைக்குரிய காந்தியடிகளுக்கு செலுத்தும் ஒரு பெரிய அஞ்சலி. பல்லாண்டுகளுக்குப் பிறகு, இன்று, தூய்மை இயக்கம், புதிய இந்தியா உருவாக வேண்டும் என்ற கனவுடன் நாட்டை இணைத்துள்ளது . தூய்மை என்பது இயற்கையை ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு மாற்றுவதற்கான பொறுப்பாகும். மேலும் தூய்மைக்கான இயக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் போது, இந்தப் பண்பு சமூகத்தில் ஊடுருவி நிற்கும்.
- **பொருளாதார தூய்மை:** பொருளாதார தூய்மைக்கு தொழில்நுட்பம் பெரிதும் உதவும் என்பது உண்மை. கிராமங்களில் கூட, சாமானிய மக்கள், ஃபின்-டெக் யுபிஐ மூலம் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் திசையில் இணைக்கப்படுவது நமக்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும். அது நன்கு பரவி, அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஜன்தன் கணக்குகள் தொடர்பாக நாடு தொடங்கிய இயக்கம் பற்றி நீங்கள் அறிவீர்கள், இதன் காரணமாக ஏழை மக்களுக்குரிய பணம் நேரடியாக அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. கழிவறைகளைக் கட்டுவது ஏழை மக்களின் கௌரவத்தை உயர்த்தியது, அதேபோல், பொருளாதார தூய்மை ஏழை மக்களின் உரிமைகளை உறுதி செய்கிறது. அவர்களின் வாழ்க்கையை எளிதாக்குகிறது.
- **தீன் தயாள் உபாத்யாயா அவர்களின் பொருளாதார தொலைநோக்குப் பார்வை:** தீன் தயாள் அவர்கள், சென்ற நூற்றாண்டின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். அவரது பொருளாதார தத்துவம், சமூகத்திற்கு அதிகாரம் வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்ட அவரது கொள்கைகள், அவர் காட்டிய அந்தியோதயா பாதை ஆகியவை, தற்போதைய சூழலிலும் பொருத்தமானவை. உத்வேகம் அளிப்பவை.
- தீன் தயாள் அவர்களின் வாழ்க்கையிலிருந்து, நாம் “இனி இது முடியாது என்று எதையும், ஒருபோதும் கைவிட்டு விடக் கூடாது” என்ற ஒரு பாடத்தையும் கற்றுக் கொள்கிறோம். பாதகமான அரசியல், கருத்தியல் சூழ்நிலைகள் இருந்தபோதிலும், இந்தியாவின் வளர்ச்சிக்கான ஒரு சுதேசி, உள்நாட்டு மாதிரியின் பார்வையிலிருந்து அவர் ஒருபோதும் பின்வாங்கவில்லை.
- **உள்ளூர் என்று குரல் கொடுப்போம்:** விடுதலையடைந்து 75 வது ஆண்டில், விடுதலை பவள விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயத்தில், விடுதலைப் போராட்டத்தின் போது காதிக்குக் கிடைத்த பெருமைக்குரிய அதே இடத்தை இன்று நமது இளம் தலைமுறையினர் காதிக்கு அளித்து வருகிறார்கள் என்று இன்று நாம் திருப்தியுடன் கூறலாம். இப்போது தீபாவளி பண்டிகை வந்துவிட்டது. விழாக் காலத்திற்கு, நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளும் காதி, கைத்தறி, குடிசைத் தொழில் பொருட்களாக வாங்குவதன் மூலம் ‘உள்ளூர் என்பதற்கு உரக்கக் குரல் கொடுப்போம்‘ என்ற பிரச்சாரத்தை வலுப்படுத்த வேண்டும். அது, அனைத்து பழைய சாதனைகளையும் முறியடிக்கும் வண்ணம் அமைய வேண்டும்.
- **இதுவரை அறியப்படாத ஹீரோக்களுடன் இளைஞர்கள் கொள்ளும் தொடர்பு:** விடுதலையின் பவளவிழா காலகட்டத்தில், இந்திய விடுதலை வரலாற்றின் சொல்லப்படாத கதைகளை அனைவரிடையேயும் பரப்புவதற்கான இயக்கமும் நடந்து வருகிறது. இதற்காக, வளர்ந்து வரும் எழுத்தாளர்கள், நாட்டின் இளைஞர்கள் மற்றும் உலகத்தினர் அனைவரும் அழைக்கப்பட்டனர். இதற்காக, இதுவரை 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் 14 வெவ்வேறு மொழிகளில் பதிவு செய்துள்ளனர். ஏறத்தாழ 5000 க்கும் மேற்பட்ட வளரும் எழுத்தாளர்கள் விடுதலைப் போராட்டக் கதைகளைத் தேடி வருகிறார்கள்.
- **ஆறுகளை மீட்டெடுத்தல்:** இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும், ஆண்டுக்கு ஒரு முறையாவது நதி விழாவொன்று கொண்டாடப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்மைப் பொறுத்தவரை, ஆறுகள் வெறும் இயற்கைக் கூறுகள் மட்டுமல்ல; நமக்கு, ஒரு நதி ஒரு வாழும் அலகு. பருவமழைக் காலத்தின் போது நீர் சேகரிக்க வேண்டும் என்பதற்காக “மழைத்துளிகளைப் பிடியுங்கள்” ‘கேட்ச் தி ரெய்ன்‘ திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்பு வறண்டு விட்ட நாகநதி, உள்ளூர் பெண்களின் பங்களிப்புடன் புத்துயிர் பெற்றுள்ளது.
- **பரிசுகளின் மின்-ஏலம்:** இப்போதெல்லாம், ஒரு சிறப்பு மின்-ஏலம் நடைபெறுகிறது. இந்த மின்னணு ஏலம், அவ்வப்போது மக்களால் எனக்கு வழங்கப்பட்ட பரிசுகள் தொடர்பானது.
- இந்த மின்-ஏலத்தின் மூலம் கிடைக்கும் பணம் “நமாமி கங்கே” இயக்கத்திற்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- **மாற்றுத்திறனாளிகளின் உயர்ந்த உணர்வுகள்:** நமது மாற்றுத் திறனாளிகளின் “எங்களால் முடியும்” என்ற கலாச்சாரம், “எங்களால் முடியும்”என்ற உறுதிப்பாடு “ எங்களால் செய்ய முடியும்” என்ற மனப்பான்மை ஆகியவை ஊக்கமளிக்கின்றன.
- சில நாட்களுக்கு முன்பு, சியாச்சினின் இந்த அணுக முடியாத பகுதியில் 8 மாற்றுத்திறனாளிகள் கொண்ட குழு படைத்த சாதனை நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் பெருமை அளிக்கிறது. இந்திய இராணுவத்தின் சிறப்புப் படைகளின் முயற்சியால் இந்த நடவடிக்கை வெற்றி பெற்றது.

இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்து பிரதமரின் மனதின் குரல் முழு உரையை கேட்கலாம்

# நியூ இந்தியா சமாச்சார்

» தொகுதி 2 இதழ் 8 » அக்டோபர் 16-31, 2021



**Editor**
**Jaideep Bhatnagar,**
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**Consulting Editor**
**Santosh Kumar**

**Team**
Vibhor Sharma
Chandan Kumar Choudhary,
Sumit Kumar (English)
Anil Patel (Gujarati), Nadeem Ahmed (Urdu), Sonit Kumar Goswami (Assamese),
Vinaya P.S. (Malayalam),
Paulami Rakshit (Bengali)

**Design Team**
Shyam Shankar Tiwari
Ravindra Kumar Sharma
Divya Talwar
Abhay Gupta



**Published & Printed by**
Satyendra Prakash,
Principal Director General, BOC
on behalf of Bureau of
Outreach and Communication

**Printed at**
Infinity Advertising Services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border, NH-1,
Faridabad-121003



**Communication Address & E-mail:**

Room No–278, Bureau of
Outreach and Communication,
2nd Floor, Soochna Bhawan,
New Delhi -110003

response-nis@pib.gov.in



RNI No. : DELTAM/2020/78809


## உள்பக்கங்களில்...


### 'தடுப்பூசி சேவை' இந்தியாவின் பாதுகாப்பு கேடயம்:



**அட்டைப்பக்க கட்டுரை**

இந்தியா, கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது, இது மிகப்பெருமளவிலான தடுப்பூசி திட்டங்களில் ஒன்றைக் கொண்டு வருவதில் மிகச் சாதுரியமான திட்டமிடல் மற்றும் தொலைநோக்குப் பார்வைக்காக உலக அளவில் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. பக்கம் 10-21

### இந்தியாவை ஒன்றிணைத்த இரும்பு மனிதர் சர்தார் படேல்

சர்தார் படேல், தமது இரும்பு போன்ற உறுதிப்பாடுடன் இன்றைய இந்தியாவின் அடித்தளத்தை அமைத்தது மட்டுமல்லாமல், வலிமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் எதிர்காலத்திற்கான வழியையும் காண்பித்தார்.




### உதான்



உதான் திட்டம், சாமானிய மக்களும் விமானப் பயணம் மேற்கொள்வதை எளிதாக்கியுள்ளது

பக்கம் 38-40

செய்திச் சுருக்கம் பக்கம் 04-05

புதிய பாதுகாப்பு அலுவலக வளாகம்
சுய-சார்பு நோக்கி நடைபோடும் வலுவான இராணுவம் பக்கம் 08-09

நேர்முகம்
மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா பக்கம் 22-25

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம்
இந்தியாவின் புதிய சுகாதார மாதிரி பக்கம் 26-27

அமைச்சரவை முடிவுகள்
இப்போது ஆட்டோமொபைல்-ட்ரோன் தொழில்துறை உற்பத்திக்கு 'ஊக்கம்' அளிக்கப்படும் பக்கம் 28

பிரதமரின் அமெரிக்க சுற்றுப் பயணம்
உலகின் முன்னேற்றம், இந்தியாவின் முன்னேற்றத்தில் உள்ளது பக்கம் 29-32

வேளாண்மை
முன்னேற்றத்திற்கு அறிவியல் பயன்பாடு பக்கம் 36-37



**தேசிய நலனை மட்டுமே முதன்மையாகக் கொண்டிருந்தவர்கள்**
எந்தவிதமான பாகுபாடுமின்றி, எந்தவொரு மதம், இனம் அல்லது பிரிவினருக்கும் முன்னுரிமை கொடுக்காமல், தேசிய நலனை மட்டுமே முதன்மையாகக் கொண்டிருந்த மாவீரர்கள் பற்றிய சிறப்பு கட்டுரைகள். பக்கம் 41-45

# ஆசிரியர் மேசையிலிருந்து...

**வணக்கம் வாசகர்களே,**

உறுதியாக நட..

அனைத்து இன்னல்களையும் எதிர்கொண்டு,

இருளை அகற்றுவதற்காக

உறுதியுடன் நட....

ஏனென்றால்

இப்போது

சூரியன் உதித்து விட்டது...

பிரதமர் நரேந்திர மோடியின் கவிதை உள்ளத்திலிருந்து வரும் இந்தச் சொற்கள் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை எடுத்துக் கூறுகிறது. வளர்ச்சிக்கான புதிய அளவுகோலை உருவாக்குகிறது.

கோவிட் நாட்டைத் தாக்கியபோது, இந்தியாவின் மிகப்பெருமளவிலான மக்கள்தொகை காரணமாக, இந்தியா இந்த நெருக்கடியைக் கடக்கும் திறன் கொண்டுள்ளதா என்பது குறித்து உலகம் ஐயப்பாட்டுடனிருந்தது. ஆனால் மத்திய அரசு இந்த மக்கள்தொகையை மதிப்புமிக்க மனித வளமாக மாற்றியுள்ளது, இந்தியா கோவிட் பெருந்தொற்றுநோயை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடியது மட்டுமல்லாமல், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் விரைவான வளர்ச்சியை உறுதி செய்தது. இப்போது, இந்தியா கோவிட் தடுப்பூசி செலுத்துவதில் புதிய சாதனைகளை ஏற்படுத்தி வருகிறது. செப்டம்பர் 17 அன்று, நாடு ஒரே நாளில் 2.5 கோடி கோவிட் தடுப்பு மருந்து செலுத்தி புதிய சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியா 100 கோடி டோஸ் கொரோனா தடுப்பு மருந்து செலுத்துவதை நெருங்கியுள்ளது. அதே நேரம், அது தகுதியுள்ள மக்கள் அனைவருக்கும் அதாவது 100% தடுப்பூசி போடும் பணியை முடிக்கும் நோக்கத்துடன் விரைவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், இது போன்று விரைவாக தடுப்பூசி செலுத்துவதற்கான மைல்கல்லை அடைவதற்கான பாதை எளிதாக இருக்கவில்லை. உள்நாட்டிலேயே இரண்டு தடுப்பூசிகளை உருவாக்கி, பின்னர் தடுப்பூசி செலுத்தும் தீவிரமானதொரு இயக்கத்தின் மூலம் குடிமக்களைச் சென்றடைவது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இத்தகைய மிகப்பெரிய அளவிலான தடுப்பு மருந்து செலுத்தும் இயக்கம் வரலாற்றில் இதுவரை காணப்படாததாகும். 2014 முதல் சுகாதாரத் துறையை சீரமைப்பதற்கான அரசின் அயராத முயற்சிகள் காரணமாக, இந்திய விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவ அமைப்பு, உலகளாவிய நம்பகத்தன்மையைப் பெற்றுள்ளது. நாட்டின் தலைமையும், நாட்டு மக்களும் தங்களை நம்பும்போது மட்டுமே இத்தகைய லட்சியங்கள் நிறைவேறும்.

கோவிட் பெருந்தொற்று காலத்தின் போது உயிர்களைக் காப்பாற்றுவதிலும், குடிமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதிலும் அரசாங்கம் வெற்றியடைந்துள்ளது.

தொடர்ந்து துரிதகதியில் நடைபெற்று வரும் இந்தியாவின் அற்புதமான தடுப்பூசி பயணம் குறித்து விளக்குகிறது, இந்த இதழின் அட்டைப்படக் கட்டுரை. சுகாதாரத் துறைக்கு உத்வேகம் அளிக்கும் அமைச்சரவை முடிவு மற்றும் மத்திய சுகாதார அமைச்சரின் நேர்காணல் ஆகியவை இந்தப் பதிப்பின் மற்ற சிறப்பம்சங்கள்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளை நாடு நினைவு கூர்கிறது. தேசத்தை ஒன்றிணைத்த இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் பற்றிய கட்டுரை; இந்தியாவின் உயரும் சர்வதேச அந்தஸ்து; கோவிட் பெருந்தொற்றுநோய் காலத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய உரை குறித்த கட்டுரை ஆகியவை இந்த இதழின் பிற முக்கிய அம்சங்கள். மேலும், சாமானிய மக்களும் விமானப் பயணம் மேற்கொள்ள வகை செய்த் உடான் திட்டம் குறித்தும், நாடாளுமன்ற ஜனநாயகம் குறித்த நம்பகமான தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட சன்சாத் டிவி பற்றியும் அறிந்து கொள்ளலாம். விடுதலை பவளவிழா கொண்டாட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ள, மதிப்பிற்குரிய விடுதலைப் போராட்ட வீரர்களான ஜதீந்திர நாத் தாஸ், அஷ்ஃபாகுல்லா கான், கித்தூர் ராணி சென்னம்மா, நிர்மலா தேஷ்பாண்டே, சகோதரி நிவேதிதா, ஆச்சார்ய நரேந்திர தேவ், ஸ்ரீ கிருஷ்ணா சிங் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, வாசகர்களை உத்வேகம் கொள்ளச் செய்யும்.

திருவிழாக் காலங்களில் கோவிட் நெறிமுறையில் சிறப்பு கவனம் கொள்ளுங்கள். உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு எழுதுங்கள்.

Address : Room No–278, Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003
e-mail : response-nis@pib.gov.in

(ஜெய்தீப் பட்நாகர்)

# அஞ்சல் பெட்டி




மின்னஞ்சலில் எனக்கு நியூ இந்தியா சமாச்சார் கிடைக்கும் போதெல்லாம், என் முகத்தில் ஒரு புன்னகை அரும்புகிறது. இந்த இதழ் நிறைய தகவல்கள் அளிப்பதாகவும் உந்துதல் ஊட்டுவதாகவும் உள்ளது. இது என்னை என் நாட்டுடன் இணைந்திருக்கவும், அரசு எடுத்து வரும் புதிய முயற்சிகள் குறித்து உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் உதவுகிறது. நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களுள், அதிகம் அறியப்படாத வீரர்கள் பற்றிய கட்டுரைகள் உத்வேகம் அளிக்கின்றன.
இந்தச் சிறந்த இதழை வாசிப்பது, உண்மையில் பெரும் மகிழ்ச்சியையளிக்கிறது.

**சிகி சஞ்சீத் குமார்**
casanjeetkumar@gmail.com

நியூ இந்தியா சமாச்சார், வாசகர்களுக்கு மிகச் சிறந்த தகவல்கள் வழங்குகிற, உத்வேகம் அளிக்கின்ற, ஆக்கபூர்வமான யோசனைகளை வழங்குகின்ற ஒரு சிறந்த ஊடகம். வசதியான, எளிதில் கிடைக்கக்கூடிய இந்த தகவல் நிறைந்த இதழின் தொடர் வாசகனாக இருக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அறிவும், உத்வேகமும் மிக்க வாசகர்களும் ஊடாடும் வகையிலான இவ்விதழை வெளியிட்ட குழுவுக்கும் நம் மாண்புமிகு பிரதமருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

**பார்த் வாசன்**
paarth26wassan@gmail.com

நான் நியூ இந்தியா சமாச்சார் இதழைத் தொடர்ந்து வாசித்து வருபவன். வாசகர்களுக்கு தகவல் அளிப்பதாகவும், பயனுள்ள, சுவாரஸ்யமான கட்டுரைகளைத் தாங்கி வருவதாகவும் உள்ள இந்த இதழுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நாட்டில், சாதாரண மக்கள், அன்றாட வாழ்வில், எதிர்கொள்ளும் சிரமங்களுக்கும், சவால்களுக்கும் அரசு சரியான நேரத்தில் தீர்வு கண்டு, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் இந்த இதழ் அவற்றையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

**சவுத்ரி சக்தி சிங்**
shaktisinghadv@gmail.com

நான் நியூ இந்தியா சமாச்சார் இதழை அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து படித்துக் கொண்டிருக்கிறேன். தகவல் தொடர்பான விஷயங்களில், இந்த இதழ் என்னை ஒரு போதும் கைவிட்டதில்லை. இந்த இதழுக்குப் பின்னால் உள்ள அனைவருக்கும் மிக்க நன்றி.

**அஜய் மஜூம்தர்**
ajaymajumder675@gmail.com

நான் யுபிஎஸ்சி தேர்வு, மாநில பொதுத்தேர்வு போன்ற தேர்வுகள் மற்றும் பிற துணை நிலைத் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்து வருகிறேன். எனவே, அடிப்படையில், இந்த இதழ், பொதுத்தேர்வு எழுத மிக உதவிகரமாக உள்ளது. எனவே, நீங்கள் இந்த இதழின் அச்சுப் பிரதியை எனக்கு அனுப்ப முடியுமா?

**நசீர் கான்**
nazir@ddn.amarujala.com

## உங்களது ஆலோசனைகளை அனுப்புங்கள்

**தொடர்பு முகவரி மற்றும் மின்அஞ்சல்**

*அறை எண் 278, களவிளம்பரம் மற்றும் தொடர்புப் பிரிவு, இரண்டாவது மாடி, சூச்னா பவன், புதுதில்லி - 110003*

response-nis@pib.gov.in



# இந்தியாவின் மிக நீண்ட டெல்லி மும்பை விரைவுவழிப்பாதை மார்ச் 2023 க்குள் தயாராகி விடும்

புதிய இந்தியா, பொருளாதார முன்னேற்றம், புதுமையான சிந்தனை, இளைஞர்களின் கனவுகள் ஆகியவற்றுக்கு சிறகுகளை வழங்குவது மட்டுமல்லாமல், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்குதல் என்பதிலும் மிகப் பெருமளவில் உள்ளது. ₹ 98,000 கோடி செலவில் கட்டப்பட்டு வரும், 1380 கிமீ நீளமுள்ள டெல்லி-மும்பை விரைவுச்சாலை, நாட்டின் மிக நீண்ட சாலையாக இருக்கும். பாரத்மாலா திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக இந்த விரைவுச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா ஆகிய ஆறு மாநிலங்கள் வழியாகச் செல்லும் இந்த விரைவுவழிப்பாதை டெல்லி மற்றும் மும்பை இடையே உள்ள தூரத்தை 130 கிமீ குறைக்கும். விரைவுவழிப்பாதையின் இருபுறமும் தொழில்துறை நடைபாதையை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது புதிய வேலைவாய்ப்பு உருவாவதற்கான வழியைத் திறக்கும். விரைவுவழிப்பாதை பணிகள் நிறைவடைந்த பிறகு, எரிபொருள் நுகர்வு 320 மில்லியன் லிட்டர் அளவிற்குக் குறையும். சிஎி உமிழ்வு 850 மில்லியன் கிலோகிராம் அளவிற்குக் குறையும், இது 40 மில்லியன் மரங்களை நடுவதற்கு சமம். இது சுற்றுச்சூழலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நெடுஞ்சாலையில் ஒவ்வொரு 500 மீட்டருக்கும் ஒரு மழை நீர் சேகரிப்பு அமைப்பு இருக்கும். விரைவுவழிப் பாதையின் இருபுறமும் 40 லட்சம் மரங்களை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் உள்ள வனவிலங்கு சரணாலயங்களில் உள்ள விலங்குகளுக்கான தனிப்பாதைகள் கொண்ட முதல் கட்டமைப்பு இதுவாகும். விலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஐந்து கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

**டெல்லி-மும்பை விரைவுவழிப்பாதையின் காலவரிசை**

| 214 | 100 | 250 |
|---|---|---|
| டெல்லியில் இருந்து தௌசா (மார்ச் 2022) கிமீ | வதோதரா முதல் அன்கலேஷ்வர் (மார்ச், 2022) | கோட்டா முதல் ரத்லம் வரை (நவம்பர், 2022) |

விரைவுவழிப்பாதையின் மீதமுள்ள பணிகள் மார்ச் 2023 க்குள் முடிக்கப்படும்

# கொரோனா காலத்தில் பணிகள் குறித்து நல்ல செய்திகள்: ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு இபிஎஃப்ஓ ஜூலையில் 14.65 லட்சம் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டது

மத்திய அரசின் கொள்கைகள் காரணமாக, நாட்டில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. ஜூலை மாதத்தில் ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு இபிஎஃப் ஓவில் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை சாதனையளவாக அதிகரித்துள்ளது. இபிஎஃப்ஓ கூற்றுப்படி, ஜூலை மாதத்தில் 14.65 லட்சம் புதிய உறுப்பினர்கள் இபிஎஃப் இல் சேர்ந்துள்ளனர். கடந்த நான்கு மாதங்களில் நிகர ஊதியத்தில் காணப்படும் அதிகரிப்பும், வேலைவாய்ப்பின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. நிகர சந்தாதாரர்களின் எண்ணிக்கை ஜூன் 2021 உடன் ஒப்பிடுகையில் ஜூலை 2021 இல் 31.28 சதவீதம் அளவிற்கு அதிகரித்துள்ளது. மொத்தம் 11.16 லட்சம் உறுப்பினர்கள் ஜூன் மாதம் சேர்க்கப்பட்டனர். ஜூலை மாதத்தில் மொத்தமுள்ள 14.65 லட்சம் உறுப்பினர்களில்,




சுமார் 9.02 லட்சம் புதிய உறுப்பினர்கள் முதல் முறையாக, இபிஎஃப் ஓவின் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். சுமார் 5.63 லட்சம் நிகர சந்தாதாரர்கள் வெளியேறினர். ஆனால் பணிகளை மாற்றியதால் ஓய்வூதிய நிதியமைப்பின் கீழான அந்தந்த அமைப்புகளுக்குட்பட்டு மீண்டும் இபிஎஃப்ஓவில் இணைந்தனர். இபிஎஃப்ஓ தரவுகளின்படி ஜூலை 2021 இல், முதல் முறையாக இபி எஃப்ஓ வில் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 6 சதவீதம் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கிறது.

## உலகளாவிய புதியகண்டுபிடிப்பு குறியீட்டில் இந்தியா மிகப்பெரிய உயரத்தை எட்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் தரவரிசையில் 81 ஆவது இடத்தில் இருந்தது, 2021 இல் 46 வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியாவில் புதிதாக நிறுவனங்களைத் தொடங்குவதும், புதுமை கலாச்சாரமும் பெருகி வருகிறது. இது முன்னெப்போதுமிராத கோவிட் பெருந்தொற்றுநோயின் நெருக்கடிக்கிடையிலும், நாடு சுய சார்பு எய்துவதை நோக்கி நகர்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மிகப் பெரும் முன்னேற்றமாக, இந்தியா 2021ஆம் ஆண்டிற்கான சமீபத்திய உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில் (ஜி ஐ ஐ) தரவரிசையில் அதன் இடத்தை மேம்படுத்தி, இரண்டு இடங்கள் முன்னேறி 46 ஆம் இடத்தில் உள்ளது. தரவரிசைப் பட்டியலில் 2015 ஆம் ஆண்டில் 81 ஆம் இடத்திலிருந்து கணிசமாக முன்னேறியுள்ளது. இந்த தரவரிசைப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக அறிவுசார் சொத்து அமைப்பால் (டபிள்யூ ஐ பி ஓ WIPO) வெளியிடப்படுகிறது. அரசியல் சூழல், கல்வி உள்கட்டமைப்பு மற்றும் வணிக நவீனத்துவம் போன்ற 80 குறியீடுகளின் அடிப்படையில் இது தயாரிக்கப்படுகிறது. “இந்தியாவின் இந்த தரவரிசை, அரசு, தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள், ஒரு நல்ல ஸ்டார்ட் அப் சுற்றுச்சூழல் அமைப்பு ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த பணிகளுக்கு ஒரு சான்றாகும். அணுசக்தி துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, உயிரி தொழில்நுட்பத் துறை, விண்வெளித் துறை போன்ற அறிவியல் துறைகள் இந்தியாவின் புதிய கண்டுபிடிப்பு சூழல் அமைப்பை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன,” என்று டபிள்யூ ஐ பி ஓ தெரிவித்துள்ளது.




### தூய்மையான சூழலை நோக்கிய புதுமையான முயற்சிகள் - நாட்டின் முதல் ஆன்டி-ஸ்மாக் டவர் -புகை கட்டுப்பாட்டுக் கோபுரம் - டெல்லியில்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு கவலைக்குரிய விஷயம் மட்டுமல்ல, ஒரு முக்கியமான தேவையாகிவிட்டது. இந்தத் திசையில் முன்னேறி, தேசிய தலைநகர் டெல்லியில் மற்றொரு புதிய ஆரம்பம் ஏற்பட்டுள்ளது. குளிர்காலத்தில் இங்கு ஏற்படும் மாசு பிரச்னையைக் கருத்தில் கொண்டு, நாட்டின் மிகப்பெரிய மற்றும் முதல் செயல்பாட்டு புகை கோபுரம் ஆனந்த் விஹார் பகுதியில் செயல்படத் தொடங்கியுள்ளது.



சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றுக்கான அமைச்சர் பூபேந்திர யாதவ் இந்த கோபுரத்தை செப்டம்பர் 7 ஆம் தேதி தொடங்கி வைத்தார். கோபுரத்தில் பயன்படுத்தப்படும் வடிகட்டுதல் அமைப்பு மினசோட்டா பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. 1000 எம் 3/வினாடிக்கு காற்றோட்ட விகிதத்தை வழங்க 40 விசிறி யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. இது தவிர, தேசிய தூய காற்று திட்டத்தின் (என்சிஏபி ) கீழ் குறிப்பிட்ட காற்று மாசு கட்டுப்பாடு அடையாத நகரங்களில் காற்று மாசுபாட்டை ஒழுங்குபடுத்துவதற்காக ‘பிராணா‘ என்ற போர்ட்டலும் தொடங்கப்பட்டுள்ளது.

### கடந்த 75 வருடங்களில், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறையில் சிறப்பான பங்காற்றியுள்ள விஞ்ஞானிகளை அரசு கௌரவிக்கும்.

இன்று, குடிமக்களுக்கு அதிகாரம் வழங்குவதில், மின் ஆளுமை, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் ஆகியவை முக்கிய பங்காற்றி வருகின்றன. நமது விஞ்ஞானிகளும், தகவல் தொழில் நுட்ப வல்லுநர்களும் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் துறைகளில் இந்தியாவின் பெயரை முன்னிறுத்தியுள்ளனர். ஆனால் இந்த அங்கீகாரம் சில ஆண்டுகளில் மட்டுமே கிடைத்து விடவில்லை; இந்த அங்கீகாரத்தின் பின்னணியில் நமது தொழில் நுட்ப சாம்பியன்களான விஞ்ஞானிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப வல்லுநர்களின் சிறப்பான எண்ணங்களும், தொலை நோக்குப் பார்வையும் உள்ளன. விடுதலை பவள விழா கொண்டாட்டங்களில், மத்திய அரசு இத்தகைய திறமைகளை முதன்முறையாக கௌரவிக்கப் போகிறது. இவ்வாறு கௌரவிப்பதற்காக, கடந்த 75 ஆண்டுகளில் இந்தத் துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த விஞ்ஞானிகளைப் பரிந்துரைக்கலாம் என்று மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது. நாடு முழுவதும் இருந்து மக்கள் இணையத்தில் பரிந்துரைகளை சமர்ப்பிக்கலாம். இதற்கான போர்டல் www.innovateindia.mygov.in. இவ்வாறு பரிந்துரைகளைத் தாக்கல் செய்தல், செப்டம்பர் 15 முதல் தொடங்கியது. இறுதி நாள் நவம்பர் 7 ஆகும். ■



# சர்தார் வல்லபாய் படேல்:
## இந்தியாவை ஒருங்கிணைத்த இரும்பு மனிதர்

**பிறப்பு:அக்டோபர் 31, 1875 | இறப்பு: டிசம்பர் 15, 1950**

*இன்று நாம் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக கூட்ச் முதல் கொஹிமா வரை, காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை பயணம் செய்யலாம்: இது சர்தார் வல்லபாய் படேலால்தான், அவரது உறுதிப்பாட்டால்தான் சாத்தியமானது. ஒரு நிமிடம் இவ்வாறு நினைத்துப் பாருங்கள். சர்தார் படேல் இந்தப் பணியை செய்யாமல் இருந்திருந்தால், நாம் கிர் காட்டின் சிங்கங்களைப் பார்க்க, அல்லது ஹைதராபத்தின் சார்மினாரைப் பார்க்க அல்லது சோம்நாத் பூஜையில் கலந்து கொள்ள, சிவனின் பக்தர்கள் அல்லது பிற பொதுமக்கள் விசா பெற வேண்டியதாக இருந்திருக்கும். சர்தார் வல்லபாய் படேலின் உறுதிப்பாடு அப்போது இல்லாமல் இருந்திருந்தால், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நேரடி ரெயில் பயணத்தை ஒருவர் கற்பனைகூட செய்து பார்த்திருக்க முடியாது.*

1947ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்ற போது, இந்தியாவின் எதிர்காலம் குறித்து உலகத்திற்கு ஆக்கப்பூர்வமான நம்பிக்கை இருக்கவில்லை. பன்முகத் தன்மை காரணமாக இந்தியா சிதறுண்டு போகும் என்ற எதிர்பார்ப்புதான் இருந்தது. ஆனால் அவநம்பிக்கை நிலவிய அந்த காலகட்டத்தில் நாட்டின் நம்பிக்கை ஒளியாக அப்போது சர்தார் வல்லபாய் படேல் உருவானார். 526 சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததன் மூலம் அவர் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கான அஸ்திவாரத்தை எழுப்பினார். அதன் விளைவாகத்தான் இன்று "ஒரே இந்தியா உன்னத இந்தியா" என்பதன் பெருமிதத்தை நாம் பார்க்க முடிகிறது. சர்தார் படேல் தனது இரும்பு போன்ற உறுதிப்பாட்டுடன் இன்றைய இந்தியாவுக்கான அஸ்திவாரத்தை எழுப்பியதுடன், வலிமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய உணர்வுடன் எதிர்காலத்துக்கான வழியையும் சுட்டிக்காட்டினார். அதனால்தான் சர்தார் வல்லபாய் படேலை நவீன இந்தியாவின் சிற்பி என அழைப்பது சாலப் பொருத்தம் ஆகும்.

குஜராத் மாநிலத்தின் நதியாடில் உள்ள தாய்வழிப் பாட்டி வீட்டில் அக்டோபர் 31, 1875 அன்று சர்தார் வல்லபாய் படேல் பிறந்தார். கேதா மாவட்டத்தில் கர்ம்சாத்தில் வசித்து வந்த ஜாவர்பாய் படேல் மற்றும் லட்பா படேல் தம்பதியினருக்கு நான்காவது குழந்தையாக இவர் பிறந்தார். மிக இளம் வயதிலேயே அதாவது அவரின் 13வது வயதில் ஜாவர் பா என்ற பெண்ணை மணந்தார். படேல் தனது சட்டப் படிப்பை நிறைவு செய்த பிறகு மாவட்ட அட்டர்னி தேர்விலும் தேர்ச்சி பெற்றார். பிறகு அவர் வழக்கறிஞராக பணியாற்றினார். படேலின் 33வது வயதில் ஜாவர் பா படேல் புற்றுநோயால் இறந்து போனார். 1909ஆம் ஆண்டு மும்பையில் உள்ள மருத்துவமனையில் ஜாவர் பா அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்தில் சர்தார் ஒரு வழக்கு விஷயமாக ஓய்வின்றி தீவிரமாக ஈடுபட்டு இருந்தார் என்று சொல்லப்படுகிறது. நீதிமன்ற விசாரணைக்கு நடுவில், யாரோ ஒருவர் துண்டு சீட்டில் ஜாவர் பா இறந்தது குறித்து எழுதி அனுப்பி தகவல் தெரிவித்தார். சர்தார் அந்த துண்டுச் சீட்டை தனது பாக்கெட்டில் வைத்துக் கொண்டு அந்த வழக்கின் விசாரணையில் தனது வாதத்தை தொடர்ந்து மேற்கொண்டார். பின்னர் அந்த வழக்கில் அவர் வெற்றி பெற்றார். நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்த பிறகே அவர் மற்றவர்களுக்கு தனது மனைவியின் மரணம் குறித்து தெரிவித்தார். இந்த நிகழ்வுக்குப் பிறகு அவர் மேற்கொண்டு படிப்பதற்காக லண்டன் சென்றார்.

1913ல் இந்தியா திரும்பிய பிறகு அவர் வழக்கறிஞராக பணி புரிந்தார். விரைவிலேயே கோட்-சூட் மற்றும் தொப்பி அணிந்து ஆங்கிலம் பேசும் பணக்கார வழக்கறிஞர் என்ற தனது பிம்பத்தை தானே உடைத்து எறிந்தார். அதற்குப் பதிலாக, காந்தியின் அடியொற்றி காதித் துணிகளை அணிய ஆரம்பித்தார். 1918ல் ஏற்பட்ட இந்த மாற்றத்தைத் தொடர்ந்து வெகு விரைவில், படேல் பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபட்டார். கேதாவில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தோடு அவரின் பொதுசேவை தொடங்கியது. தங்களது பகுதிகளில் விளைச்சல் மோசமாக இருந்த காரணத்தால் வரிவிதிப்பை தள்ளிப்போட வேண்டும் என்று விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகளை பரிசீலிக்க பிரிட்டிஷ் நிர்வாகம் மறுத்து விட்டது. காந்திஜி விவசாயிகளின் போராட்டத்தை முன்னெடுக்குமாறு கூறியதோடு பிரச்சாரத்தை முன்னெடுக்கவும் படேலே நியமித்தார். வல்லபாய் படேல் சக போராளிகளோடு சேர்ந்து, மாநிலம் தழுவிய போராட்டத்துக்காக கிராம மக்களை ஒன்று திரட்டி அவர்களை வரி செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இறுதியாக, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு நிர்வாகம் செவிமடுத்தது. இதனால் கேதாவின் விவசாயிகளின் பார்வையில் படேல் கதாநாயகனாக

உருவெடுத்தார். வல்லபாய் படேல் பர்டோலி சத்தியாகிரகத்தை முன் நின்று நடத்தினார். இந்த சத்தியாகிரகம் 1928ல் தொடங்கப்பட்டது. இதுவும் வரிகொடா இயக்கமே ஆகும். இறுதியில் பிரிட்டிஷ் வைசிராய் பணிந்து போனார். பர்டோலி சத்தியாகிரகத்தின் காரணமாக, வல்லபாய் படேலின் பெயர் மிகப் பெரிய அளவில் பிரபல்யம் அடைந்தது. இந்த இயக்கத்தின் வெற்றிக்குப் பிறகு, பெண்கள் படேலுக்கு சர்தார் என்ற பட்டத்தை அளித்தனர். 1922, 1924 மற்றும் 1927 ஆகிய அண்டுகளில் அகமதாபாத் நகராட்சியின் தலைவராக படேல் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒத்துழையாமை இயக்கம், சுயராஜ்ஜிய இயக்கம், தண்டி யாத்திரை மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் சர்தார் படேல் முக்கிய பங்காற்றி உள்ளார். 1931ல் கராச்சியில் நடைபெற்ற மாநாட்டில் காங்கிரசின் தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று தேசபக்தர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட காலகட்டத்தில்தான் காங்கிரசின் தலைமையை ஏற்கும் நிலை படேலுக்கு ஏற்பட்டது. லாகூரில் சான்டர்ஸ் என்ற காவல்துறை அதிகாரியின் கொலைக்காக இந்த மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது.

சுதந்திரம் பெறுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பு காங்கிரசின் தலைவராகும் வாய்ப்பு படேலுக்கு மீண்டும் ஏற்பட்டது. ஆனால் காந்திஜியின் தலையீட்டால் படேல் பின்வாங்கி விட்டதாகவும் ஜவகர்லால் நேரு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு, சர்தார் படேல் இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் பதவி வகித்தார். பல்வேறு சமஸ்தானங்களாக நாடு சிதறுண்டு இருந்த சிரமமான காலகட்டமாக இது இருந்தது. இந்தியாவில் இருந்து பிரிந்து தனி நாடாக செயல்படலாம் என்ற கனவில் 562 சமஸ்தானங்கள் இருந்தன. இது சர்தார் படேலை கவலை கொள்ளச் செய்தது. ஒரு சமயம், படேல் ஒரிசாவின் 23 சமஸ்தான அரசர்களிடமும் கிணற்றுத் தவளைகள் போன்று இருக்காதீர்கள்; மாறாக கடலில் சந்திக்கக் கூடிய நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என படேல் கூறினார். சர்தார் படேலின் முயற்சிக்குப் பிறகு, ஒரிசாவின் மக்கள் சுதந்திரம் பெற்ற புதிய இந்தியாவின் அங்கமாக இருக்க விரும்பினர். ஒரிசாவின் அரசர்கள் தங்களது சமஸ்தானங்களை இந்தியாவுடன் ஒருங்கிணைக்க சம்மதித்தனர். ஒரிசாவுக்குப் பிறகு சர்தார் நாக்பூர் சென்றார். அந்தச் சமயத்தில் நாக்பூரின் சமஸ்தானங்கள் "சல்யூட் சமஸ்தானங்கள்" என்று அழைக்கப்பட்டு வந்தன. நாக்பூரின் 38 அரசர்களின் மனமும் மாற்றப்பட்டன. அவர்கள் ஒருங்கிணைந்த இந்தியாவின் ஒரு அங்கமாக மாறினர்.

இதற்குப் பிறகு சர்தார் படேல் கத்தியவாருக்குச் சென்றார். அங்கு அவர் 250 சமஸ்தான அரசர்களையும் சமாதானம் செய்து இந்தியாவுடன் இணையச் செய்தார். பின்னர் மும்பை, பஞ்சாப் மற்றும் பிற சமஸ்தானங்கள் சுதந்திர இந்தியாவுடன் ஒருங்கிணைந்தன. ஆனால் பஞ்சாபின் ஃபரித்கோட் அரசர் இந்தியாவுடன் இணைய மறுத்தார்.

சர்தார் வல்லபாய் படேலின் உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக அந்த அரசர் இந்தியாவுடன் இணைவதற்கு இறுதியில் அடிபணிந்தார். சர்தார் படேலின் இரும்பு போன்ற மன வலிமையால்தான் காஷ்மீர், ஹைதராபாத் மற்றும் ஜுனாகாத் சமஸ்தானங்கள் இந்தியாவோடு இணைந்தன. காஷ்மீர் மகாராஜா ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் போது, ஜுனாகாத் நவாப் பயத்தால் பாகிஸ்தானுக்குப் பறந்து விட்டார். ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்தியாவோடு இணைப்பதில் தான் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டது. ஏனெனில் நிஜாம் எந்தக் காரணத்துக்காகவும் இந்தியாவுடன் இணைய மறுத்து விட்டார். இறுதியாக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாகத்தான் ஹைதராபாத் இந்தியாவுடன் இணைந்தது. இந்தியாவின் ஒருமைப்பாடு என்பது சர்தார் படேலின் நிலையான உறுதியான நம்பிக்கையால்தான் சாத்தியமானது. அதனால்தான் காந்திஜி அவருக்கு "இரும்பு மனிதர்" என்ற பட்டத்தை வழங்கினார். சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய குடிமைப் பணி சேவையை மறுசீரமைப்பு செய்த பெருமையும் படேலுக்கே சேரும். டிசம்பர் 15, 1950 அன்று சர்தார் படேல் மண்ணுலகை நீத்து விண்ணுலகுக்குச் சென்றார். இதுவரை இல்லாத வழக்கமாக முதல் முறையாக மரபுகளை மீறி குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் முன்பைக்குச் சென்று அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினார். சர்தார் படேல் உருவாக்கிய ஒரே இந்தியா உன்னத இந்தியா என்ற பாதையை அடியொற்றியே சுயசார்பு இந்தியா பயணமும் மேற்கொள்ளப்படுகிறது. 2014ஆம் ஆண்டில் இருந்து அக்டோபர் 31ஆம் தேதி தேசிய ஒருமைப்பாடு தினமாக கொண்டாடப்படுகிறது. மிகவும் புகழ்பெற்ற தலைவர்களுள் ஒருவரான படேலுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இது கொண்டாடப்படுகிறது. இதுமட்டும் அல்லாமல், உலகிலேயே மிக உயரமான "ஒருமைப்பாட்டு சிலை" சர்தார் படேலுக்காக குஜராத்தின் கேவாடியாவில் நிறுவப்பட்டு 2018ல் திறந்து வைக்கப்பட்டது. ■

"கௌடில்யரின் ராஜதந்திரமும் மகாராஜா சிவாஜியின் தைரியமும் கலந்தவராக சர்தார் படேல் இருந்தார். உலகம் இந்தியாவின் பலவீனம் என்று எதை கருதி இருந்ததோ அதையே சர்தார் படேல் வலிமையாக மாற்றி நாட்டுக்கு வழிகாட்டினார். உலகம் ஒரு சமயம் இந்தியா குறித்து சந்தேகிக்கப்பட்ட அதே பாதையில் நடைபோட்டு இன்று இந்தியா தனது சொந்த வரையறைகள் மற்றும் நிலமைகளுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. இவை எல்லாம் சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த சர்தார் படேலின் மகத்தான பங்களிப்பால்தான் சாத்தியமானது.

-நரேந்திர மோடி, பிரதமர்





## இராணுவத்துக்குப் புதிய பாதுகாப்பு அலுவலக வளாகம்

# வலிமையான இராணுவம்- சுய-சார்பை நோக்கி முன்னேறுதல்

*எந்த ஒரு நாட்டின் தலைநகரமானாலும் அது அந்த நாட்டின் சிந்தனை, உறுதிப்பாடு, வலிமை மற்றும் கலாச்சாரத்திற்கான அடையாளமாகவே திகழ்கிறது. ஆனால் 100 ஆண்டுகளில் மக்கள் தொகை மற்றும் பிற நிலைமைகளில் மிகப் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு இருந்த சூழலிலும் இதற்கு முன்பு தலைநகரை சீரமைக்கும் முயற்சி ஏதும் எடுக்கப்படவே இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் போது குதிரைகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட லாயங்களில்தான் இராணுவ வீரர்கள் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தனர். அத்தகைய பின்புலத்தில், மத்திய அரசு தேசிய தலைநகரில் குடிமக்களுக்கு உகந்ததான சென்ட்ரல் விஸ்டா செயல்திட்டத்தை முன்னெடுத்தது. இதன் ஒரு பகுதியாக, நாட்டின் இராணுவ வீரர்களுக்கு புதிய மற்றும் நவீன பாதுகாப்பு அலுவலக வளாகம் உருவாக்கப்பட்டு உள்ளது. முன்பு பயன்படுத்தப்பட்ட நிலத்தைவிட ஐந்து மடங்கு குறைவான நிலப்பரப்பிலேயே இந்த அலுவலகம் கட்டப்பட்டு உள்ளது.*

**பிரிட்டிஷ் ஆட்சியின் போது 7,000 இராணுவ வீரர்கள் குதிரைகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட லாயங்கள் மற்றும் நெரிசலான படைவீடுகளில் பணி புரிய நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தனர். சுதந்திரத்திற்குப் பிறகும் நீண்ட காலத்திற்கு அவர்கள் அந்த இடத்திலேயே தொடர்ந்து பணிபுரியும் நிலை இருந்தது என்பது நாட்டின் அவலத்துக்குரிய விஷயம் ஆகும். இந்திய இராணுவத்தின் முப்படைச் சேவைகளின் அலுவலகங்களாக மாற்றப்பட்டு இருந்த இந்த லாயங்களில் அவ்வப்போது பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இப்போது மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதிலும் சிறந்தவற்றுக்கான மாற்றங்கள் நிகழ்கின்றன. சென்ட்ரல் விஸ்டா திட்டம் தேசிய தலைநகரத்தை உருமாற்றம் செய்து வருகிறது. புதிய நாடாளுமன்ற கட்டிடம் மற்றும் ராஜபாதையின் இரண்டு பக்கங்களிலும் உள்ள கம்பீரமான நிலக்காட்சி தலைநகரத்திற்கு அழகு சேர்ப்பதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக செப்டம்பர் 16 அன்று பிரதமர் நரேந்திர மோடி அதிநவீன பாதுகாப்பு அலுவலக வளாகத்தை தொடங்கி வைத்தார். அப்போது பிரதமர் "கொள்கையும் நோக்கமும் தெளிவாக இருந்தால் மன உறுதி வலிமையாக இருந்தால் மற்றும் முயற்சிகள் உண்மையானதாக இருந்தால் எதுவும் சாத்தியம் ஆகும்" என்று கூறினார்.**

> “இந்தியாவின் தலைநகரமாக தில்லி மாற்றப்பட்டு 100 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. இந்த 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலகட்டத்தில் மக்கள் தொகை மற்றும் இதர நிலைமைகளில் மிகப் பெரும் சமச்சீரின்மை இருந்தது. தலைநகரம் என்று நாம் பேசும் போது, அது வெறும் ஒரு நகரம் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. தலைநகரம் என்பது அந்த நாட்டின் சிந்தனை, உறுதிப்பாடு, வலிமை மற்றும் கலாச்சாரத்தின் ஒரு அடையாளம் ஆகும். இந்தியா குடியரசின் தாயாகும். எனவே இந்தியாவின் தலைநகரம் என்பது மையத்தில் தனது மக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்
>
> -நரேந்திர மோடி, பிரதமர்







மத்தியல் உள்ள தற்போதைய அரசாங்கம் 21ஆம் நூற்றாண்டு இந்தியாவுக்கான இராணுவ வலிமையை ஒவ்வொரு அம்சத்திலும் நவீனப்படுத்துவதில் ஈடுபட்டு வருகிறது. நவீன போர்க் கருவிகளுடன் பாதுகாப்பு படைகளை வலுப்படுத்துதல், எல்லைப்புற உள்கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துதல், பாதுகாப்பு முப்படைகளின் தலைவர் மூலமாக சிறப்பான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த நவீனப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகையச் சூழலில் நாட்டின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் தொடர்பான பணியை பல்லாண்டுகள் பழமையான லாயங்களில் இருந்து செய்ய முடியாது. நாட்டின் பாதுகாப்புக்காக ஒரு நாளின் 24 மணி நேரமும் பாடுபடுகின்ற நமது வீரர்களுக்காக புதிய பாதுகாப்பு அலுவலக வளாகத்தில் குடியிருப்பு, சமையலறை, உணவு பரிமாறும் இடம் மற்றும் மருத்துவமனை போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டு உள்ளன.

2014ல் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பிரதமர் நரேந்திர மோடி தலைநகரத்திற்கு முழு தோற்ற மாற்றத்தை தருவதற்கு புதிய முயற்சியை எடுத்துள்ளார். இதனால் புதிய இந்தியாவுக்கான வரலாறு பிரகாசமானதாகவும் கீர்த்தி மிக்கதாகவும் மாறும். ■

பாதுகாப்பு அலுவலக வளாக தொடங்க விழாவின் பிரதமரின் முழு உரையையும் கேட்க கியூஆர் கோடை ஸ்கேன் செய்யவும்

## புதிய பாதுகாப்பு அலுவலக வளாத்தின் சிறப்பம்சங்கள்

- மத்திய விஸ்டா மறு-அபிவிருத்தி திட்டம் தொடங்கப்பட்ட போது, 62 ஏக்கர் அளவில் பரந்துள்ள லாயங்களில் இருந்து பணிபுரியும் நமது இராணுவ ஹீரோக்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்ற கருத்து இருந்தது. நவீன வசதிகளுடன் கூடிய சிறப்பான இருப்பிடத்திற்கு அவர்களை மாற்ற வேண்டும் என்ற யோசனையும் இருந்தது.
- தொடக்கத்தில் லெப்டினென்ட் ஜெனரல் ரேங்க் வரை உள்ள அதிகாரிகள் உட்பட 7,000 இராணுவ வீரர்கள் லாயங்களில் பணி புரிந்தனர். அதாவது இரண்டாவது உலகப் போரின் போது கட்டப்பட்ட தற்காலிக அலுவலகங்களில் அவர்கள் பணி புரிந்தனர்.
- எல்.ஜி.எஸ்.எஃப் (லகு காஜ் ஸ்டீல் ஃபிரேம்) போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கஸ்தூர்பா காந்தி மார்க் மற்றும் ஆஃபிரிக்கா அவென்யூவில் 13 ஏக்கரில் அதிநவீன அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு உள்ளன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த கட்டுமானப் பணி 12-13 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.
- கட்டிடத்தின் மேல்தளத்தில் சூரிய சக்தி பேனல்கள் உள்ளன. இந்த வளாகத்தின் சிறப்பு அம்சங்களாக மழைநீர் சேகரிப்பு, கழிவு ஏதும் இல்லாத வளாகம், நபரின் இருப்பை உணர்ந்து செயல்படும் சென்சார்கள், தானியங்கி மற்றும் அண்மைக்கால வாகன நிறுத்த முறை ஆகியவற்றை குறிப்பிடலாம்.
- மேலும் ஒரு மருத்துவமனை, நவீன படை வீடுகள், வீரர்களுக்கு கஃப்டேரியாவுடன் 24 மணி நேரமும் இயங்கும் உணவகம், வெடிமருந்துகளை பாதுகாப்பாக சேமித்து வைக்கும் வசதி, உயர்நிலையிலான பாதுகாவல் அமைப்பு, மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு, முக அடையாள அங்கீகார அமைப்பு ஆகியனவும் உள்ளன.
- ஓய்வு பெற்ற ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் நிலுவையில் உள்ள தங்களது அலுவல்சார் வேலைகளுக்காக இங்கு வருகின்றனர். புதிய வளாகங்களில் அவர்களுக்கான தேவைகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளது.
- கோவிட் ஏற்படுத்திய சவால்களுக்கு இடையிலும் சுய-சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் 6.5 லட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டன. இந்த மிகப் பெரும் கட்டிடத்திற்கு 8,000 டன் சிமெண்ட்டும் 9,000 டன் ஸ்டீலும் பயன்படுத்தப்பட்டு உள்ளன.
- இந்தத் திட்டத்திற்காக ஒரு மரம்கூட வெட்டப்படவில்லை என்பது சுற்றுச்சூழல் மீதான அக்கறையை வெளிப்படுத்துகிறது.




# 'தடுப்பூசி சேவை'

## ஆரோக்கியத்துக்கான பாதுகாப்பு கவசம்

நாம் இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின ஆண்டைக் கொண்டாடிக் கொண்டு இருக்கும் அதே சமயத்தில், கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் புதிய சாதனைகளை ஏற்படுத்துவது என்பது நல்லதொரு அடையாளமாக உள்ளது. மிகப் பெரிய அளவிலான தடுப்பூசி திட்டங்களில் ஒன்றை கூர்மதியுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் திட்டமிட்டு செயல்படுத்துவதால் இந்த தடுப்பூசி இயக்கமானது உலக அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. பல்வேறு முன்னெடுப்புகள் மூலமாக நாட்டில் உள்ள மருத்துவ வசதிகளை கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்ததன் காரணமாக இந்த இமாலய பணியானது சாத்தியமானது. எண்ணிக்கையே சாதனையை எடுத்துக்காட்டி வருகிறது - எட்டு மாதங்கள் என்ற குறுகிய கால அவகாசத்திலேயே 92 கோடி தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன. இப்போது இந்தியா தகுதி வாய்ந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் தடுப்பூசி போடுவதில் கவனம் செலுத்துகிறது. இதற்கான பணி வேகமாக நடைபெற்று வருகிறது ....

“

நான் இன்று எனது மனதின் குரலை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பல பிறந்தநாட்கள் வருகின்றன, போகின்றன. ஆனால் நான் இந்த கொண்டாட்டங்களில் ஈடுபடாமல் விலகியே இருக்கிறேன் (பிறந்தநாள் கொண்டாட்டங்கள்) ஆனால் என் வாழ்நாளில் இந்த செப்டம்பர் 17ஆம் தேதி ஒரு உணர்ச்சிப்பூர்வமான நாள் ஆகும். பிறந்தநாளைக் கொண்டாட பல வழிகள் இருக்கின்றன. மக்களும் பலவிதமாக கொண்டாடுகின்றனர். பிறந்தநாள் கொண்டாடுவது தவறு என்று நம்புபவர்களின் அணியில் நான் இல்லை. ஆனால் உங்கள் அனைவரின் முயற்சியால், 17 செப்டம்பர் தினம் எனக்கு மிகவும் விசேஷமான நாளாக மாறி உள்ளது

”

-நரேந்திர மோடி, பிரதமர்



இந்தியாவின் மிகப் பெரிய மாவட்டமான கட்ச் மாவட்டம் 45,674 சதுர கிலோ மீட்டரில் பரந்து விரிந்துள்ள நிலப்பரப்பாகும். “கட்ச் பாலைவனம்” என்று அழைக்கப்படும் இந்தப் பிராந்தியம் தார் பாலைவனத்தில் உள்ள உப்பு பாலைவனமாக இருக்கிறது. இந்த மாவட்டத்தில் 10 தாலுக்கா மற்றும் 924 கிராமங்கள் உள்ளன. கடினமான நில அமைப்பியல் காரணமாக கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில் இந்த மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமப் பகுதியையும் சென்றடைவது என்பது மிகப் பெரிய சவாலான செயலாக இருந்தது. இந்த தாலுக்காக்களுக்கு இடையில் பல மைல் தூரம் இடைவெளி இருந்தது. இந்த சவால்கள் அனைத்தையும் சமாளித்து நிர்வாகம் ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தக்க தருணத்தில் அனைத்து தாலுக்காக்களுக்கும் தடுப்பூசி அளித்தது. இந்த இமாலயச் சாதனையானது பெருந்திரள் மக்கள் பங்கேற்பு மூலம் எந்த சிரமமும் இல்லாமல் அனைத்து பகுதிகளிலும் தடுப்பூசி கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

நாட்டின் வடகிழக்குப் பகுதிதான் அணுக முடியாத பகுதியாக இருக்கிறது என்பது பொதுவான கருத்தாகும். அருணாச்சலப் பிரதேசத்தின் கார தாதி போன்ற தொலைதூர மாவட்டங்களுக்கு தடுப்பூசி எடுத்துச் செல்வது அச்சமூட்டும் பணி ஆகும். எனினும் அர்ப்பணிப்புடன் கூடிய தடுப்பூசி குழுவினர் பல தடைகளை மீறிச் செல்கின்றனர் - வழுக்கும் பாதை, குன்றுகள், குறுகிய சாலைகள் மற்றும் அபாயகரமான ஆறுகள் என பல தடைகளைத் தாண்டி இவர்கள் சென்றனர்.

இமாச்சலப் பிரதேசத்தின் லாகௌல் ஸ்பிட்டி மாவட்டம் அணுகமுடியாத, கடினமான நிலப்பகுதி ஆகும். இங்கு வெப்பநிலை ஜீரோ டிகிரிக்கு கீழே போகும் போது நிலப்பகுதியை சில மாதங்களுக்கு பனி மூடி இருக்கும். இதையும் மீறி இமாச்சலப் பிரதேசத்தின் பிற பகுதிகள் போன்றே இந்த லாகௌல் ஸ்பிட்டி மாவட்டத்திலும் 100% முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டு உள்ளது. அடல் சுரங்கப் பாதை கட்டப்படுவதற்கு முன்பு இந்தப் பகுதியானது நாட்டின் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட பகுதி போலவே பல மாதங்கள் இருந்தது. குறைவான பயண நேரம் மற்றும் மேம்படுத்தப்பட்ட இணைப்பு வசதிகள் போன்ற சாதகமான அம்சங்கள் மூலம் அடல் சுரங்கப்பாதை தடுப்பூசி இயக்கத்திற்கு பெரிதும் உதவி உள்ளது. பீகாரின் தர்பங்கா மாவட்டத்தில் உள்ள குஷிஷ்வர்ஸ்த்தன் என்ற வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதியில் தடுப்பூசி இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு பல சாவல்களை எதிர்கொள்ள வேண்டியதாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தில் வெள்ளம் ஏற்பட்டு இந்தப் பகுதி பாதிப்புக்கு உள்ளாகும். இது சுகாதாரப் பணியாளர்களின் பணியை மிகவும் கடினமாக்கியது. இந்தச் சவால்களுக்கு இடையிலும் தடுப்பூசி இயக்கத்தை நிறைவேற்ற மாவட்ட நிர்வாகம் குஷிஷ்வர்ஸ்த்தன் ஒன்றியத்தில் படகு ஒன்றை ஓட்டுவதற்கு முடிவெடுத்தது. இங்கு மட்டுமல்லாமல், பீகாரின் முசாஃப்பர்பூர் உள்ளிட்ட மாநிலத்தின் பல பகுதிகளிலும் தடுப்பூசி செலுத்துவதற்காக பல படகுகள் இயக்கப்பட்டன. சுகாதாரப் பணியாளர்களின் பயணத்திற்காக படகு ஆம்புலன்ஸ்கள் பயன்படுத்தப்பட்டன. கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தின் மீட்டெழுச்சியின் அடையாளமாக இந்த தடுப்பூசி படகுகள் திகழ்ந்தன.

பேரழிவைத் தரும் வெள்ளங்கள், அணுகமுடியாத மலைப் பகுதிகள், தொலைதூரங்களில் உள்ள பழங்குடியின குடியிருப்புகள், மொழி-பிராந்திய வேறுபாடுகள் மற்றும் வதந்திகள் என பல சவால்களைச் சமாளித்து தடுப்பூசி இயக்கமானது தளாராது வெற்றி நடை போட்டு வருகிறது. நாட்டை கோவிட் பெருந்தொற்று தாக்கிய போது நமக்கு பெருந்தொற்றுப் பரவலுக்கு எதிராகப் போராடும் திறன் இருக்கிறதா என்று உலகம் சந்தேகப்பட்டது. ஆனால் இந்தியா இந்தத் தொற்றுப் பரவலை வெற்றிகரமாக கையாண்டு மீண்டெழுந்துள்ளது.

## இந்தியாவின் சராசரி பிற உலக நாடுகளைவிட அதிகமாக இருக்கிறது




செறிவான பன்முகத்தையும் கடினமான நிலவியல் அமைப்பும் கொண்ட ஒரு நாட்டில் தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெறுகிறது என்றால் அதற்கான ஒரு காரணம் பொதுமக்களின் பங்கேற்பும் பரஸ்பர கலந்துரையாடலுமே ஆகும். ஒன்பது மாத காலத்திற்குள்ளேயே இந்தியா உள்நாட்டில் இரண்டு தடுப்பூசிகளை தயாரித்ததோடு மட்டும் அல்லாமல் 92 கோடி தடுப்பூசி தவணைகள் செலுத்தி (அக்டோபர் 6ஆம் தேதி அன்றுள்ளபடி) புதிய சாதனையையும் நிகழ்த்தி உள்ளது. தடுப்பூசி இயக்கத்தின் துடிப்பான வேகம் இந்தியா ஏற்கனவே நிகழ்த்திய தனது சாதனைகளை தொடர்ந்து முறியடித்து புதிய சாதனைகளை நிகழ்த்த உதவி வருகிறது.

**நம்பிக்கையே வெற்றிகரமான இயக்கத்தின்**

## தினசரி மற்றும் ஒவ்வொரு விநாடிக்கும் செலுத்தப்பட்ட தடுப்பூசி தவணைகள் அடிப்படையில்




**அடிப்படையாக இருக்கிறது**

எந்த ஒரு வெற்றிகரமான இயக்கத்திற்கும் மைல்கல்லாக தேசிய முயற்சிகளின் மீதான நம்பிக்கைதான் இருக்கிறது. இந்த நம்பிக்கைக்கான அஸ்திவாரத்தை தனக்கான வலிமையை சவால்களை நேருக்கு நேராக சந்தித்து தீர்க்கின்ற தற்போதைய தலைமையிடம் இருந்து பெற்றுள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தை இணைத்துக் கொள்கின்ற பிரதமர் நரேந்திர மோடியின் வழிமுறை மற்றும் தேசிய கொள்கையில் அதை ஒரு அங்கமாக மாற்றியது என்பது ஈடில்லாத செயல் ஆகும். இந்த ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த வெற்றிகரமான தடுப்பூசி இயக்கமானது தொடக்கத்தில் சந்தேகத்தோடுதான் பார்க்கப்பட்டது. முன்களப் பணியாளர்கள் மட்டுமே தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதி பெற்றவர்கள் என்பதும்

# 7 மாநிலங்களில் 100% தடுப்பூசி

## 7 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் கோவிட் தடுப்பூசியின் முதல் தவணை 100% வயது வந்தோருக்கு இப்போது செலுத்தப்பட்டு இருக்கிறது

**லடாக்**
**1.97**
லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன

**லட்சத்தீவுகள்**
**53499**
தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன

**இமாச்சலப் பிரதேசம்**
**55.74**
லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன

**சிக்கிம்**
**5.10**
லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன

**கோவா**
**11.83**
லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன

**தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ**
**6.26**
லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன




**மாற்றுத் திறனாளிகள் மற்றும் இதர சிறப்புத் தேவை உள்ள நபர்களுக்கு சிறப்பு தடுப்பூசி செலுத்தும் திட்டமானது அவர்களின் வீடுகளுக்கே சென்று தடுப்பூசி செலுத்த வழி செய்கிறது.**

இதற்கு கூடுதல் காரணமாக அமைந்தது. 100 மில்லியன் தடுப்பூசி தவணைகள் செலுத்த இந்தியாவுக்கு 85 நாட்கள் ஆனது.

ஆனால் அதற்குப் பிறகு கோவிட் தொற்றுக்கு எதிரான தீர்மானமான போராட்டத்தில் தடுப்பூசி செலுத்தப்படும் வேகம் இணையில்லாத வகையில் அதிகரித்தது. தொடர்ச்சியாக 45 நாட்களில் 20 கோடி என்ற இலக்கு எட்டப்பட்டது. அடுத்த 29 நாட்களில் எண்ணிக்கை 30 கோடியை தொட்டது. அதே போன்று 40 கோடி இலக்கை அடைய 24 நாட்கள் ஆனது. அடுத்த 20 நாட்களில் 50 கோடி இலக்கு அடையப்பட்டது. 60 கோடியைத் தாண்ட 19 நாட்களே ஆனது. தொடர்ந்து 70 கோடியை அடைய வெறும் 13 நாட்களே தேவைப்பட்டன. சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு தொடங்கிய அடுத்த மாதத்திலேயே, அதாவது செப்டம்பர் 13 அன்று 750 மில்லியன் தடுப்பூசி தவணைகள் செலுத்தி நாடு சாதனை புரிந்தது. நாட்டின் இரும்பு போன்ற உறுதிப்பாட்டின் காரணமாக 100 மில்லியன் என்ற இலக்கை அடைந்த பிறகு தடுப்பூசி இயக்கத்தின் வேகம் ஆறு மடங்கு அளவிற்கு அதிகரித்தது. இது இந்த இயக்கத்தை உலகின் மிக வேகமான மற்றும் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கமாக மாற்றி உள்ளது.

### சேவை மற்றும் அர்ப்பணிப்பின் அடையாளமாக 17 செப்டம்பர் உருவாகி உள்ளது

இந்தியாவில் தடுப்பூசி இயக்கம் எந்த அளவிற்கு வேகமாகச் செயல்பட முடியுமோ அந்த அளவு வேகத்தில் பல சாதனைகளைத் திரும்பத் திரும்ப நிகழ்த்தி வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் 71ஆவது பிறந்த தினமாக அமைந்த செப்டம்பர் 17 வரலாற்றில் சிறப்புமிக்க நாளாக உருவாகி உள்ளது. செப்டம்பர் 17 அன்று சுகாதாரப் பணியாளர்கள் ஒரு நாளில் 2.5 கோடி கொரோனா தடுப்பூசிகள் செலுத்தி ஒரு புதிய உலக சாதனையை நிகழ்த்தினர். அந்த நாளில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 15 லட்சம் தவணை தடுப்பூசிகள்,

## மிக குறைந்த செலவிலான தடுப்பூசியுடன் உலகின் மிகப் பெரும் தடுப்பூசி இயக்கம்



- ஏப்ரல் 2020ல் டாக்டர் கே. விஜயராகவன் மற்றும் நிதி ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் வி.கே.பால் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு பணிக்குழு உருவாக்கப்பட்டது. கோவிட்-19 தடுப்பூசி நிர்வாகத்துக்கான தேசிய நிபுணர் குழு ஆகஸ்ட் 2020ல் நிபுணர்களுடன் நியமிக்கப்பட்டது.
- இந்தக் குழு தடுப்பூசிக்கு அனுமதி கிடைக்கும் முன்பே சேமிப்பு / போக்குவரத்து, குளிர்சாதன கிடங்குகளின் தொடர் சங்கிலி அமைப்பு, கொள்முதல் மற்றும் விநியோகம் தொடர்பாக முழுமையான நடைமுறைகளைத் தயாரித்து இருந்தது. ஜனவரி 14 அன்று நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்கு தடுப்பூசியை விநியோகிக்கும் நடைமுறை பூர்த்தியானது.
- ஜனவரி 16 அன்று சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தி கொரோனா தடுப்பூசி இயக்கம் தொடங்கப்பட்டது. பிப்ரவரி 2 முதல் முன்களப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமானது. மார்ச் 1 முதல் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கும் தடுப்பூசி விரிவுபடுத்தப்பட்டது. ஏப்ரல் 1 முதல் தீவிர நோய்கள் ஏற்கனவே உள்ள 45 முதல் 59 வயதுப் பிரிவினருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- இரண்டாம் அலை தாக்கிய போது, மத்திய அரசானது ஏப்ரல் 1 முதல் 45 வயதிற்கு மேற்பட்டோரையும் தடுப்பூசி போட்டுக் கொள்ள சேர்த்துக் கொண்டது.

**45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பணியிடங்களிலேயே தடுப்பூசி செலுத்தும் பணி ஏப்ரல் 12 முதல் தொடங்கியது.**

**நாட்டில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் மூன்றாம் கட்டப் பணி மே 1 முதல் தொடங்கியது.**

- தடுப்பூசி செலுத்தும் முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்ட மத்திய அரசு வயது வந்தோர் அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசி செலுத்தும் உலகின் மிகப்பெரும் இயக்கத்தை ஜூன் 21ல் தொடங்கியது.
- தடுப்பூசி இயக்கத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்தில் உள்நாட்டுத் தயாரிப்பான கோவாக்சின் மற்றும் கோவிஷீல்டுடன் ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி-க்கும் அனுமதி அளிக்கப்பட்டது. 12 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான ஜைடஸ் கேடிலா தடுப்பூசிக்கும் இப்போது அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

### தடுப்பூசி மைத்ரி திட்டத்தின் கீழ் 65 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் உலகின் 95 நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

ஒவ்வொரு நிமிடத்திற்கும் 26,000 தவணை தடுப்பூசிகள் மற்றும் ஒவ்வொரு விநாடிக்கும் 425 தவணை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு இருந்தன.

இந்தச் சாதனையை உலகின் மிக வளர்ந்த மற்றும் பணக்கார நாடுகள்கூட நிகழ்த்தி இருக்கவில்லை. செப்டம்பர் 17 அன்று உலக அளவில் தடுப்பூசி போடப்பட்ட புள்ளி விவரங்களைப் பார்த்தோம் என்றால், 16 மணி நேர காலஅளவில், இந்தியா 25 மில்லியன் மக்களுக்கு (சுமார் 82 சதவிகிதம்) தடுப்பூசி செலுத்தி இருக்க, உலகின் பிற நாடுகள் 5.4 மில்லியன் மக்களுக்கு (சுமார் 18 சதவிகிதம்) மட்டுமே தடுப்பூசி செலுத்தி இருக்கின்றன. இந்தியாவில் செப்டம்பர் 17 அன்று தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகைக்கும் கனடாவின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கும் நியூசிலாந்தின் மக்கள் தொகையில் ஐந்து மடங்கிற்கும் சமமாகும். செப்டம்பர் 17 அன்று தடுப்பூசி செலுத்தப்பட்ட மக்களின் மொத்த எண்ணிக்கையானது உலகின் 100க்கும் அதிகமான நாடுகளின் தோராயமான மக்கள் தொகைக்குச் சமம் ஆகும்.

ஆகஸ்ட் - செப்டம்பர் மாதத்தில் இந்தியா தடுப்பூசி செலுத்துவதில் புதிய சாதனைகளை நிகழ்த்தி உள்ளது. ஜி-7 நாடுகளில் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கையைவிட கூடுதலான தடுப்பூசி தவணைகளை இந்தியா செலுத்தி உள்ளது. அதுமட்டும் அல்ல, உத்திரப் பிரதேசம், குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், அரியானா போன்ற மாநிலங்கள் உலகின் பல நாடுகளைவிட கூடுதலாக தடுப்பூசி தவணைகளை செலுத்தி இருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம், அரபு லீக், நாட்டோ, ஜி-7 மற்றும் ஏசியன் (ASEAN) ஆகியவற்றின் தினசரி சராசரி தடுப்பூசி தவணைகளைவிட இந்தியாவின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதில் இருந்து இந்தியாவின் சாதனைகள் தெளிவாகத் தெரிகின்றன.

உள்நாட்டிலேயே தடுப்பூசிகளைத் தயாரிக்கும் நாட்டின் திறன் மற்றும் தடுப்பூசி செலுத்துவதற்கான விரிவான வலைப்பின்னல் மற்றும் திறன்மிக்க மனித ஆற்றல் ஆகியவற்றின் காரணமாக தடுப்பூசி இயக்கம் மிக வேகமாகச் செயல்படுகிறது. இந்தச் சாதனை உலக நாடுகளிடையே இந்தியாவின் மனோதிடத்தை மீண்டும் ஒரு முறை நிரூபித்து உள்ளது. தேசத்தைப் பொறுத்த அளவில் அதன் பெருமையை மீட்டெடுப்பதில் ஒவ்வொரு இந்தியரும் ஆற்றலுடன் மீள் எழுச்சி பெறுகின்றனர்.

# ஆகஸ்ட் - செப்டம்பரில் தடுப்பூசி இயக்கத்தின் அதிவேகம்

ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்கள் தடுப்பூசி இயக்கத்தின் அதிவேகமான மாதங்களாக இருந்துள்ளன. நாட்டில் ஆகஸ்ட் மாதத்தில் 180 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டு உள்ளன. இந்த எண்ணிக்கையானது கனடா, யுகே, யு.எஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி-7 நாடுகள் அனைத்திலும் செலுத்தப்பட்ட தடுப்பூசி எண்ணிக்கையைவிட அதிகம் ஆகும்.

அதே சமயம், பிரதமர் மோடியின் பிறந்த தினமான செப்டம்பர் 17 அன்று மட்டும் ஒரே நாளில் 2.5 கோடி தடுப்பூசிகள் செலுத்தி மிக விரைவான தடுப்பூசி இயக்கம் என்ற சாதனையை இந்தியா நிகழ்த்தியது. அப்போது, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 15.62 லட்சம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. அதாவது ஒரு நிமிடத்திற்கு 26 ஆயிரம், விநாடிக்கு 434 தவணைகள் செலுத்தப்பட்டன.




**கோவிஷீல்டு மற்றும் கோவாக்சினுக்குப் பிறகு மற்றொரு உள்நாட்டு தயாரிப்பான ஜைகோவ்-டி தடுப்பூசிக்கு அனுமதி அளித்தது என்பது தடுப்பூசி இயக்கத்திற்கு கூடுதல் உந்து சக்தி அளித்ததாக உள்ளது.**

### தடுப்பூசி பாதை எளிதானது அல்ல

வரலாற்றில் இதற்கு முன்பு இவ்வளவு பெரிய அளவில் தடுப்பூசி இயக்கம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. தடுப்பூசியின் முதல் கட்டத்திலேயே இது எந்த அளவு பெரிய இயக்கம் என்பதை மதிப்பிட முடியும். முதல் கட்டத்தில் இந்தியா 3 கோடி சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் 27 கோடி முதியவர்கள், தீவிர நோய் பாதிப்பு உள்ளவர்களை தடுப்பூசிக்கு தகுதியானவர்கள் என அறிவித்தது. உலகில் 30 மில்லியன் மக்கள் தொகைக்கும் குறைவாக 100க்கும் அதிகமான நாடுகள் உள்ளன. ஆனால்இந்தியா தனது தடுப்பூசியின் முதல் கட்டத்திலேயே 30 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் இமாலயப் பணியை மேற்கொண்டது. ஜனவரி 16 அன்று தடுப்பூசி செலுத்தும் செயல் தொடங்கிய போது நிபுணர்கள் நாட்டில் உள்ள 300 மில்லியன் மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தி முடிக்கவே குறைந்தது 7-8 மாதங்கள் ஆகும் என்று கருதினர். ஆனால் இந்தக் கால வரம்பில் இந்தியா 92 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி தவணைகளை செலுத்தி இருக்கிறது. இது கோவிட் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் எழுச்சியை எடுத்துக்காட்டுகிறது.

சுதந்திரத்தின் அமுதப் பெருவிழாவானது தடுப்பூசி இயக்கத்திற்கு மேலும் ஊக்கத்தை அளித்தது. அளப்பரிய ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் இந்தியர்கள் இந்த தடுப்பூசி இயக்கத்தில் பங்கு கொண்டனர். ஆகஸ்ட் மாதத்தில் மட்டுமே இந்தியா ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியது. அதாவது அந்த மாதத்தில் அதிகபட்சமாக




186 மில்லியன் தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டு அதிக தடுப்பூசி செலுத்தப்பட்ட மாதமாக சாதனை நிகழ்த்தப்பட்டது. ஆகஸ்ட் மாதத்தின் இறுதி நாளில், 1 கோடியே 30 லட்சம் தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டன.

ஒரு நாளில் செலுத்தப்பட்ட அதிகபட்ச தடுப்பூசி தவணை என்ற சாதனை இதன் மூலம் நிகழ்த்தப்பட்டது. ஆகஸ்ட் 26 அன்று மற்றுமொரு சாதனை நிகழ்த்தப்பட்டது. அன்று தகுதி வாய்ந்த மக்கள் தொகையில் 50 சதவிகிதம் நபர்களுக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டு இருந்தது. கோவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களின் உயிரைப் பாதுகாப்பதே மத்திய அரசின் உயர் முன்னுரிமையாக இருந்தது. எனவே கோவிட் தொற்று இந்தியாவில் ஏற்படுவதற்கு முன்பே அதைத் தடுப்பதற்கான முயற்சிகள் இங்கு தொடங்கப்பட்டு விட்டன.

கோவிட் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் மிக முக்கிய கூறுகளாக பிரதமர் மாற்றினார். தடுப்பூசிக்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது அல்லது கொரோனா என்ற துயர்மிகு காலகட்டத்தில் மக்களுக்கு நலவாழ்வு தொகுப்பு திட்டங்கள் மூலம் நிவாரணம் வழங்குவது அல்லது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளைத் தயாரிப்பது என எதுவாக இருந்தாலும் அதற்குப் பின்புலமாக இருந்து இயக்கும் உந்து சக்தியாக அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் மத்திய அரசு முன்னிறுத்தியது. இந்தியாவை பெருந்தொற்றுப் பரவல் பாதிக்க ஆரம்பித்த ஒரு மாதத்திற்குப் பிறகு ஏப்ரல் 2020ல் பிரதமர் நரேந்திர மோடி தடுப்பூசிக்கான பணிக்குழு ஒன்றை நியமித்தார். இந்தப் பணிக்குழுவின் பொறுப்பு நாட்டின் முதன்மை அறிவியல் ஆலோசகரான கே.விஜயராகவன் மற்றும் நிதி ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் வி.கே.பால் ஆகியோர் வசம் ஒப்படைக்கப்பட்டது. தடுப்பூசி உருவாக்குவதை ஊக்கப்படுத்தும் வகையிலான அறிவியல் பகுப்பாய்வை மேற்கொண்டு அதன் அடிப்படையில் பரிந்துரைகளை முன்வைப்பதுமே இந்தக் குழுவின் முதன்மைப் பொறுப்பாகும். ஆகஸ்ட் 2020ல் பிரதமர் மற்றுமொரு நடவடிக்கையை மேற்கொண்டார். கோவிட்-19க்கான தடுப்பூசி நிர்வாகத்துக்கான தேசிய நிபுணர் குழு (NEGVAC) அமைச்சகங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் தொழில்நுட்ப




## இரண்டு தவணைகள் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கையின்படி பார்த்தால் சீனா, அமெரிக்காவுக்கு அடுத்து இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது.

நிபுணர்களும் ஐந்து மாநிலங்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்று இருந்தனர். கூட்டமைப்பின் அற்புதமான உதாரணமாக, மத்திய அரசு இந்தப் பேரிடரை முதல் அமைச்சர்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் பன்னிரெண்டு முறைகளுக்கு மேல் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி அதை ஒரு வாய்ப்பாக மாற்றியது. தடுப்பூசி உருவாக்கும் செயலோடு, இந்தக் குழு தடுப்பூசி சேமிப்பு, கொள்முதல் நடைமுறை, தடுப்பூசியின் செயல்திறனை உறுதி செய்தல், முன்னுரிமை அடிப்படையில் மக்களுக்கு எவ்வாறு தடுப்பூசி செலுத்துவது என்பது போன்ற அம்சங்களிலும் ஏற்கனவே முன்னெற்பாடுகளைச் செய்தது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் திறன்மிகு பயன்பாட்டால் ஒரு சில மாதங்களிலேயே தடுப்பூசி உருவாக்கப்பட்டதோடு முழுமையான கண்காணிப்போடு கடைசி நபர் வரை தடுப்பூசி கிடைப்பதற்கான விரிவான கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டன. இந்தியாவின் கோவின் (Co-Win) பிளாட்ஃபார்ம் இன்று உலகிற்கு ஒரு உதாரணமாக விளங்குகிறது.

### அனைவருக்கும் இலவசமாக கோவிட் தடுப்பூசி

கோவிட் பெருந்தொற்று எதிர்பாராதது, மற்றும் இது ஒவ்வொரு தேசத்தையும் பாதித்து உள்ளது. இந்தியாவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. ஆனால் நாடு அதனை பன்முக உத்தியுடன் எதிர்கொண்டு போராடியது. ஐசியூ படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் கோவிட் மருத்துவமனைகளை உருவாக்குவதில் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டுவர போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆக்சிஜன் ரெயில்களும் இயக்கப்பட்டன. ஆக்சிஜன் சிலிண்டர்களை விரைவாக எடுத்துச் செல்ல விமானப்படை மற்றும் கப்பல்படை ஆகியனவும் ஈடுபடுத்தப்பட்டன. மிக குறுகிய காலத்திற்குள்ளாகவே, மருத்துவ திரவ ஆக்சிஜன் உற்பத்தி 10 மடங்கு அதிகரித்தது. உலகின் எந்த ஒரு பகுதியில் இருந்தும் எந்த அளவிற்கு ஆக்சிஜன் கிடைத்தாலும் அதைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன. அதே போன்று, அத்தியாவசியமான மருந்துகள் உற்பத்தியும் பல மடங்கு அதிகரித்தது. வெளிநாடுகளில் எங்கிருந்து மருந்து கிடைத்தாலும் அந்த மருந்தை கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கோவிட் தொற்றுக்கான இந்தப் போராட்டத்தில், தடுப்பூசி என்பது மிக முக்கியமான பாதுகாப்பு கவசமாகும். 50-60 ஆண்டுக்கால வரலாற்றைப் பார்த்தோம் என்றால், வெளிநாடுகளில் இருந்து தடுப்பூசி பெற இந்தியாவுக்கு பல பத்தாண்டு காலம் ஆகியிருக்கும். தடுப்பூசி கண்டுபிடிக்கும் நடைமுறை வெளிநாட்டில் முடிந்து அந்த நாட்டிலேயே பரிசோதனை தொடங்கும். அதற்குப் பிறகுதான் மற்ற நாடுகளுக்கு அந்த தடுப்பூசி கிடைக்கும். 2014ல் தடுப்பு மருந்து எடுத்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் 60 சதவிகிதம் ஆகும். இந்த வேகத்தில் சென்றால் தடுப்பு மருந்தை எடுத்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை 100% என்ற நிலையை அடைய மேலும் 40 ஆண்டுகள் ஆகும். ஆனால் அடுத்த 5-6 ஆண்டுகளிலேயே இந்தியாவில் இந்திர தனுஷ் போன்ற திட்டத்தின் மூலம் தடுப்பு மருந்து எடுத்துக் கொள்வது 60 சதவிகிதத்தில் இருந்து 90 சதவிகிதமாக அதிகரித்தது. இந்திரதனுஷ் திட்டம் மத்திய அரசால் இயக்கம் போன்ற

## தடுப்பூசி உங்களை இந்த முறையில்தான் வந்து சேர்கிறது




**செப்டம்பர் 23 வரை இந்தியா 55 கோடிக்கும் அதிகமான பரிசோதனைகளை மேற்கொண்டு இருந்தது. இது பல நாடுகளின் மக்கள் தொகையைவிட அதிகம் ஆகும்.**

அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

சுயசார்பு பாரதம் திட்டத் தொகுப்பின் கீழ் கோவிட் சுரக்ஷா இயக்கத்தின் வாயிலாக தடுப்பூசி நிறுவனங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு ஜனவரி 16 தொடங்கி ஏப்ரல் இறுதி வரை, இந்தியாவின் தடுப்பூசி திட்டம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. அனைவருக்கும் இலவசமாகத் தடுப்பூசி வழங்குதல் என்ற பாதையில் நாடு முன்னேறிச் சென்றது. சில மாநிலங்கள் தடுப்பூசி இயக்கத்தைத் தாங்களே தங்களது மாநிலத்தில் நடத்திக் கொள்வதாக மத்திய அரசைக் கேட்டுக் கொண்ட பிறகு, பல விவாதங்கள் நடைபெற்று, மாநிலங்கள் தங்கள் தரப்பில் இருந்து முயற்சிகள் மேற்கொள்வதாக இருந்தால் தடுப்பூசி இயக்கத்தை அவர்களே நடத்திக் கொள்ளலாம் என அனுமதிக்கப்பட்டது. அத்தகையச் சூழலில் மே 1ஆம் தேதி மாநிலங்கள் வசம் 25 சதவிகித பணி ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் அலைக்குப் பிறகு, ஜூன் 7ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், பழைய முறையையே மீண்டும் கொண்டு வருவதாக அறிவித்தார். இதனால் தடுப்பூசி பொறுப்பை மத்திய அரசே ஏற்றுக் கொண்டது. அதிலும் குறிப்பாக சர்வதேச யோகா தினத்தன்று, அதாவது ஜூன் 21 அன்று "அனைவருக்கும் இலவச தடுப்பூசி" இயக்கம் தொடங்கப்பட்டது. தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க, மேலும் பல உற்பத்தி மையங்கள் தொடங்க முடிவெடுக்கப்பட்டது. அப்போதுதான் வரும்காலத்தில் தடுப்பூசி இயக்கத்தின் வேகத்தை அதிகப்படுத்த முடியும்.

"உயிருடன் இருந்தால்தான் உலகம் நமக்கு" என்பதில் இருந்து "உயிருடனும் இருக்க வேண்டும் உலகமும் வேண்டும்" என்பதுதான் வழிகாட்டும் விதியாக மாறி உள்ளது

கடந்த ஆண்டு மார்ச் மாதம், பிற நாடுகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது, 102 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஸ்பானிஷ் ஃப்ளு பெருந்தொற்றுப் பரவலை இந்தியா மிக நுணுக்கமாக ஆராய்ந்தது. பெருந்தொற்றுப் பரவலின் போது ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட இடங்களில் இறப்பு விகிதம் குறைவாக இருந்ததையும் நீண்டகால அவகாசத்தில் பொருளாதார மீட்பு சிறப்பாக இருந்ததையும் ஆய்வு வெளிப்படுத்தியது. குறுகிய காலகட்டத்துக்கு ஊரடங்கு என்பது பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிப்பதாக இருந்தது என்பதையும் நீண்டகால அவகாசத்திற்கு அதன் பாதிப்பு பொருட்படுத்தும் வகையில் இல்லை என்பதையும் ஆய்வு

# அனைவருக்கும் சுகாதாரம்

**2014க்குப் பிறகு சுகாதாரத் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் தொடங்கின. இதற்கு முன்பு இவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கவில்லை. புதிய மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரி ஆகட்டும், அல்லது ஏழைகளுக்கான இலவச சிகிச்சை ஆகட்டும், கிராமத்தில் இருந்து சிறு நகரம் மற்றும் பெரு நகரங்கள் ஆகட்டும் அனைத்துப் பிரிவுகளிலும் சுகாதார கட்டமைப்பு உயர்தரமாக்கப்படுகிறது.**

நாட்டில் சுகாதாரச் சேவைகளை வழங்குவதாகட்டும் அல்லது அந்தச் சேவையைப் பெற அணுகுவதாகட்டும், எதுவாக இருந்தாலும் பாரம்பரியமாக நமது நாட்டில் சுகாதார கட்டமைப்பு வசதிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடந்தன. தொலைதூரப் பகுதிகளில் சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கு திறன்மிக்க ஊழியர்களும் சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளும் தேவை. இந்த உண்மையை கவனத்தில் கொண்டு, முதன் முறையாக மத்திய அரசு பொது பட்ஜெட்டில் சுகாதாரப் பிரிவுக்காக மிகப் பெரும் பங்கினை ஒதுக்கீடு செய்துள்ளது. இது முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிட 137 சதவிகிதம் அதிகம் ஆகும். இதன் நோக்கம் நாட்டின் சுகாதார உள்கட்டமைப்பினை ஒட்டுமொத்தமாக சீரமைப்பதே ஆகும். ஜனவரி 30, 2020 அன்று இந்தியாவில் முதல் கொரோனா தொற்றாளர் கண்டறியப்பட்ட போது, நாட்டில் பரிசோதனை செய்யும் வசதி பூனாவில் உள்ள தேசிய நோய்நுண்ம நிறுவனத்தின் ஆய்வுக்கூடத்தில் மட்டுமே இருந்தது. இன்று கோவிட் பரிசோதனை செய்யும் வசதியானது நாட்டின் 2486 ஆய்வுக்கூடங்களில் இருக்கிறது. அதனால்தான் மத்திய அரசு நாட்டில் தொற்று நோய்கள் ஏற்படாமல் முன்பே தடுப்பதற்கான ஒட்டுமொத்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஈடுபட்டு உள்ளது. அத்தகைய நோய்கள் பரவத் தொடங்கும் அந்தச் சமயத்திலேயே தடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எடுப்பதும் இதில் உள்ளடங்கும். 2021-22ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில், இதற்கான சிறப்பு ஒதுக்கீடுகள் பிரதம மந்திரியின் ஆத்ம நிர்பார் ஸ்வஸ்த் பாரத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டு உள்ளன.

**ஒவ்வொரு குழந்தைக்கும் தடுப்பு மருந்துகள் தரப்பட வேண்டும்**




இந்திரதனுஷ் இயக்கத்தின் கீழ் 12 நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் தரப்படுகின்றன. உள்நாட்டு தயாரிப்பான நிமோகாக்கல் தடுப்பு மருந்தை தேசம் முழுவதும் வங்குவதற்கான இயக்கம் குறித்து பட்ஜெட்டில் அறிவிப்பு செய்யப்பட்டு உள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் 50,000 குழந்தைகளின் உயிரைக் காக்கும்.

**3.70**

கோடி குழந்தைகள் மற்றும் சுமார் 92 லட்சம் பெண்களுக்கு இந்திரதனுஷ் இயக்கத்தின் மூலம் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு உள்ளது

மேலும் எடுத்துக்காட்டியது. அத்தகையச் சூழலில், ஜிடிபி-யில் சிறிய அளவு பாதிப்பு ஏற்பட்டாலும்கூட, மனித உயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலான கொள்கையை நாடு ஏற்று செயல்படுத்தியது. ஜிடிபி வளர்ச்சியை மீண்டும் கொண்டு வந்து விடலாம். ஆனால் இறந்த உயிர்களை மீட்க முடியாது. இந்தக் குறிக்கோளோடு, அரசு ”உயிருடன் இருந்தால்தான் உலகம் நமக்கு” என்ற முழக்கத்தை முன்வைத்தது. பிறகு இது “உயிருடனும் இருக்க வேண்டும் உலகமும் வேண்டும்” என மாற்றப்பட்டது. 137 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டில் கொரோனா தொற்று வேகம் மிக அதிகமாக இருக்கும் என்ற அச்சத்தின் அடிப்படையில் பார்த்தால் நாட்டில் ஊரடங்கு கடைபிடித்தது என்பது முக்கியமான நடவடிக்கையாகவே இருக்கிறது. ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் குறியீட்டு எண் இந்தியாவின் ஊரடங்கானது பிரிட்டன் ஊரடங்கைவிட 15 சதவிகிதம் வலிமையானதாக இருந்தது எனக் காட்டுகிறது. இந்த இரண்டு மந்திர முழக்கங்களைச் செயல்படுத்தும் போது, கோவிட் முன்தடுப்பை நோக்கமாகக் கொண்ட எதிர்கால செயல் உத்திக்கும் சேர்ந்தே மத்திய அரசு திட்டமிடத் தொடங்கி உள்ளது. அந்த சமயத்தில், இந்தியா தனது சொந்த தடுப்பூசியை உருவாக்கும் என யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அமெரிக்காதான் முதன் முதலாக தடுப்பூசியை உருவாக்கும் என்றும் தனது நாட்டு மக்களுக்கே அது முதலில் தடுப்பூசியை செலுத்தும் என்றும் அதன் பிறகுதான் எஞ்சியுள்ள தடுப்பூசிகளை உலகின் பிற நாடுகளுக்கு வழங்கும் என்றும் எதிர்பார்ப்புகள் இருந்தன. பிரதமர் நரேந்திர மோடியின் நுண்புலமான சிந்தனை மற்றும் திட்டமிடலானது குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. தடுப்பூசி கண்டுபிடிக்கும் பயணத்தில் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்காக இந்தியா முதலில் ஒரு பணிக் குழுவை நியமித்தது. பிரதமர் நரேந்திர மோடி தனிப்பட்ட முறையில் பூனா, குஜராத், ஹைதராபாத் ஆகிய இடங்களுக்குச் சென்று கொரோனாவுக்கான தடுப்பூசியை வெற்றிகரமாக தயாரிக்க நிறுவனங்களை ஊக்கப்படுத்தினார். இந்த ஆதரவின் காரணமாக, கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் என்ற இரண்டு உள்நாட்டு தடுப்பூசிகள் பயன்பாட்டுக்கு வந்தன. முன்கூட்டியே போக்குவரத்து மற்றும் லாஜிஸ்டிக் குறித்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தடுப்பூசி பயன்பாட்டுக்குத் தயாரான உடனேயே முதலில் சுகாதாரப் பணியாளர்களுக்கு செலுத்துவது என முடிவெடுக்கப்பட்டது. பிறகு அனைத்து வயது வந்தோர்களுக்கும் செலுத்துவது என விரிவாக்கப்பட்டது.

**சிறப்பான சுகாதார உள்கட்டமைப்பு வசதிகள் முக்கியமானவை என்பது நிரூபணம் ஆகியுள்ளது**

# சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை சீர்செய்தல்

எந்த ஒரு அரசும் இது போன்று சுகாதாரத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பட்ஜெட்டில்

**137%**

அளவிற்கு ஒதுக்கீட்டை அதிகரித்திருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

இதுவரை சிகிச்சைக்காக பிஎம்-ஜே.ஏ.ஒய் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ்

**07**

பில்லியன் ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு உள்ளது.

### இப்போது ஏழைகளுக்கு இலவச சிகிச்சை கிடைக்கும் வசதி

- 10.74 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 50 கோடி மக்கள் ரூபாய் 5 லட்சம் வரை இலவச சிகிச்சை பெறும் வகையில் பிஎம் ஜன் ஆரோக்கிய ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.
- இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 16 கோடி இ-அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் 1.79 கோடி மக்கள் சிகிச்சை பெற்று உள்ளனர்.
- 7676 மக்கள் மருந்தகங்களில் (ஜன் ஔஷதி கேந்திரம்) மிகக் குறைந்த விலையில், அதாவது 90% வரையில் விலை குறைக்கப்பட்டு மருந்துகள் விற்கப்படுகின்றன. இங்கு சேனிட்டரி நாப்கின்கள் ஒரு ரூபாய்க்குத் தரப்படுகிறது.
- பூச்சு இல்லாத உலோக ஸ்டென்ட்டுகள் ரூ. 7,260க்கு கிடைக்கின்றன. மேலும் ஸ்டென்ட்டுகளின் விலை 85% வரை குறைக்கப்பட்டு உள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள ஒவ்வொருவரும் "சேஹத்" எனப் பெயரிடப்பட்டுள்ள ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் பலன்களைப் பெறலாம்.
- ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குவதற்கு 22 மாநிலங்களில் 50க்கும் அதிகமான திட்டங்கள் தொடங்கப்பட்டு உள்ளன. பிரதம மந்திரி மாத்ரித்வ வந்தனா திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண் ரூ.6,000 பெறுவார். ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திட்டத்தின் கீழ் 51 லட்சம் பெண்கள் பயன் பெறுகின்றனர்.

### சுகாதாரத் துறையோடு தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டிய 4 முக்கிய பகுதிகள்




- 01: நோய்கள் வராமல் தடுப்பதற்கு தூய்மையில் கவனம் செலுத்துதல்
- 02: ஏழைகளுக்கு குறைந்த செலவில் தரமான சிகிச்சை அளித்தல்
- 03: உள்கட்டமைப்பு வசதிகளின் தரம் மற்றும் நிபுணர்களின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துதல்
- 04: பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க இயக்க மாதிரியில் பணி புரிதல்

**15** மருத்துவ கல்வியை அபிவிருத்தி செய்ய நாடு முழுவதும் 15 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகள் திறக்கப்பட்டு உள்ளன. ஆர்ட்டிகிள் 370ஐ நீக்கிய பிறகு ஜம்மு மற்றும் காஷ்மீரில் 2 எய்ம்ஸ் மருத்துவமனைகள் மற்றும் 9 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு உள்ளன.

- 2025க்குள் இந்தியாவில் இருந்து காசநோயை நீக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

- கொரோனா காலகட்டத்தில் நாட்டில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள் தொடங்கப்பட்டன. தொலைமருத்துவ சேவையை 1.2 கோடிக்கும் அதிகமான மக்கள் பயன்படுத்தி உள்ளனர்.
- 2014ல் மருத்துவக் கல்வியில் 52 ஆயிரம் இளநிலை படிப்பிற்கான இடங்களும் 30 ஆயிரம் முதுநிலை படிப்பிற்கான இடங்களும் மட்டுமே இருந்தன. இப்போது நாட்டில் 85 ஆயிரத்திற்கும் அதிகமான இளநிலை படிப்பிற்கான இடங்களும் 46 ஆயிரத்திற்கும் அதிகமான முதுநிலை படிப்பிற்கான இடங்களும் உள்ளன.
- 1947 முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் 381 மருத்துவக் கல்லூரிகளே திறக்கப்பட்டு இருந்தன. 2014 முதல் 2020 வரையிலான 6 ஆண்டுகளில் 184 புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டு உள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் சுகாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகரமான சீர்திருத்தங்கள் இந்தியா தனது சுகாதாரப் பணியாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்புள்ள இதர பிரிவினர் ஆகியோருக்கு வெற்றிகரமாக தடுப்பூசி செலுத்த உதவியுள்ளன. கடந்த காலத்தில் சுகாதாரத் துறைக்கு இந்த அளவிற்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கவில்லை. முதன்முறையாக, எந்த ஒரு மத்திய அரசு துறையானாலும் அது தனது செயல்திட்டத்தில் சுகாதாரத்திற்கே முதல் இடம் அளிக்கிறது. ஒவ்வொருவரும் எளிதில் சுகாதார வசதிகளைப் பெறும் வகையில் பொது பட்ஜெட்டிலும் சுகாதாரத் துறைக்கு சிறப்பு கவனம் தரப்பட்டு உள்ளது. நாட்டில் 2014ல் இருந்து 6 எய்ம்ஸ் மருத்துவமனைகள் முழுமையாகச் செயல்பாட்டில் இருக்கின்றன. 16 எய்ம்ஸ் மருத்துவமனைகளை தொடங்கும் பணியானது பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளது. அதே போன்று மருத்துவக் கல்வியும் பலருக்கும் கிடைக்கும் வகையில் எம்பிபிஎஸ் இடங்கள் 53 சதவிகிதமும் முதுநிலை படிப்புக்கான இடங்கள் 80 சதவிகிதமும் அதிகரிக்கப்பட்டு உள்ளன. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை நிர்மாணித்தல், ஆயுஷ் துறை மூலம் நோய்களின் முன்தடுப்புக்கான நடவடிக்கைகள் ஆகியன அரசின் உயர் முன்னுரிமை பெற்றவையாக உள்ளன. இதன் பயனாக நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் கூட சுகாதாரச் சேவைகள் இப்போது கிடைக்கின்றன. இது கோவிட்-19க்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது. சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள் சாதனை வேகத்தில் தடுப்பூசி இயக்கத்தை மேற்கொள்ள இந்தியாவுக்கு உதவுகின்றன. இதுபோன்ற பெருந்தொற்று எதிர்காலத்தில் ஏற்பட்டால் அதைத் திறம்பட சமாளிக்கும் விரிவான சுகாதார அமைப்பு முறையை உருவாக்குவதில் இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்கள் கோவிட் தடுப்பூசியைப் பொறுத்த அளவில் "சூப்பர் மாதங்கள்" ஆகும். இந்த வேகம் சிறிதும் குறையாது. தடுப்பூசி இயக்கத்தின் அதி வேகம் இந்த ஆண்டுக்குள் தகுதி வாய்ந்த மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் திறன் இந்தியாவுக்கு உள்ளதை எடுத்துக்காட்டுகிறது. அதைப் பூர்த்தி செய்வதை நோக்கி நாடு வேகமாகப் பயணிக்கிறது. ■

# “தடுப்பூசி செலுத்துவதில் சாதனை படைத்துள்ளது இந்தியா, தடுப்பூசி உற்பத்தியில் உலகின் மிகப்பெரும் மையமாக விரைவில் மாற உள்ளது”



**செப்டம்பர் 17-ல் ஒரே நாளில் 2.5 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பூசிகளை செலுத்தியதன் மூலம், தடுப்பூசி போடும் பணிகள் ஆயுதமாக மாறியுள்ளது. கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலைக்கு மத்தியில், 18 வயதுக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. அப்போது, பல்வேறு பகுதிகளில் போதிய அளவில் தடுப்பூசி கிடைக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இந்தப் பற்றாக்குறையை அரசு சரிசெய்ததோடு மட்டுமல்லாமல், ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையான காலத்தில் 6-க்கும் மேற்பட்ட முறை ஒரே நாளில் ஒரு கோடிக்கும் மேலான தடுப்பூசிகள் போடப்பட்டன. இதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் திறமையான மற்றும் தகுதியான தலைமையே காரணம். ஒவ்வொரு நாளைக் கடக்கும்போதும், இந்தியாவில் மேற்கொள்ளப்படும் உலகின் மிகப்பெரும் இலவச தடுப்பூசிப் பணிகளில் புதிய சாதனைகள் படைக்கப்பட்டன. இதுகுறித்து கருத்து தெரிவித்த மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, “இந்தியாவில் வயதுவந்த 93 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவது என்ற இலக்கை விரைவில் எட்ட உள்ளோம். தடுப்பூசி மைத்ரி மூலம், உலகின் மிகப்பெரும் கொரோனா தடுப்பூசி உற்பத்தி மையமாக இந்தியா மாற உள்ளது,” என்றார். நியூ இந்தியா சமாச்சார் இதழின் கன்சல்டிங் எடிட்டர் சந்தோஷ்குமார், உதவி கன்சல்டிங் எடிட்டர் விபோர் சர்மா ஆகியோருக்கு சிறப்பு பேட்டியளித்த மத்திய அமைச்சர் மாண்டவியா, இந்தியாவின் தடுப்பூசி பிரச்சாரத்தின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் விரிவாக பேசினார். இந்த பேட்டியிலிருந்து முக்கிய தகவல்களை தற்போது காணலாம்..**

Q A

**கேள்வி: கொரோனாவுக்கு எதிரான போரில், உலகின் மிகப்பெரும் வயது வந்தோருக்கான தடுப்பூசி பிரச்சாரத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பயணத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்:** ஒரே நாளில் 2.5 கோடி பேருக்கு தடுப்பூசி செலுத்துவதை உலகில் இதற்கு முன்னதாக வேறு எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாளன்று, கொரோனாவிலிருந்து தனது மக்களுக்கு பாதுகாப்பு கவசம் அளித்து இந்தியா இந்த சாதனையை படைத்தது. இதற்காக வேறு எங்காவது தடுப்பூசி போடும் வேகம் குறைந்துவிட்டது என்று கருதக் கூடாது. செப்டம்பர் 16-ல் 66 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட்டோம். செப்டம்பர் 18-ல் 88 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஆகஸ்ட்-செப்டம்பர் காலத்தில் ஒரே நாளில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி என்ற சாதனை 6 முறை நிகழ்த்தப்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதில் நமது தினசரி சதவீதம், நிலையாக உள்ளது. தற்போதைய நிலையில், தேவைப்படும் மாநிலங்களுக்கு தடுப்பூசியை நாம் விநியோகித்து வருகிறோம்.

> “கொரோனாவிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் மிகவும் முக்கிய அம்சமாக தடுப்பூசி திகழ்கிறது. சில காரணங்களுக்காக இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள், உங்களது தனிப்பட்ட உடல்நலனில் மட்டுமல்லாது, உங்களைச் சுற்றியுள்ளவர்களின் நலனுக்கும் நீங்கள் பொறுப்பு என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று கூற விரும்புகிறேன். எனவே, எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள். தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம், கொரோனாவுக்கு எதிரான இந்தியாவின் பிரச்சாரத்தில் நிச்சயமாக உங்களது பங்களிப்பைச் செய்ய முடியும்.
>
> -மன்சுக் மாண்டவியா
> மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர்

**கேள்வி:** **ஒட்டுமொத்த உலகிலும் தனது மக்களுக்கு எவ்வளவு வேகத்தில் தடுப்பூசி போடுவதை உறுதிப்படுத்துகிறோமோ, அதில்தான் தலைமையின் திறன் முடிவுசெய்யப்படுகிறது. நாடு முழுவதும் எப்போது தடுப்பூசி போடும் பணிகள் நிறைவடையும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இதற்கு இலக்கு ஏதாவது நிர்ணயித்துள்ளீர்களா?**

**பதில்:** செப்டம்பர் மாத இறுதியில், சுமார் 89 கோடி மக்களுக்கு குறைந்தபட்சம் ஒரு தவணை தடுப்பூசி போட்டுள்ளோம். நாட்டில் உள்ள தகுதிவாய்ந்த மக்களில் 70% பேருக்கு முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 25 சதவீதத்துக்கும் மேற்பட்டோர், இரண்டு தவணை தடுப்பூசியையும் போட்டுக் கொண்டுள்ளனர். உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் தடுப்பூசி போடப்படும் புள்ளி விவரங்களை நீங்கள் பாருங்கள். வளர்ந்த நாடுகளில் கூட, 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள், முதல் தவணை தடுப்பூசியைக் கூட பெறவில்லை. அமெரிக்காவில் 57% பேர் மட்டுமே முதல் தவணை தடுப்பூசியை போட்டுக் கொண்டுள்ளனர். வெறும் 80 லட்சம் மக்கள்தொகையைக் கொண்ட இஸ்ரேலில் கூட, 82 சதவீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி போட முடிந்தது. இந்தியாவில் உள்ள வயதுவந்த 93 கோடி மக்களுக்கும் தடுப்பூசி போடும் இலக்கை நிறைவேற்ற நாம் அதிவேகமாக முன்னேறி வருகிறோம். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், உலகின் மிகப்பெரும் தடுப்பூசி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்களுக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் தடுப்பூசி போடுவதே நமது இலக்கு. இதற்கு எந்தவொரு தேதியையும் நிர்ணயம் செய்யவில்லை. ஏனெனில், இது மக்களைப் பொருத்ததுதான். எனினும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் முயற்சிகளின் மூலம், மக்களிடையேயான விழிப்புணர்வு அதிகமாக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் அதிவேகமாக தடுப்பூசி போட்டுக் கொள்கிறார்கள் என்று நாங்கள் உணர்கிறோம்.

**கேள்வி:** **பொதுவாக, தடுப்பூசியை கண்டுபிடிப்பதற்கு மிக நீண்டகாலம் பிடிக்கும். உள்நாட்டிலேயே தடுப்பூசியை இந்தியா இவ்வளவு விரைவில் கண்டுபிடித்ததைப் பார்த்து, பல்வேறு நாடுகளும் ஆச்சரியம் அடைந்தன. தடுப்பூசி உற்பத்தி பயணம் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** இந்தியாவில் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பூசி போடுவதன் அனைத்து செயல்பாடுகளையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக, தடுப்பூசி தயாரிக்கப்பட்டு, பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை ஆராய வேண்டும். அதன்பிறகே சாதாரண மக்களுக்கு தடுப்பூசி போட அனுமதிக்கப்படும். இவை அனைத்தையும் செய்வதற்கு 10 ஆண்டுகள் வரை பிடித்துக் கொள்ளும். எனினும், பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனை மூலம், நாட்டில் முதலாவது பொது முடக்கமும், ஏழைகள் நலத் திட்டமும் அறிவிக்கப்பட்டு, சில நாட்களிலேயே தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்கு ரூ.900 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் உயிரி தொழில்நுட்பத் துறை பணியாற்றத் தொடங்கியது. மருந்து ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு நிதி ஆதரவு வழங்கப்பட்டது. ஆராய்ச்சிக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் உதவியது. இதன்மூலம், கோவாக்சினை நாம் தயாரித்தோம். சீரம் நிறுவனத்துடன் அஸ்ட்ராஜெனீகா நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டது. இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை சீரம் நிறுவனத்துக்கு அஸ்ட்ராஜெனீகா வழங்கியது. இதன்மூலம், கோவிஷீல்டு கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வொன்றையும் பிரதமரே ஆய்வுசெய்தார். அனைத்து நிறுவனங்களின் ஆலைகளுக்கும் பிரதமரே நேரில் சென்றார். விஞ்ஞானிகளையும் ஊக்குவித்தார்.

**கேள்வி:** **கொரோனா இரண்டாவது அலைக்கு மத்தியில், மே 1-ல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடும் திட்டம் தொடங்கப்பட்டபோது, போதிய அளவில் தடுப்பூசி இல்லை என்று பலரும் குற்றம்சாட்டினர். இன்று, ஒரே நாளில் கோடிக்கணக்கானோருக்கு தடுப்பூசி போடப்படுகிறது. இந்த நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீண்டுவந்தீர்கள்?**

**பதில்:** ஏப்ரல் 10-ல் புதுதில்லியில் உள்ள ராம் மனோகர் லோஹியா மருத்துவமனைக்கு சென்றபோது, தடுப்பூசி போட்டுக் கொள்ள யாரும் இல்லை என்பதைப் பார்த்தேன். தடுப்பூசிகள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. இங்கு ஒவ்வொன்றிலும் அரசியல் உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி ஏன் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதுபோன்ற சூழ்நிலையில், திடீரென இரண்டாவது அலை தாக்கியது. இரண்டாவது அலை தாக்கியதும், தடுப்பூசியின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்துகொண்டனர். தடுப்பூசி மையங்களில் கூட்டம் அலைமோதியது. அந்த நேரத்தில் தடுப்பூசி போட்டுக் கொள்வது மிகவும் முக்கியமானதாக இருந்தது. நாங்கள் ஏற்கனவே தடுப்பூசியை தயாரித்திருந்தோம். இதன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற சூழலில், உற்பத்தி நிறுவனங்களுக்கு நானே நான்கு நாட்கள் பயணம் மேற்கொண்டேன். அவர்களுக்கு தேவைப்படும் உதவிகள் குறித்த அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொண்டேன்.

அதன்பிறகு, அவர்களுக்குத் தேவையான அனைத்தும்

Q&A

**தடுப்பூசி பிரச்சாரம் வெற்றிகரமாக அமைவதில், அதனை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதி என்பது முக்கியமானது. ஆய்வகங்களில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளை, மக்களுக்கு கொண்டுசேர்ப்பது வரை பல்வேறு வகையான பணிகள் உள்ளன. இந்தியாவில் தடுப்பூசியை கண்டுபிடிப்பதற்கு முன்னதாகவே, அதற்கான தயார்படுத்துதல் நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறதே?**

இது மிகவும் முக்கியமானது. இதில், அதிக ஆர்வம் தேவைப்படுகிறது. தடுப்பூசி பணிகள் தொடங்குவதற்கு முன்னதாகவே, அதனை கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து, மாநிலங்களுக்கு உரிய நேரத்தில் விநியோகிப்பது, குளிரூட்டி பராமரிப்பு, கண்காணிப்பு ஆகியவை குறித்து ஆய்வுசெய்யப்பட்டது. எந்த வயதினருக்கு எந்த நேரத்தில் தடுப்பூசி போடுவது என அனைத்து விவகாரங்களிலும் முன்கூட்டியே தயார்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவே, குளிரூட்டி பாதுகாக்கும் வழிமுறைகள் போதிய அளவில் இல்லாமல் ஒரு தடுப்பூசியாவது வீணானது என்று நீங்கள் இதுவரை கேள்விப்படவில்லை. விமான நிலையத்திலிருந்து முதல் விநியோகத்தை மேற்கொண்டு, அதனை ஒரு லட்சத்து 10 ஆயிரம் தடுப்பூசி மையங்களிலும் விநியோகிப்பதற்கான ஒவ்வொரு சவாலையும் எதிர்கொள்ள தயார்படுத்திக் கொண்டோம். இதன் காரணமாகவே, இதனை நம்மால் எளிதில் செய்ய முடிந்தது.

Q&A




**கேள்வி:** **தொழில்நுட்பம் குறித்த பிரதமர் நரேந்திர மோடியின் பார்வை மிகவும் தெளிவாக உள்ளது. ஒவ்வொரு திட்டத்திலும் தொழில்நுட்பத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார். தடுப்பூசிக்கான பணிகள் அனைத்தும் கோவின் வலைதளம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஒட்டுமொத்த உலகமும் பாராட்டு தெரிவித்தது. இதனை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில்:** தொழில்நுட்பத்தின் உதவி அனைத்து இடங்களிலும் உள்ளன. கோவின் தளம் மூலம் நமக்கு கிடைத்த உதவி, உண்மையில் வரவேற்கத்தக்கது. ஒரே நாளில் 2.5 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. கோவின் தளம் இல்லாவிட்டால், எவ்வாறு கணக்கு வைத்துக் கொள்ள முடியும்? உங்களுக்குத் தேவையான தடுப்பூசி சான்றிதழை எவ்வாறு வழங்க முடியும்? விமான நிலையத்தில் சான்றிதழை கேட்கிறார்கள். உங்களது மொபைலில் உள்ள செயலி மூலமாகவே இதனை உடனடியாக காண்பிக்க முடியும். முதல் தவணை தடுப்பூசி போட்டுக் கொண்டிருந்தால், இரண்டாவது தவணை தடுப்பூசிக்கான நினைவூட்டல் வரும். இது தொழில்நுட்பத்தின் அற்புதம். உலகின் எதிர்காலம், தொழில்நுட்பத்தின் அடிப்படையிலானது. இதன் காரணமாகவே, தொழில்நுட்பத்தின் மீது பிரதமர் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்.

வழங்கப்பட்டது. ஒரு கோடி மருந்துகள் உற்பத்தித் திறன் கொண்ட பாரத் பயோடெக் நிறுவனத்தை, மற்ற உற்பத்தியாளர்களுடன் இணைந்து செயல்பட நாங்கள் உதவிசெய்தோம். இது உற்பத்தியை அதிவேகத்தில் அதிகரிக்க உதவியது. இந்த நடவடிக்கையின் மூலம், செப்டம்பர் மாதத்தில் 23.51 கோடி மருந்துகளைப் பெற்றோம். அக்டோபர் மாதத்தில் 29 கோடி மருந்துகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 22 கோடி மருந்துகளை சீரம் நிறுவனமும், 6 கோடி மருந்துகளை பாரத் பயோடெக் நிறுவனமும், ஒரு கோடி மருந்துகளை ஜிடஸ் காடிலா நிறுவனமும் நமக்கு வழங்க உள்ளன. இதன்மூலம், நாள்தோறும் ஒரு கோடி மக்களுக்கு நம்மால் தடுப்பூசி போட முடியும். வரும் நாட்களில் உலகின் மிகப்பெரும் தடுப்பூசி ஏற்றுமதி மையமாக இந்தியா மாறும் என்று நம்பிக்கையுடன் நான் உங்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தடுப்பூசி ஏற்றுமதி சந்தைக்கு நாம் வரும்போது, தடுப்பூசி சந்தையில் முதலிடத்தில் நாம் இருப்போம். ஏனெனில், நமது தடுப்பூசி மருந்தின் விலை இரண்டரை டாலர்களாக உள்ளது. இதுவே மற்ற நிறுவன மருந்துகளின் விலை 10-20 டாலர்களாக உள்ளன. வேக்சின் மைத்ரி திட்டத்தின்கீழ், தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளோம். நவம்பர், டிசம்பர் மாதங்களில் அதிக அளவில் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய முடியும்.

**Q** **கேள்வி:** **கொரோனாவுக்கு எதிரான போரில் தடுப்பூசிகளை தயாரிப்பதில் இந்தியா பாராட்டைப் பெற்றுள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**A** **பதில்:** உலகின் பாராட்டுக்களை இந்தியா பெறுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது, தடுப்பூசி உற்பத்தி நேரத்தில் பிரதமர் மட்டத்தில் தலையீடு இருப்பது, இரண்டாவது- தனது விஞ்ஞானிகள் மீது இந்தியா நம்பிக்கை வைத்தது. மூன்றாவதாக, நமது நிறுவனங்களை நாம் நம்புகிறோம். நமது நிறுவனங்கள் மிகப்பெரும் அளவில் தடுப்பூசிகளை வழங்கின. டிசம்பர் மாதம் முதல், நமக்கு ஒவ்வொரு மாதமும் 40 கோடி தடுப்பூசிகள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். உலகில் இன்று நெருக்கடி நிலவுகிறது. ஏராளமான நிறுவனங்கள் இருந்தாலும், அவர்களது உற்பத்தி குறைவாகவே உள்ளது. சீரம் நிறுவனம் மட்டும், ஒவ்வொரு மாதமும் 22 கோடி மருந்துகளை வழங்குகிறது. கோவாக்சின் உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. உலகுக்கு கொரோனா தடுப்பூசி தேவை.

> “
> தடுப்பூசிக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னதாகவே, தடுப்பூசிகளை கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து வசதி, குளிரூட்டி அமைப்பு மற்றும் பிற வசதிகள் என தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபடும் நமது நிறுவனங்களுக்கான அடிப்படை ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு பணியையும் பிரதமர் நரேந்திர மோடியே கண்காணித்தார். இதன் காரணமாகவே, உலகின் மற்ற எந்த நாட்டையும்விட, இந்தியாவில் தடுப்பூசி போடுவதன் சராசரி இன்று சிறப்பாக உள்ளது.

இதன் காரணமாக, இந்தியா பாராட்டப்படுகிறது.

**Q** **கேள்வி:** **முதலாவது அலையின்போது, உலகுக்கே மருந்து வழங்கும் பணியை இந்தியா மேற்கொண்டது. இதுகூட, ஒவ்வொரு சர்வதேச அமைப்பிலும் பாராட்டப்பட்டது. எனினும், இரண்டாவது அலை தாக்கியபோது, மருந்துகள் அதிகஅளவில் தேவைப்பட்டது. அப்போது, பற்றாக்குறை எவ்வாறு சரிசெய்யப்பட்டது?**

**A** **பதில்:** முதலாவது அலை வந்தபோது, நாட்டில் நம் முன்பு இரண்டு சூழ்நிலைகள் இருந்தன. முதலாவது, அந்த நேரத்தில் உலகில் மருந்துகள் இல்லை. திடீரென முதலாவது அலை வந்ததால் இந்த பாதிப்பு ஏற்பட்டது. பல்வேறு நாடுகளிலும் பாரசிட்டமால் போன்ற மருந்துகள் கூட, 10-15 நாட்களுக்கு இருக்கவில்லை. இதுபோன்ற சூழலில் உலகுக்கு மருந்துகளை விநியோகிக்க வேண்டியிருந்தது. மேலும், நமது தேவைகளும் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அந்த நேரத்தில், இந்தியாவில் ஊரடங்கு கூட அமல்படுத்தப்பட்டது.

ஊரடங்கு அமலில் இருந்தபோதும், உற்பத்திக்காக மருந்து நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டியிருந்தது. ஊரடங்கு காலத்தில், நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள்




தொடர்ந்து பணியாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகங்கள் செய்தன. இந்த அனைத்துக்கும் மத்தியில், நாட்டின் தேவையையும் கவனத்தில் கொண்டோம். அதோடு, 123 நாடுகளுக்கு மருந்துகள் அனுப்பிவைக்கப்பட்டன. இது நமது தேவைகளைவிட அதிகமாக இருந்தன. அந்த சமயத்தில், 64 நாடுகளைச் சேர்ந்த மக்கள், நரேந்திர மோடிக்கு டுவிட்டரில் நன்றி தெரிவித்தனர். ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு நன்றி தெரிவித்தார். இதேபோல, பலரும் கடிதங்களை அனுப்பினர். இரண்டாவது அலை தாக்கி, கொரோனா தொற்று பரவல் அதிகரிக்கத் தொடங்கியபோது, ரெம்டெசிவிர் ஊசி மருந்தின் தேவை அதிகரித்தது. அந்த நேரத்தில் ரெம்டெசிவிர் மருந்தை தயாரிக்கும் 7 நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. 7 நிறுவனங்களின் தினசரி உற்பத்தி அளவு, 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரை இருந்தது. அப்போது, 20 உற்பத்திப் பிரிவுகள் இருந்தன. இந்த நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, தினசரி உற்பத்தியை 30 ஆயிரத்திலிருந்து 3 லட்சத்து 25 ஆயிரமாக மே 15 வரையான ஒரு மாத காலத்தில் அதிகரிக்கப்பட்டது. ஒரே இரவில், புதிய உற்பத்தி பிரிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இறுதியாக, 64 உற்பத்தி மையங்கள் செயல்பாட்டுக்கு வந்தன. அனைவருக்கும் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பலரும் மருந்தை பதுக்கிவைக்கத் தொடங்கியதால், குறுகிய காலத்துக்கு ரெம்டெசிவிர் ஊசி மருந்து பற்றாக்குறை நிலவியது. இருந்தாலும், தேவைப்படும் அனைவருக்கும் மருந்து கிடைக்கச் செய்யப்பட்டது. ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் தயார்செய்யப்பட்டன. இதன்பிறகு, கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு மருந்துகளை எடுத்துக் கொண்டனர். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்ததும், கருப்பு பூஞ்சை தொற்று அதிகரித்தது. இதற்கு அம்போடெரிசின்-பி மருந்து தேவைப்பட்டது. இந்தியாவில் ஆண்டுக்கு 4,000 முதல் 5,000 வரை கருப்பு பூஞ்சை தொற்று என்ற அளவில் இருந்த நிலையில், ஒரே வாரத்தில் 5,000-ஆக அதிகரித்தது. இதற்கான மருந்துகள் இங்கு கிடைக்கவில்லை. மருந்து தயாரிப்புக்கான வழிமுறைகள் இல்லை. ஒரு நோயாளி 50 முதல் 150 ஊசிகளைப் போட்டுக் கொண்டார். ஒரு ஊசியின் விலை ரூ. 6,000 முதல் ரூ.7,000 வரை இருந்தது. இதனை இந்தியாவில் 3 நிறுவனங்கள் மட்டுமே உற்பத்தி செய்தன. நாங்கள் மேலும் 5 நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கினோம். இது காப்புரிமை பெற்ற மருந்து இல்லை என்பதால், இதனை தயாரிக்க முடிந்தவர்களெல்லாம் தயாரிக்கலாம். மருந்துகளை தயாரிப்பதற்கான இடுபொருட்களும் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டன. இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் 25 நாட்களுக்குள் முடிவடைந்தன. அம்போடெரிசின்-பி ஊசி மருந்தை வழங்குமாறு உலக நாடுகளுக்கு கோரிக்கை விடுத்தோம். உலகின் எங்கெல்லாம் அம்போடெரிசின்-பி மருந்து உள்ளதோ, அங்கிருந்து நாங்கள் கொண்டுவந்தோம். 12 லட்சம் ஊசி மருந்துகள் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டன. அப்போது கருத்து தெரிவித்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன், “முதலாவது அலையின்போது எங்களுக்கு இந்தியா உதவியதை நாங்கள் மறக்க மாட்டோம். இரண்டாவது அலையின்போது இந்தியாவுக்கு முழுமையாக உதவிசெய்வோம்,” என்றார். பல்வேறு வகையான மருந்துகள் தேவைப்பட்டபோதும், அதனை நோயாளிகளுக்கு எப்படியாவது வழங்க நடவடிக்கை எடுத்தோம். அதனை தொடர்ந்து கண்காணித்தோம்.

**Q கேள்வி: எதிர்காலத்தில் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடுவதற்கு என்ன மாதிரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன?**

**A பதில்:** தற்போதுதான், நமது நிறுவனங்களில் ஒன்று, குழந்தைகளுக்கான தடுப்பூசியை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. 2 வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான கோவாக்சின் மருந்து வழங்குவதற்கான பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. நோவாவாக் மருந்தின் பரிசோதனை நடைபெற்று வருகிறது. இதற்குப் பிறகு, வல்லுநர்களின் கருத்துக்கள் அடிப்படையில் முடிவை எடுக்க உள்ளோம். முதலாவதாக, வயது அதிகமான குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்படும். அதன்பிறகு, படிப்படியாக வயதைக் குறைத்து தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்படும்.

**Q கேள்வி: சுகாதாரத் துறை அமைச்சர் என்ற முறையில், இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு ஏதாவது செய்தி சொல்ல விரும்புகிறீர்களா?**

**A பதில்:** கொரோனாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக தடுப்பூசி திகழ்கிறது. சில காரணங்களுக்காக இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால், உங்களது தனிப்பட்ட உடல் ஆரோக்கியத்துடன், உங்களைச் சுற்றியுள்ள மற்ற மக்களின் நலனிலும் உங்களுக்கு பொறுப்பு உண்டு என்பதைத்தான். எனவே, எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள். கொரோனாவுக்கு எதிரான இந்தியாவின் போரில் பங்களிப்பை செய்யுங்கள்.




## ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம்

# இந்தியாவின் புதிய சுகாதார மாதிரி

**இன்று பெரும்பாலான மக்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை முதல், குறைந்த விலையில் மருந்துகள் வரை கிடைக்கிறது. இதேபோல, ரேஷன் முதல் நிர்வாகம் வரை எளிதாக கிடைக்கிறது. இதற்கு, கடந்த 7 ஆண்டுகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களே காரணம். இந்த முயற்சியின் ஓர் அங்கமாக, ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தை பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தொடங்கிவைத்தார். இது நாட்டில் சுகாதார வசதிகளை புரட்சிகரமானதாக மாற்றும். மேலும், புதிய சுகாதார மாதிரியின் கீழ், நோயாளிகள் மற்றும் சுகாதார சேவை அளிப்பவர்களின் வாழ்க்கை மிகவும் எளிதாக அமைகிறது.**

ஒருங்கிணைந்த கட்டமைப்பு மூலம், சாதாரண மக்களுக்கு எளிதான மற்றும் அணுகக் கூடிய வகையிலான வசதிகளை அளிப்பதே மத்திய அரசின் கொள்கைகளில் முக்கிய கருவாக அமைகிறது. குறைந்த செலவில் தரமான சேவை அளிப்பதோடு, ஆயுஷ்மான் பாரத் - பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம் என்பது இந்தியாவின் மிகவும் சிறந்த சுகாதாரத் துறை திட்டங்களில் ஒன்றாக அமைகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், 2 கோடிக்கும் மேற்பட்ட ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு இலவச சிகிச்சை கிடைத்துள்ளது. இதில், பாதி பேர் பெண்கள். இதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில், ஆயுஷ்மான் பாரத் - டிஜிட்டல் இயக்கம் என்ற பெயரில் புரட்சிகர நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இது அனைவருக்கும், எளிதில் கிடைக்கச் செய்யும் நோக்கத்திலான சுகாதார மாதிரியாக திகழ்கிறது. இதில், நோய்ப் பரவலை தடுப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் டிஜிட்டல் சுகாதார அடையாள அட்டை வழங்கப்படும். இது அவர்களது சுகாதாரக் கணக்காக இருக்கும். இதில், அவர்களது உடல்நல விவரங்கள், டிஜிட்டல் முறையில் சேமித்து வைக்கப்படும். ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கமானது, நாட்டில் சுகாதார அமைப்பில் மிகப்பெரும் மாற்றத்தை கொண்டுவருவதோடு, ஒவ்வொரு சுகாதார வசதியும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் சாதாரண மக்களுக்கு கிடைக்கும்.

ஆகஸ்ட் 15, 2020-ல் செங்கோட்டை முற்றத்திலிருந்து உரையாற்றிய பிரதமர், தேசிய டிஜிட்டல் சுகாதார பிரச்சாரம் என்ற மாதிரி திட்டத்தை அறிவித்தார். தொடக்கத்தில் இது ஆறு யூனியன் பிரதேசங்களில் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்போது தேசிய அளவில் அமல்படுத்தப்படுகிறது. சுருக்கமாக சொல்வதென்றால், சுகாதாரம் தொடர்பான அனைத்து தகவல்கள், தனிநபர்கள் மற்றும் அமைப்பை ஒரே தளத்தில் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாக டிஜிட்டல் சுகாதார இயக்கம் திகழ்கிறது.

### சிகிச்சை குறித்த கோப்புகளை எடுத்துச் செல்வதிலிருந்து சுதந்திரம்

நோயாளி ஒருவர், புதிய மருத்துவமனை அல்லது புதிய நகருக்கு செல்லும்போது, பழைய பரிசோதனைகளை மீண்டும் செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக, நோயாளிக்கும், மருத்துவர்களுக்கும் பெருமளவு நேரம் வீணாகிறது. அதற்கும் மேலாக, உரிய மருத்துவ அறிக்கைகள் இல்லாததால், உரிய சிகிச்சை கிடைப்பதில், தேவையில்லாமல் தாமதம் ஏற்படுகிறது. தற்போது நோயாளிகளின் அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் முறையில் சேமித்து வைப்பதால், அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும். இது சுகாதாரம் தொடர்பான அனைத்து தரப்பினரையும் ஒரே தளத்தில் கொண்டுவருகிறது. இதன்மூலம், நாட்டில் உள்ள ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் மிகப்பெரும் அளவில் பயனடைவார்கள். மற்றொரு சிறப்பம்சமாக, நாட்டில் உள்ள எந்தப் பகுதியிலும் தனது தாய்மொழியை

தெரிந்துகொண்டுள்ள மற்றும் புரிந்துகொள்ளும், தனது நோய்க்கு சிறப்பான சிகிச்சை அளிக்கும் அனுபவம் பெற்ற மருத்துவரை கண்டறிய முடியும். மருத்துவர்கள் மட்டுமல்லாது, சிறந்த முறையில் பரிசோதனை செய்துகொள்வதற்காக ஆய்வகங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றையும் எளிதாக அறிந்துகொள்ள முடியும்.

### சுகாதார தளத்தின் வளர்ச்சி

நாட்டில் உள்ள சுகாதார வசதிகளை வலுப்படுத்துவதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பிரச்சாரம், புதிய இயக்கத்தின் மூலம், புதிய கட்டத்தை எட்டியுள்ளது. புதிய இயக்கமானது, இந்தியாவில் உள்ள சுகாதார வசதிகளில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்தியோதயாவின் வழிகாட்டியான பண்டித் தீனதயாள் உபாத்யாயாவின் பிறந்த தினத்தில், தொடங்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டம், ரூ.5 லட்சம் வரை இலவசமாக சிகிச்சை பெற வழிவகை செய்கிறது. இதன் அடுத்தட்டமாக ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது, நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் சிறந்த மருத்துவ வசதிகளை வழங்கவும், சுகாதார கட்டமைப்பை ஏற்படுத்தவும் வழிவகை செய்கிறது. இந்த மாபெரும் திட்டத்தின் ஓர் அங்கமாக, நாட்டில் எய்ம்ஸ் போன்ற நவீன சுகாதார நிறுவனங்களின் மிகப்பெரும் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. 3 மக்களவைத் தொகுதிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வீதம் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. கிராம அளவில் சுகாதாரம் மற்றும் உடல்நல மையங்கள் மூலம் அடிப்படை சுகாதார கட்டமைப்பும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, இதுபோன்ற 80,000 மையங்கள் செயல்பாட்டில் உள்ளன. தற்போது ஆயுஷ்மான் பாரத்- டிஜிட்டல் இயக்கத்தின் மூலம், மருத்துவமனைகளில் வழிமுறைகள் எளிதாக்கப்படுவதுடன், வாழ்வதை எளிதாக்கும் நடவடிக்கைகளும் அதிகரிக்கும். சுகாதாரத் துறைக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டம், சுயசார்பு இந்தியாவை கட்டமைக்கும் உறுதியை வலுப்படுத்தும்.

### தொழில்நுட்பத்துடன் எதிர்காலத்துக்கு தயாராகிவருகிறது இந்தியா

சிறந்த ஆளுமைக்காக தொழில்நுட்பத்தை சிறப்பாக பயன்படுத்துவது மற்றும் அதன் மேம்பாடு ஆகியவை இந்தியாவில் உள்ள மக்களை மேம்படுத்துகிறது. நாட்டில் பெரும் பகுதி மக்களை டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஊக்குவிப்பதன் மூலம், டிஜிட்டல் இந்தியா பிரச்சாரம், மாபெரும் மாற்றத்துக்கான காரணியாக மாற உள்ளது. 130 கோடி ஆதார் எண்கள், 118 கோடி மொபைல் சந்தாதாரர்கள், 80 கோடி இணையதள பயன்பாட்டாளர்கள், 43 கோடி மக்கள் நிதி வங்கிக் கணக்குகள் உள்ளன. இதுபோன்ற மிகப்பெரும் கட்டமைப்பு, உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை. அரசின் உணவுதானியங்களை எளிதாகப் பெறுவதாக இருந்தாலும் சரி அல்லது எந்தவொரு நிர்வாகப் பணியாக இருந்தாலும் சரி, தொழில்நுட்பத்தின் பலன்களை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். எந்த நேரத்திலும், எந்தப் பகுதியிலும் டிஜிட்டல் பரிமாற்றம் மேற்கொள்வதை

### சிறப்பம்சங்கள் மற்றும் பலன்கள்

- நவீன சுகாதார கட்டமைப்பு முறை மூலம், குடிமக்களை மேம்படுத்துவது. குடிமக்கள் மற்றும் சுகாதாரத் துறை நிபுணர்களின் மருத்துவ ஆவணங்களை எளிதில் கிடைக்கச் செய்வது.
- மருத்துவ சேவையில் தனியார் துறையினருடன் இணைந்து செயல்படுவது. மருத்துவ சேவை வழங்குபவர்களை எளிதாக அணுகும் வகையில் செய்வது மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்தது.
- **சுகாதார அடையாள அட்டை:** தனிநபர்களின் உடல்நலன் குறித்த ஆவணங்களை பராமரிப்பதற்காக ஆதார் எண் மற்றும் மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்ட தனிப்பட்ட அடையாள அட்டை.
- **சுகாதாரத் துறை நிபுணர்களின் பதிவேடு:** பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், அவர்களது அனுபவங்கள் மற்றும் அதுதொடர்பான தகவல்களுடன் கூடிய தொகுப்பு..
- **மருத்துவமனைகளின் பதிவேடு:** நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் குறித்த தகவல்கள்.
- விண்ணப்பதாரரின் தனிப்பட்ட சுகாதார பதிவுகள்: தனிநபர்களுக்கு, தாங்களாகவே கையாளும் வகையிலான உடல்நலம் குறித்த ஆவணங்கள், ஆரோக்கிய சேது செயலியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.
- மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில், மருத்துவர்கள் மற்றும் சுகாதார மையங்களை எளிதாக கிடைக்கச் செய்வதை மேம்படுத்துவது
- இந்தத் திட்டம், தொலைதூரம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு சமமான வாய்ப்புகளை கிடைக்கச் செய்ய உதவும். அடிமட்ட அளவில் குறைந்த செலவில் மருத்துவ சேவைகள் கிடைக்கும்.
- தரவுகளின் ரகசியத்தைப் பாதுகாப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

உறுதிப்படுத்தும் யூபிஐ கட்டமைப்பு, இந்தியாவின் மிகப்பெரும் வெற்றிக்கான சரித்திரங்களில் ஒன்றாக உள்ளது. உலகும் கூட இதனை கணக்கில் கொண்டுள்ளது. அதேபோல, உலகின் மிகப்பெரும் கொரோனா தடுப்பூசி திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ள நிலையில், தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு பதிவுசெய்வதற்கான முதுகெலும்பாக கோவின் வலைதளம் மாறியுள்ளது. அனைவருக்கும் இலவச தடுப்பூசி என்ற அரசின் பிரச்சாரத்தின்கீழ், 90 கோடிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நிச்சயமாக, மிகப்பெரும் தீர்மானங்களை நிறைவேற்றவும், மிகப்பெரும் கனவுகளை நனவாக்கவும் சுதந்திர காலத்தில் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதற்கான பாதை மிகவும் முக்கியமானது. இதற்காக ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவத் துறையினர், மருத்துவர்கள், துணை மருத்துவர்கள், மருத்துவக் கல்வி நிறுவனங்கள் ஆகியவை புதிய முறைக்கு அதிவேகமாக மாறிக் கொள்ள வேண்டும். ■

டிஜிட்டல் சுகாதார இயக்க தொடக்க விழாவில் பிரதமர் ஆற்றிய உரையைக் கேட்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

# தற்போது வாகன-ட்ரோன் தொழில் துறையில் உற்பத்திக்காக ஊக்கத்தொகை

இந்தியாவை சுயசார்பு கொண்டதாக மாற்றுவதில் உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்காக இந்த ஆண்டுக்கான பொது பட்ஜெட்டில் 13 துறைகள் அடையாளம் காணப்பட்டு ரூ.1.97 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில், ரூ.37.5 லட்சம் கோடி அளவுக்கு கூடுதலாக உற்பத்தி ஏற்படும். இந்தத் துறைகள் அனைத்திலும் சேர்த்து ஒரு கோடிக்கும் மேலான கூடுதல் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். அண்மையில், வாகன தொழில் துறை மற்றும் ட்ரோன் நிறுவனங்களுக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தை மத்திய அமைச்சரவை அறிவித்தது. இது, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான மின்சார வாகனங்கள் மற்றும் ஹைட்ரஜன் வாயுவில் இயங்கும் வாகனங்களை நோக்கி இந்தியாவை அதிவேகமாக பயணிக்கச் செய்யும்.



**முடிவு: வாகனங்கள் மற்றும் ட்ரோன் தொழில் நிறுவனங்களுக்கு தற்போது உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை**

**தாக்கம்:** இது வாகன உற்பத்தி மற்றும் ட்ரோன் தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கும். மேலும், அதிநவீன, அதிக திறன்வாய்ந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு பதிப்பு இல்லாத வாகன தொழில்நுட்பங்களுக்கு ஊக்கம் அளிக்கும். இதற்காக, அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.26,058 கோடி ஊக்கத் தொகை வழங்கப்படும்.

- வாகன உற்பத்தி துறைக்கு ஆதரவு அளிப்பதன் மூலம், இந்தியாவில் உயர்தரமான அதிநவீன வாகன தொழில்நுட்பங்கள் கீழ்க்காணும் வழிகளில் ஊக்குவிக்கப்படும்:
- கூடுதலாக 7.6 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். புதிதாக ரூ.42,500 கோடி முதலீடுகள் கிடைக்கும். அடுத்த 5 ஆண்டுகளில் கூடுதலாக ரூ.2.3 லட்சம் கோடி உற்பத்தி ஏற்படும்.
- மின்சார வாகனங்கள் மற்றும் ஹைட்ரஜன் வாயுவில் இயங்கும் வாகனங்களுக்கு ஊக்கம் கிடைக்கும். தூய்மை இந்தியா திட்டம் ஊக்குவிக்கப்பட்டு, இந்தியாவின் உற்பத்தி திறன் விரிவாக்கம் செய்யப்படும். சர்வதேச வாகன வர்த்தகத்தில் இந்தியாவின் பங்களிப்பு அதிகரிக்கும்.
- வாகன தயாரிப்பு துறைக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்துடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அதிநவீன ரசாயன பிரிவு (ரூ.18,100 கோடி), மின்சார வாகனங்கள் உற்பத்தியை வேகமாக ஏற்றுக் கொள்தல் (ரூ.10,000 கோடி) ஆகியவற்றுக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தின் மூலம், பாரம்பரியமான படிம எரிபொருள் அடிப்படையிலான வாகனப் போக்குவரத்து கட்டமைப்பிலிருந்து இந்தியா மாற்றம் பெறும்.
- ட்ரோன் உற்பத்தி தொழில் துறை ஊக்குவிக்கப்படும். கீழ்க்காணும் வழிகளில் அதிநவீன தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்படும்:
- அடுத்த 3 ஆண்டுகளில் ரூ.5,000 கோடிக்கும் மேலான முதலீடு கிடைக்கும். ரூ.1,500 கோடிக்கும் மேலாக கூடுதல் உற்பத்தி ஏற்படும். 10,000-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**முடிவு: புதிய இந்தியாவுக்காக வலுவான தொலைத்தொடர்புத் துறையை கட்டமைப்பதற்காக தொலைத்தொடர்புத் துறையில் பல்வேறு கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல்**

**தாக்கம்:** இந்த சீர்திருத்தங்கள், வேலைவாய்ப்புகளை பாதுகாப்பதற்கான வழிவகைகளை செய்வதுடன், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இந்த சீர்திருத்தங்கள், ஆரோக்கியமான போட்டியை



ஏற்படுத்தி, நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்கும். இது தொலைத் தொடர்பு நிறுவனங்களின் மூலதன கையிருப்பை அதிகரிக்கச் செய்வதுடன், பணம் செலுத்துவதற்கான சுமையைக் குறைக்கும். இந்த சீர்திருத்தங்கள், தொலைத்தொடர்புத் துறையில் முதலீட்டை ஊக்குவிக்கும்.

- 9 கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் 5 செயல்பாடு அடிப்படையிலான சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மற்ற தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பண நிலுவையை வழங்க 4 ஆண்டுகள் வரை அவகாசம்.
- 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி. வேலைவாய்ப்பு, வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை ஊக்குவிக்க சீர்திருத்தங்கள். 4ஜி விரிவாக்கம், அனைவருக்குமான அகண்ட அலைவரிசை கிடைக்கச் செய்வது, 5ஜி-யில் முதலீடு ஆகியவை ஊக்குவிக்கப்படும். ■

# இந்தியாவின் வளர்ச்சியை சார்ந்திருக்கும் உலகின் வளர்ச்சி

*சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பு பெருமளவில் அதிகரித்துள்ளது, குறிப்பாக, கொரோனாவுக்குப் பிந்தைய காலத்தில், இந்தியாவை புதிய நம்பிக்கையுடன் உலகமே உற்றுநோக்குகிறது. செப்டம்பர் மாதத்தில் அமெரிக்காவில் பிரதமர் நரேந்திர மோடி 65 மணிநேரம் இருந்தபோது, 24 கூட்டங்களில் கலந்துகொண்டார். ஐநா தளத்தின் மூலம், உலகின் வளர்ச்சி என்பது, இந்தியாவின் வளர்ச்சியை சார்ந்து இருக்கிறது என்ற செய்தியை வெளியிட்டார்.*



ஐநா சபையில் பிரதமர் ஆற்றிய உரையைக் கேட்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஒரு நோக்கம் என்று இருந்தால், அது, எனது நாட்டை அழிக்க முடியாததாக இருக்கச் செய்வதுதான். எனது நாட்டை உலகம் நினைவில் கொள்ள வேண்டும், எனது நாட்டின் எதிர்காலத்தைப் பாருங்கள், மனித நலனுக்கான வழியைக் காண்பிக்கும் ஒரு நாடு என்று உலகமே பெருமையுடன் கூற வேண்டும். உலகத்தை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் திறன்பெற்றது இந்த நாடு. இது பிரதமர் நரேந்திர மோடியின் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல. உலகின் தலைவராக இந்தியாவை மாற்றுவதற்கான தீர்மானம். உலகுக்கே வழிகாட்டியாக இந்தியாவை உருவாக்க வேண்டும்

என்று சுவாமி விவேகானந்தர் கனவுகண்டார். இதற்கான முயற்சிகளை கடந்த 2014-ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தவுடனேயே பிரதமர் நரேந்திர மோடி தொடங்கினார். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியமானவை. இதன் காரணமாகவே, உலகின் மிகப்பெரும் நெருக்கடி காலத்தில், 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியா உதவியது. கொரோனா நெருக்கடி காலத்தில், உலகுக்கு தனது திறனை காட்டியதுடன், நெருக்கடியை எதிர்கொள்வதற்கான ஊக்கத்தையும் வழங்கியது.

பேச்சுவார்த்தை, மரியாதை அளிப்பது, கூட்டுறவு, அமைதி, ஒருங்கிணைந்த வளம் ஆகிய ஐந்து கொள்கைகள் அடிப்படையிலான பிரதமர் நரேந்திர மோடியின் வெளியுறவுக் கொள்கை மூலம், ஜி20, குவாட், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு, ஆசியான், கிழக்கு பொருளாதார கூட்டமைப்பு போன்ற சர்வதேச தளங்களில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, ஐநா பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு பிரதமர் தலைமைவகித்துள்ளார். மனிதசமூகத்துக்கு உதவும் வகையில் வலுவான, நவீன மற்றும் சுயசார்பு கொண்ட இந்தியாவை கட்டமைக்க வேண்டும் என்பதே பிரதமர் நரேந்திர மோடியின் கனவு. இதன் காரணமாகவே, செப்டம்பர் 22 முதல் 25-ம் தேதிவரையான பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம் மிகவும் வெற்றியடைந்தது. ஐநா சபையில் பேசிய பிரதமர், உலகுக்கு தலைமைவகிக்க இந்தியா தயாராக இருப்பதாக உலகுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். உண்மையான உணர்வுடன் சிறந்த மனிதவளங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்தியாவின் வளர்ச்சியின் மூலமே, உலகின் வளம் மற்றும் மேம்பாடு கிடைக்கும் என்று அவர் கூறினார்.

## இந்தியாவின் மனிதவளம், உலகின் பலம்

ஐநா சபையில் பேசிய பிரதமர், இந்தியாவின் மிகப்பெரும் மக்கள்தொகை, உலகுக்கு மனிதவளமாக இருப்பதாக தெரிவித்தார். ஜனநாயகத்தை முதன்மையாக கருதுவது இந்தியாவின் மிகப்பெரும் பாரம்பரியம் என்று குறிப்பிட்ட அவர், வேற்றுமை மற்றும் வலுவான ஜனநாயகத்துக்கான அடையாளமாக சுதந்திரத்தின் 75-ம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பது திகழ்வதாக கூறினார். நாட்டில் பல மொழிகள், நூற்றுக்கணக்கான பேச்சு வழக்குகள், பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகள், உணவு ஆகியவை வலுவான ஜனநாயகத்துக்கு சிறந்த உதாரணமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இன்று உலகின் ஒவ்வொரு ஆறாவது மனிதரும் இந்தியர் என்று அவர் கூறினார். இந்தியா வளர்ச்சியடையும்போது, உலகின் வளர்ச்சியும் ஊக்கம் பெறும். இதுகுறித்து கூறிய அவர், "இந்தியா வளரும்போது, உலகம் வளரும், இந்தியா சீர்திருத்தங்களைப் பெறும்போது, உலகமும் மாற்றம் பெறும்," என்றார். இந்த உணர்வால் உந்தப்பட்டு,

## இந்தியா - அமெரிக்கா இருதரப்பு மாநாடு

### இந்தோ -பசிபிக் மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து பேச்சு

இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் தலைமைவகித்தனர். இதுகுறித்து தெரிவித்த வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்த்தன் சிரிங்லா, "ஓவல் அலுவலகத்தில் இரு தலைவர்களுக்கும் இடையேயான சந்திப்பு, 60 நிமிடங்களுக்குப் பதிலாக 90 நிமிடங்களுக்கும் மேலாக நடைபெற்றது. இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு நல்லுறவை வலுப்படுத்தவும், இந்தியாவை மிகப்பெரும் பாதுகாப்புத் துறைக்கான கூட்டாளியாகவும் ஊக்குவிக்க தனது உறுதிப்பாட்டை அதிபர் பைடன் வெளிப்படுத்தினார். பாதுகாப்புத் துறையில் அதிநவீன தொழில் துறை ஒத்துழைப்பு வலுப்பட்டிருப்பதற்கு இரு தலைவர்களும் வரவேற்பு தெரிவித்தனர்," என்றார்.



**பிரதமர் மோடியின் அறிக்கை:**

- பதவியேற்றபிறகு, நீங்கள் (அதிபர் பைடன்), கொரோனா, பருவநிலை மாற்றம், குவாட் போன்ற விவகாரங்களில் கவனம் செலுத்துகிறீர்கள்.
- இந்த கிரகத்தின் அறங்காவலர்கள் நாம் என்று மகாத்மா காந்தி எப்போதுமே கூறுவார்கள். இந்த உணர்வு, இந்தியா - அமெரிக்கா இடையேயான நல்லுறவை வலுப்படுத்தும்.
- இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தகம், தனது தனிப்பட்ட முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. வர்த்தகத் துறையில் இந்த பத்தாண்டுகளில் பரஸ்பரம் உதவிக் கொள்ள முடியும்.
- அமெரிக்காவில் இருப்பதைப் பெற இந்தியா விரும்புகிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு அம்சங்கள், அமெரிக்காவுக்கு பயன் அளிக்கும்.
- இந்தியா- அமெரிக்கா இடையேயான நல்லுறவில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. ஜனநாயக பாரம்பரியங்கள் மற்றும் மதிப்புகளுக்கு நம்மை நாம் அர்ப்பணித்துள்ளோம்.

**அதிபர் பைடனின் அறிக்கை:**

- இந்தியா- அமெரிக்கா இடையேயான நல்லுறவு, பல்வேறு சர்வதேச சவால்களையும் தீர்க்க உதவும் என்று நான் நம்புகிறேன்.
- 2020-ம் ஆண்டில் இந்தியாவும், அமெரிக்காவும் மிகவும் நெருங்கிய நாடுகளாக இருக்கும் என்று 2006-ம் ஆண்டில் கூறினேன்.
- மும்பைக்கு தான் மேற்கொண்ட பயணத்தை பைடன் நினைவுகூர்ந்தார். அந்த நேரத்தில் அமெரிக்காவின் துணை அதிபராக அவர் இருந்தார்
- மும்பையில் தனக்கு உறவினர்கள் இருப்பதாக பைடன் நகைச்சுவையாக கூறினார். மும்பையில் உள்ள ஒரு நபரிடமிருந்து கடிதத்தைப் பெற்றார். அவரது பெயர் பைடன்.
- சுதந்திரமான மற்றும் வெளிப்படையான இந்தோ-பசிபிக் பகுதியை பேணுவது, கொரோனா முதல் பருவநிலை மாற்றம் வரை அனைத்தையும் எதிர்கொள்வது ஆகியவற்றுக்காக இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்த நான் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்.

இந்தியா-அமெரிக்கா இருதரப்பு பேச்சுவார்த்தையின்போது, பிரதமரின் பேசியதைக் கேட்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

### குவாட் உச்சி மாநாடு

## உலக அமைதி, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சு

- செப்டம்பர் 24-ல் நடைபெற்ற இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முக்கியத்துவம் வாய்ந்த நாற்கர பாதுகாப்பு பேச்சுவார்த்தையிலும் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார்.
- குவாட் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடியுடன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் யோஷிகிடே சுகா, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதில் தொடக்க உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி கூறும்போது -
- சர்வதேச நலனுக்கான சக்தியாக குவாட் அமைப்பு செயல்படும். இந்தோ-பசிபிக் பிராந்தியம் மற்றும் ஒட்டுமொத்த உலகிலும் அமைதி மற்றும் வளம் ஏற்படுவதை, குவாட் அமைப்பில் நமது ஒத்துழைப்பு உறுதிப்படுத்தும்.
- குவாட் தடுப்பூசி முயற்சியானது, இந்தோ-பசிபிக் நாடுகளுக்கு உதவும். பகிர்ந்தளிக்கப்பட்ட ஜனநாயக மதிப்புகளின் அடிப்படையில் முன்னோக்கிச் செல்ல குவாட் அமைப்பு முடிவுசெய்தது. விநியோக சங்கிலி, சர்வதேச பாதுகாப்பு, பருவநிலை மாற்றம், கொரோனா பெருந்தொற்று போன்ற பல்வேறு விவகாரங்களில் குவாட் அமைப்பு ஒருங்கிணைந்து செயல்படுகிறது.
- 2004-ல் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு, இந்தோ-பசிபிக் பிராந்தியத்துக்கு உதவுவதற்காக முதல் முறையாக நான்கு குவாட் நாடுகள் சந்தித்துப் பேசின. இன்று உலகம் கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக போராடும்போது, மனிதசமூகத்தின் நலனுக்காக மீண்டும் ஒரு முறை நாம் ஒன்றாக சேர்ந்துள்ளோம்.



குவாட் அமைப்பில் பிரதமர் ஆற்றிய உரையைக் கேட்க கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

முன்னோக்கிச்செல்வதற்கான மந்திரமாக சுயசார்பு இந்தியா பிரச்சாரம் திகழ்வதாகவும், இது உலகின் நம்பத்தகுந்த மற்றும் ஜனநாயக கூட்டாளியாக இந்தியாவை மாற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### கொரோனா பெருந்தொற்று காலத்தில் உலகின் பாதுகாவலராக மாறிய இந்தியா

கொரோனா என்ற வடிவில் 100 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரும் தொற்றை உலகம் எதிர்கொண்டுள்ளது. எனினும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இந்தியா மேற்கொண்ட புத்தாக்கங்கள், உலகுக்கு பயன்படும் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளி மருத்துவர்கள், புத்தாக்கத்தில் ஈடுபடுபவர்கள், பொறியாளர்கள், மேலாளர்கள் ஆகியோரை மனிதசமூகத்துக்கு சேவையாற்றவும், இந்திய ஜனநாயக மதிப்புகளுடன் தொடர்ந்து இருக்கவும் ஊக்குவிக்கிறது. சர்வதேச பொருளாதாரத்தை, தற்போது மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதை உலகுக்கான பாடமாக கொரோனா பெருந்தொற்று வழங்கியுள்ளது. ஐநா சபையில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் தடுப்பூசி விநியோக கட்டமைப்பான கோவின் மூலம், ஒரே நாளில் கோடிக்கணக்கானோருக்கு எவ்வாறு தடுப்பூசி வழங்க முடிந்தது என்பதனை எடுத்துரைத்தார். அப்போது அவர், சேவையாற்றுவதே தர்மம் என்று கருதும் இந்தியா, குறைந்த அளவிலான வளங்கள் இருந்தபோதிலும், தடுப்பூசியை கண்டுபிடிக்கவும், உற்பத்தி செய்யவும் இடையறாது பணியாற்றிவருகிறது. உலகின் முதலாவது டிஎன்ஏ தடுப்பூசியை இந்தியா உருவாக்கியுள்ளது. இதனை 12 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் வழங்க முடியும். கொரோனாவுக்கு நாசி வழியாக செலுத்தப்படும் தடுப்பூசியை தயாரிப்பதிலும் கூட இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார். மனிதசமூகத்தின் மீதான பொறுப்புணர்வை உணர்ந்து, மீண்டும் ஒரு முறை உலகில் தேவையான மக்களுக்கு தடுப்பூசியை இந்தியா வழங்கத் தொடங்கியுள்ளது என்றார். உலகில் உள்ள தடுப்பூசி உற்பத்தியாளர்கள், இந்தியாவுக்கு வந்து தடுப்பூசி தயாரிக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார். அறிவியல் அடிப்படையிலான நிலைப்பாடுகளை வலுப்படுத்த செயல்முறை கற்றலை இந்தியா ஊக்குவித்து வருவதாக அவர் தெரிவித்தார். பள்ளிகளில் ஆயிரக்கணக்கான அடல் ஆய்வகங்கள் திறக்கப்பட்டுள்ளன. புதிய கண்டுபிடிப்புகள், புதிய தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தனது

75-வது ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் வகையில், விண்வெளிக்கு 75 செயற்கைக்கோள்களை இந்தியா அனுப்ப உள்ளது. இதனை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இந்திய மாணவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்று பிரதமர் கூறினார்.

### சர்வதேச அரங்கில் இந்தியாவின் சாதனைகள்

ஒரு காலத்தில் ரயில் நிலையத்தில் உள்ள தேநீர் கடையில் தனது தந்தைக்கு உதவிய ஒரு சிறு குழந்தை, இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் ஐநா பொது சபையில் இன்று நான்காவது முறையாக உரையாற்றுவது என்பதே இந்திய ஜனநாயகத்தின் பலம் என்பதை உலகம் அறியச் செய்தவர் பிரதமர். குஜராத்தில் நீண்டகாலம் முதலமைச்சராக இருந்து, அதன்பிறகு, இந்தியப் பிரதமராக 7 ஆண்டுகாலம் இருந்துவரும் அவர், நாட்டு மக்களுக்கு சேவையாற்ற 20 ஆண்டுகளாக தன்னைத்தானே அர்ப்பணித்துள்ளார். அவர் பேசும்போது, கடைசி நிலையில் இருப்பவர்களுக்கும் வளர்ச்சி உறுதிசெய்யப்பட வேண்டும் என்ற பண்டித் தீனதயாள் உபாத்யாயா-வின் பொருளாதாரக் கொள்கையான அந்தியோதயா-வுக்கு இந்திய ஜனநாயகம் அர்ப்பணிக்கப்படுவதாக தெரிவித்தார். அதேபோல, அனைவருக்கும் வளர்ச்சி என்பது புதிய இந்தியாவின் முன்னுரிமையாக உள்ளது. இதன் காரணமாக, கடந்த 7 ஆண்டுகளில், இதுவரை வங்கிக் கணக்கு இல்லாமல் இருந்த 43 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், வங்கி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளனர். இதேபோல, 36 கோடிக்கும் மேற்பட்டோருக்கு காப்பீட்டு வசதி கிடைத்துள்ளது. இவர்கள் இதற்கு முன்னதாக இதுகுறித்து சிந்தித்தது கூட இல்லை. 50 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்ததன்மூலம், தரமான மருத்துவ சேவைகள் மூலம் அவர்களை இந்தியா இணைத்துள்ளது. இந்தியாவில் வீடில்லாமல் இருந்த 3 கோடி பேருக்கு நிரந்தர வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது, நீர் மாசுபாடு என்பது இந்தியாவுக்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த உலகுக்கும், குறிப்பாக பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளில் மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த சவாலை எதிர்கொள்ளும் வகையில், இந்தியாவில் 17 கோடிக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு குழாய்வழியாக தூய்மையான நீர் வழங்குவதற்கான மிகப்பெரும் பிரச்சாரம் தொடங்கப்பட்டது. எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்காகவும், தனது குடிமக்களுக்கு நிலம் மற்றும் சொத்து உரிமை மிகவும் முக்கியம் என்று உலகில் உள்ள பெரிய அமைப்புகள் அங்கீகரித்துள்ளன. உலகின் மிகப்பெரும் நாடுகளில், ஏராளமான மக்களுக்கு நிலம் மற்றும் வீட்டின் உரிமைகள் இல்லை. எனினும் இன்று, இந்தியாவில் உள்ள 6 லட்சத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் ட்ரோன்கள் மூலம் ஆய்வுசெய்து கோடிக்கணக்கான மக்களின் வீடுகள் மற்றும் நிலம் குறித்த டிஜிட்டல் ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

### தீவிரவாதத்துக்கு எதிராக வலிமையான நிலைப்பாடு

அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்து உலகுக்கு எடுத்துரைக்கும் நாடாக இந்தியா எப்போதுமே திகழ்ந்து வருகிறது. இதன் காரணமாக, ஐநா பொது சபையில் உரையாற்றிய பிரதமர், எந்தவொரு நாட்டின் பெயரையும் குறிப்பிடாமல், எந்தவொரு நாட்டின் மோசமான நிலையையும் தனது சுயநலத்துக்கான கருவியாகப் பயன்படுத்திவிடக் கூடாது என்று உலகுக்கு ஒரு தெளிவான செய்தியை எடுத்துரைத்தார். ஆப்கானிஸ்தானில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து உலகின் கவனத்தை ஈர்த்த அவர், அந்த நாட்டின் மக்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுபான்மையினருக்கு உதவி தேவைப்படுகிறது. இந்த விவகாரத்தில் ஒவ்வொருவரும் தங்களது கடமையை ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். தீவிரவாதத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தி, தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்த பிரதமர், தீவிரவாதம் என்பது அவர்களுக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தல் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தீவிரவாதத்தை பரப்பவும், தீவிரவாதத் தாக்குதலுக்கும் ஆப்கானிஸ்தான் மண்ணை பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியம் என்று அவர் கூறினார். கடல்சார் பாரம்பரியம் மற்றும் வளங்களை சரியான

## துணை அதிபர் கமலா ஹாரிஸுடன் சந்திப்பு

தனது அமெரிக்கப் பயணத்தின்போது, வாஷிங்டன் டிசி-யில் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிசை பிரதமர் நரேந்திர மோடி, செப்டம்பர் 23, 2021-ல் சந்தித்துப் பேசினார். இரு தலைவர்களும் தங்களது நாடுகளில் உள்ள கொரோனா சூழல் குறித்து விவாதித்தனர். இதில், அதிவேக தடுப்பூசி நடவடிக்கைகள் மூலம், பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், முக்கிய மருந்துகள், மருத்துவ மற்றும் மருத்துவக் கருவிகள் விநியோகம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்க இந்தியா மேற்கொண்டுவரும் தொடர் முயற்சிகள் மற்றும் அண்மையில் தொடங்கப்பட்ட தேசிய ஹைட்ரஜன் இயக்கம் குறித்து பிரதமர் பேசினார். இந்தியாவுக்கு வருமாறும் கமலா ஹாரிஸுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.



துணை அதிபர் கமலா ஹாரிஸுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தியதன் வீடியோ காட்சிகளைப் பார்க்க கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

## ஜப்பான் பிரதமர் சுகா யோஷிகிடே-வுடன் சந்திப்பு

ஜப்பான் பிரதமர் சுகா யோஷிகிடே-வுடன் பிரதமர் நேரில் நடத்தும் முதல் சந்திப்பாக இது இருந்தது. இரு தலைவர்களும் இரு நாடுகளுக்கும் இடையேயான பல்முனை நல்லுறவு குறித்து ஆய்வுசெய்தனர். ஆப்கானிஸ்தான் விவகாரம் உள்ளிட்ட அண்மைக்கால சர்வதேச மற்றும் பிராந்திய நிலவரங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் அனைவருக்குமான இந்தோ--பசிபிக் பிராந்தியம் இருக்க வேண்டும் என்ற தங்களது வாக்குறுதியை இருவரும் வலியுறுத்தினர். இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பு வளர்ந்து வருவதற்கு அவர்கள் வரவேற்பு தெரிவித்தனர். மும்பை-அகமதாபாத் இடையேயான அதிவிரைவு ரயில் திட்டத்தை உரிய நேரத்திலும், சிறப்பாகவும் முடிப்பதை ஊக்குவிப்பது என்ற தங்களது வாக்குறுதியை வெளிப்படுத்தினர்.



## ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசனுடன் சந்திப்பு

குவாட் தலைவர்கள் உச்சி மாநாட்டுக்கு இடையே வாஷிங்டன் டிசி-யில் செப்டம்பர் 23-ல் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசனுடன் பிரதமர் நரேந்திர மோடி இருதரப்பு பேச்சு நடத்தினார். இந்த சந்திப்பின்போது, பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். அண்மையில் நடைபெற்ற முதலாவது இந்தியா--ஆஸ்திரேலியா வெளியுறவு மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்களின் 2+2 பேச்சு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் இடையே உயர்மட்ட அளவில் வழக்கமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதற்கு அவர்கள் திருப்தியை வெளிப்படுத்தினர். வெளிப்படையான, தாராளமான, வளமான மற்றும் சட்டத்தின் அடிப்படையிலான இந்தோ--பசிபிக் பிராந்தியம் என்ற பரஸ்பர நலன் மற்றும் பொதுவான நோக்கத்தை நோக்கிச் செல்வதில் நெருங்கிய நல்லுறவை தொடர்வது என்பதில் இரு பிரதமர்களும் உறுதியை வெளிப்படுத்தினர்.



## புதிய இந்தியாவை கட்டமைப்பதற்கு உலகின் மிகப்பெரும் தொழில் நிறுவனங்கள் ஆதரவு

பிரதமர் நரேந்திர மோடி, தனது அமெரிக்க பயணத்தின் முதல் நாளில் மிகப்பெரும் 5 தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் தனித்தனியாக ஆலோசனை நடத்தினார். இதில், ஜெனரல் அடாமிக்ஸ் நிறுவனத்தின் விவேக் லால், அடோப் நிறுவனத்தின் சாந்தனு நாராயண், குவால்காம் நிறுவன தலைமை செயல் அதிகாரி கிறிஸ்டியானோ ஆர் ஆமன், ஃபர்ஸ்ட் சோலார் நிறுவனத்தின் மார்க் விட்மர், பிளாக்ஸ்டோனின் ஸ்டீபன் ஏ.ஸ்வார்ஸ்மான் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த சந்திப்புகளின்போது, இந்தியாவில் உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்த பிரதமர், முதலீட்டை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்தியாவின் தொலைத்தொடர்பு மற்றும் மின்னணுவியல் துறையில் மிகப்பெரும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார். மின்னணுவியல் அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்காக அண்மையில் தொடங்கப்பட்ட உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டம் குறித்தும், இந்தியாவில் செமிகண்டக்டர் விநியோக சங்கிலியை உருவாக்குவது குறித்தும் பிரதமர் விவாதித்தார். மேலும், இந்தியாவில் உள்ளூர் புத்தாக்க சூழலை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

**இந்தியாவிலிருந்து திருடி செல்லப்பட்ட 157 கலை மற்றும் பழங்காலப் பொருட்களை திரும்ப மீட்டுவந்தார் பிரதமர் மோடி**

அமெரிக்காவிலிருந்து 157 கலை மற்றும் பழங்காலப் பொருட்களை பிரதமர் மீட்டு வந்தார். இந்த கலைப் பொருட்களில் கலாச்சார கலைப் பொருட்கள் மற்றும் இந்து, புத்த மற்றும் ஜைன மதங்கள் தொடர்பான சிலைகளும் அடங்கும். இவற்றில் பெரும்பாலானவை 11-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரையும், கிமு காலத்தையும் சார்ந்தவை. இந்தியாவில் திருடப்பட்ட கலை மற்றும் பழங்காலப் பொருட்களை உலகம் முழுவதிலிருந்து மீட்டுவருவதற்காக மோடி அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் அடையாளமாக இது திகழ்கிறது. திருட்டு, சட்டவிரோத வர்த்தகம், கலாச்சாரப் பொருட்களை கடத்திச் செல்வது போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவது என்ற தங்களது வாக்குறுதிகளை பிரதமர் மோடியும், அதிபர் பைடனும் வலியுறுத்தினர்.



முறையில் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, வாழ்வாதாரமாக உள்ள சர்வதேச வர்த்தகத்தை உலகின் விரிவாக்க நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கான போட்டியிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்காக சர்வதேச சமூகம் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

### ஐநா சீர்திருத்தம் அவசியமானது

சரியான நேரத்தில் சரியான பணியை செய்யும்போது, அந்தப் பணியின் வெற்றியை நேரத்தால் மட்டுமே அழிக்க முடியும் என்று பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, இந்தியாவின் மாபெரும் தத்துவவாதியான ஆச்சார்யா சாணக்யா கூறியுள்ளார்.

இதனை குறிப்பிட்டுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஐநா சபை தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால், தனது திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்த வேண்டும்," என்றார். ஐநா சபையிலிருந்து பேசிய அவர், "இந்த அமைப்பு குறித்து பல்வேறு கேள்விகளும் இன்று எழுகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் போர்கள், தீவிரவாதம் மற்றும் ஆப்கானிஸ்தானில் நிலவும் பிரச்சினை ஆகியவை இந்தக் கேள்விகளை வலுவாக்குகின்றன. இந்த சூழலில், சர்வதேச சூழலுக்கு ஏற்ப ஐநா சபையை வலுப்படுத்த வேண்டும்," என்று வலியுறுத்தினார். ஒவ்வொருவரின் முயற்சிகள் மூலம், உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கம் அதிகரிக்கும். இது உலகை ஆரோக்கியமானதாக, பாதுகாப்பானதாக மற்றும் வளமானதாக மாற்றும் என்று அவர் கூறினார். ■

# சன்சத் தொலைக்காட்சி மூலம் ஜனநாயகத்தின் குரல் வலுவானதாக மாறும்




*தகவல் பரிமாற்றம் மற்றும் ஆலோசனைகள் மூலம் 21ம் நூற்றாண்டு புரட்சிகர மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. இதில், ஊடகங்களும், தொலைக்காட்சி அலைவரிசைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஜனநாயகத்தின் குரலை வலுவாக்கும் வகையில், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாக நாட்டின் 75-வது சுதந்திர ஆண்டில் சன்சத் டிவி என்ற பெயரில் லோக்சபா மற்றும் ராஜ்யசபா தொலைக்காட்சி அலைவரிசைகள் இணைக்கப்பட்டுள்ளன*

இந்திய நாடாளுமன்றம், ஜனநாயகத்தின் கோயிலாக உள்ளது. பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றதும், 2014-ம் ஆண்டில் நாடாளுமன்ற படிக்கட்டுகளுக்கு தலைவணங்கியதன் மூலம், அதன் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். கடந்த சில ஆண்டுகளில் நாடாளுமன்றப் பணியின் வேகம் மற்றும் வெளிப்படைத்தன்மை அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற அமைப்பு என்பது அரசியல் மட்டும் கிடையாது, நாட்டின் கோணத்தை தீர்மானிக்கும் கொள்கைகளும் உள்ளது என்பதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இந்த சிந்தனையுடன் லோக்சபா டிவி மற்றும் ராஜ்யசபா டிவி ஆகியவற்றை சன்சத் டிவி என்ற வடிவில் இணைப்பது என்று பிப்ரவரி 2021-ல் முடிவெடுக்கப்பட்டது. சர்வதேச ஜனநாயக தினம் மற்றும் தூர்தர்ஷன் தினத்தையொட்டி, செப்டம்பர் 15-ல் சன்சத் டிவி-யின் பயணம் தொடங்கியது. நாடாளுமன்ற அமைப்பை பொதுமக்களுக்கு வேகமாகவும், வலுவான முறையிலும் கொண்டுசெல்லும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அலைவரிசையை குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் தொடங்கிவைத்தனர். உலகின் மிகப்பெரும் ஜனநாயகமான இந்தியாவின் மக்களுக்கு

**சன்சத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் முக்கியமாக 4 பிரிவுகளில் இருக்கும்**

**01** நாடாளுமன்ற மற்றும் ஜனநாயக அமைப்புகளின் செயல்பாடுகள்

**02** திட்டங்கள்/ கொள்கைகளின் ஆளுமை மற்றும் செயல்பாடுகள்

**03** இந்தியாவின் வரலாறு மற்றும் கலாச்சாரம்

**04** நடப்பு விவகாரங்கள், முக்கியத்துவம் வாய்ந்தவை, பிரச்சினைகள்.

## சன்சத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

- **நாடாளுமன்றத்தில் இன்று:** நாடாளுமன்றத்தில் அந்த நாளின் பணிகள் குறித்த தகவல்கள்
- **அவையின் முக்கிய அம்சங்கள்:** நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்பாடுகள் குறித்த முக்கிய விவரங்களை எடுத்துரைப்பது
- **ஈகாம் சாட்:** இந்தத் தொடரில், அனைத்து மதங்களின் இணைப்புகளும் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகிறது என்பது குறித்து எடுத்துரைக்கப்படும்.
- **இந்தியாவை மாற்றியமைப்பது:** மாறும் இந்தியா குறித்த விவாதங்கள்.
- **பொருளாதார வழிமுறைகள்:** இதன்மூலம், அரசின் கொள்கைகள் எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றன என்பதை பார்வையாளர்கள் அறிந்துகொள்வார்கள்.
- **டூ தி பாயின்ட்:** இது பார்வையாளர்களுக்கு நாட்டில் உள்ள பிரபலமான தனிநபர்கள் குறித்து அறிமுகப்படுத்தும்.
- **பாதுகாவலர்கள்:** நாட்டின் உள்நாட்டு, பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் விவகாரங்கள் குறித்து எளிதான மொழியில் எடுத்துரைக்கும்.
- **வரலாறு:** இந்திய கலாச்சாரத்தின் ஆதாரங்கள்: நமது வளமான பாரம்பரியம் மற்றும் கொள்கைகள் குறித்து பார்வையாளர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்படும்.
- **எனது வரலாறு:** பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த சவால்கள் குறித்து மக்கள் அறிந்துகொள்ளச் செய்தல்
- **இந்தியாவின் புதிய தொழில்களுக்கான பயணம்:** இதில், நாட்டின் இளம் தொழிலதிபர்கள் அறிமுகப்படுத்தப்படுவார்கள்
- **75-ம் ஆண்டில் சுதந்திர இந்தியா:** நாட்டின் 75-வது ஆண்டு சுதந்திரத்தையொட்டி, பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமர் கிராந்தி, இவரும் நாயகரே என்ற பொருள் படும் 'யே பி நாயக்', சுதந்திரத்தின் 75 மைல்கல்கள், மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள், இந்தியாவுக்கு வழிகாட்டும் 75 சட்டங்கள் ஆகியவை இடம்பெறும்.
- **சட்டப்பேரவை விவாதங்கள்:** தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், மாநில சட்டப்பேரவைகளில் நடத்தப்பட்ட விவாதங்கள் குறித்த தகவல்கள் இடம்பெறும்.
- **உங்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள்:** நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாழ்க்கை தொடர்பான ஒவ்வொரு அம்சமும் விரிவாக எடுத்துரைக்கப்படும்.
- **பாரத் ஹா ரேனா வாலா ஹூன்:** நமது வரலாறு, கலை மற்றும் கலாச்சாரத்துக்கு ஒளியூட்டப்படும்.
- **துடிப்பான இந்தியா:** இந்த நிகழ்ச்சியில் அந்த வாரத்தின் நிகழ்வுகள் அனைத்தும் தொகுத்து வழங்கப்படும்.
- **அபிவ்யக்தி:** கலைஉலகைச் சேர்ந்த பிரபலமான கலைஞர்கள், அதன் சிறப்புகள் குறித்து எடுத்துரைப்பார்கள்
- **ஆரோக்கிய இந்தியா:** நோய் வராமல் தடுப்பது குறித்து பார்வையாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும்.
- **பொலிவுறு விவசாயம்:** வேளாண் துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், சாதனைகள் குறித்த தனிப்பட்ட தகவல்கள் இடம்பெறும்.
- **அறிவியல் கலை:** அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் குறித்து பார்வையாளர்களுக்கு எடுத்துரைக்கப்படும்.
- **ஹலோ இந்தியா ரவுண்ட்அப்:** இந்தியா மற்றும் உலகம் முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த தகவல்களை அளிக்கும்.
- **உலகின் ஜனநாயகம்:** மற்ற நாடுகளின் நாடாளுமன்றங்களில் எழுப்பப்பட்ட விவகாரங்கள் குறித்த தகவல்கள் இடம்பெறும்.
- **பிரபலங்களின் உரைகள்:** குறுகிய வீடியோக்களின் தொடராக இடம்பெறும். இதன்மூலம், பொதுமக்கள் தங்களது அறிவுப்புலமையை வளர்த்துக் கொள்ள முடியும்.

அர்ப்பணிக்கப்பட்ட சன்சத் அலைவரிசை, நாட்டின் 75-வது ஆண்டு சுதந்திர கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, நமது நாடாளுமன்றத்தின் சிறந்த பாரம்பரியங்களை ஊக்குவிக்கும் வகையில் தொடங்கிவைக்கப்பட்டது. இந்த அலைவரிசை, நாடாளுமன்ற நடவடிக்கைகளை சிறப்பான முறையில் எடுத்துரைப்பதுடன், நாட்டில் உள்ள மக்களுக்கு முக்கிய தகவல்களையும் அளிக்கும். மேலும், வளங்களை சிறப்பான முறையில் பயன்படுத்தச் செய்யும். ஒரு புறம் தரத்தை மேம்படுத்துவதுடன், மற்றொருபுறம் செலவைக் குறைக்கும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் சமூக செயல்பாடுகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில், புதிதாக நிகழ்ச்சிகள் இருக்கும். நாட்டின் வளர்ச்சிப் பயணம் குறித்து மக்கள் அறிந்துகொள்ளச் செய்வதுடன், சர்வதேச விவகாரங்கள் குறித்த செய்திகளையும் அளிக்கும்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஜனநாயகத்தின் அன்னையாக இந்தியா திகழ்கிறது. இது அமைப்பு மட்டுமல்ல, ஒரு சிந்தனை," என்றார். நாடாளுமன்ற தொலைக்காட்சியின் முக்கியத்துவம் குறித்து பேசிய பிரதமர், "சிறந்த மற்றும் உண்மையான தகவல்களுடன் மக்கள் தங்களைத் தாங்களே இணைத்துக் கொள்வார்கள். இது ஊடகத்துக்கு எந்த அளவுக்கு பொருந்துமோ, அதே அளவுக்கு நாட்டில் உள்ள நாடாளுமன்ற அமைப்புக்கும் பொருந்தும்," என்றார். "உள்ளடக்கமே இணைக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பொதுமக்கள் தங்களைத் தாங்களே இணைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். இதனை மனதில் கொண்டு, நாடாளுமன்ற தொலைக்காட்சியின் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி, நாட்டின் ஜனநாயக வேரை நிச்சயமாக மேலும் வலுப்படுத்தும். ■

வேளாண்மையை மேம்படுத்துவதற்கான அறிவியல் பயன்பாடு

# 35 மேம்பட்ட பயிர்கள் ஊட்டச்சத்து மற்றும் காலநிலை மாற்றத்தின் தீவிர சவால்களாய் சமாளிக்கும்

*சுகாதாரம், தொழில்துறை, வேளாண்மை என எதுவாக இருந்தாலும்- மத்திய அரசு வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தொன்மையான பழக்கங்களை, மரபுகளை உடைத்தெறிந்து, அறிவியலை ஊக்குவிப்பதன் மூலம் இந்தியாவை சுய சார்பு கொண்டதாக உருவாக்க வேகமாக நகர்கிறது. குறிப்பாக வேளாண் துறை புதுமைகளின் மூலம் முன்னேறுவதற்கான மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ள ஒரு துறையாகும். இதைக் கருத்தில் கொண்டு, முதலில் பயோஃபோர்டிஃபைட் உயிரி செறிவூட்டப்பட்டது போன்ற மேம்பட்ட வகைகளின் 70 பயிர்கள் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. இப்போது பிரதமர் நரேந்திர மோடி, சிறப்புப் பண்புகள் கொண்ட 35 வகையான பயிர்களை நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார். ஒருபுறம், இந்தப் பயிர்கள் காலநிலை மாற்றம் காரணமான சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவை. மறுபுறம், அவை ஊட்டச்சத்து குறைபாட்டை அகற்றுவதில் பயனுள்ளதாக இருக்கும்.*




கோவாவைச் சேர்ந்த தர்ஷனா பெட்னேகர் குழந்தையாக இருந்தபோது, விவசாயத்தில் தனது தந்தைக்கு உதவினார். பாரம்பரிய விவசாயத்தில் லாபம் கிடைத்ததால் அவள் இத்துறைக்கு ஈர்க்கப்பட்டாள். ஆனால் சென்ற ஆண்டு, கோவிட் பெருந்தொற்றுநோய் காலத்தின் போது பொதுமுடக்கம் காரணமாக அவளுக்கு புதிய பிரச்னைகள் எழுந்தன.

முன்பு தென்னை சாகுபடியிலிருந்து நல்ல லாபம் ஈட்ட முடிந்தது, அது வெகுவாகக் குறைந்துவிட்டது. இறுதியில், தர்ஷனா தேங்காய் பதப்படுத்துதல் நோக்கி நகர்ந்தார். இப்போது அவர் தேங்காய் உலர்த்தி, எண்ணெயைப் பிரித்தெடுத்து பின்னர் விற்கிறார். அவள் தேங்காய் எண்ணெய் லிட்டருக்கு 300 ரூபாய் என்று விற்கிறார். இந்த முயற்சி அவருக்கு புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளது. லிட்டருக்கு ரூ. 300 என விற்கப்படுகிற இந்த தேங்காய் எண்ணெய் முயற்சி, தர்ஷனுக்கு லாபகரமானதாக உள்ளது. இது மட்டுமல்ல. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தில் (ஐசிஏஆர்), பயிற்சி எடுத்த பிறகு தர்ஷனா இப்போது நெல் மற்றும் தக்காளி போன்ற பாரம்பரிய பயிர்களையும், மிளகாயையும் ஒரு புதிய வழியில் பயிர் செய்கிறார்.

தனக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலத்தில் பர்மீஸ் உரம் மண்புழு உரம் தயாரிக்கிறார். “பாரம்பரிய விவசாயத்திற்குப் பதிலாக உணவு பதப்படுத்துதலில் நிறைய லாபம் இருக்கிறது” என்கிறார் தர்ஷனா. எல்லாவற்றிற்கும் மேலாக, பிரதமர் கிசான் சம்மான் நிதி மற்றும் முறையான பயிற்சி அவருக்கு ஒரு புதிய

## சிறப்பு பண்புகளுடன் 35 பயிர் ரகங்கள்

இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் 2021 இல் பருவநிலை மாற்றம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட சிறப்பு பண்புகளுடன் பயிர் ரகங்களை உருவாக்கியுள்ளது 35 ரகங்களில் வறட்சியைத் தாங்கும் கொண்டைக்கடலை, வாடல் மற்றும் மலட்டுத்தன்மை எதிர்ப்புத்தன்மை கொண்ட துவரை, விரைவில் விளையக்கூடிய சோயாபீன், நோய் எதிர்ப்புத்தன்மை கொண்ட அரிசி வகைகள், உயிரி செறிவூட்டப்பட்ட கோதுமை, கம்பு, மக்காச்சோளம், கொண்டைக்கடலை, சீமைத்திணை, பக்வீட் - பாப்பரை, விங்க்ட் பீன் அவரை , ஃபாபா பீன் -மொச்சை ஆகியவையும் இதில் அடங்கும். சில பயிர்களில் காணப்படும், மனிதர்கள், விலங்குகளின் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கும், ஊட்டச்சத்துக்கு எதிரான காரணிகள் பற்றிய அம்சங்களையும் கருத்தில் கொள்ளக் கூடிய அம்சங்களைக் கொண்ட ரகங்களும் இதில் அடங்கும்.

### பிரதமர் நரேந்திர மோடியின் உரையின் சிறப்பம்சங்கள்:

- கடந்த 6-7 ஆண்டுகளில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வேளாண்மை தொடர்பான சவால்களுக்குத் தீர்வு காண முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றன. புதிய நிலைமைகளுக்கு ஏற்ற வகையிலான, குறிப்பாக மாறி வரும் காலநிலைகளுக்கு ஏற்ப விளையக்கூடிய அதிக சத்துள்ள விதைகள் மீது நம் கவனம் உள்ளது.
- கொரோனாவுடனான போராட்டத்திற்கிடையே கடந்த ஆண்டு, பல மாநிலங்களில், வெட்டுக்கிளி தாக்குதல் எப்படி இருந்தது என்று நாம் பார்த்தோம். இந்தியா நிறைய முயற்சிகளை மேற்கொண்டு இந்தத் தாக்குதலை நிறுத்தியது. விவசாயிகள் அதிக சேதத்திலிருந்து காப்பாற்றியது.
- விவசாயிகளுக்கு நீர் பாதுகாப்பு வழங்குவதற்காக, நாம் நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்கினோம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறது. பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள சுமார் 100 நீர்ப்பாசன திட்டங்களை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க, விதைகளின் புதிய வகைகள் அதிக மகசூலுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரித்ததுடன், (எம்எஸ்பி) மேலும் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் இதிலிருந்து பலன் பெற முடியும் வகையில் நாம் கொள்முதல் செயல்முறையையும் மேம்படுத்தினோம். ரபி பருவத்தில் 430 லட்சத்துக்கும் அதிகமான மெட்ரிக் டன் கோதுமை வாங்கப்பட்டது.
- விவசாயிகளை தொழில்நுட்பத்துடன் இணைக்க, அவர்கள் வங்கிகளிலிருந்து உதவி பெறுவதை நாம் எளிதாக்கியுள்ளோம். இன்று விவசாயிகளுக்கு மேலும் சிறந்த முறையில் வானிலை தகவல் கிடைக்கிறது. சமீபத்தில், ஒரு இயக்கத்தை நடத்தியதன் மூலம், இரண்டு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன
- காலநிலை மாற்றம் காரணமாக, புதிய வகை பூச்சிகள், புதிய நோய்கள், தொற்றுநோய்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் மனிதர்களின் உடல்நலனுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது கால்நடைகளும் பயிர்களும் கூட பாதிக்கப்படுகின்றன. இந்த அம்சங்கள் பற்றிய ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது அவசியம்.
- அறிவியல், அரசு, சமூகம் இணைந்து பணியாற்றும் போது, முடிவுகள் சிறப்பானதாக இருக்கும். விவசாயிகள் மற்றும் விஞ் ஞானிகளின் அத்தகையதொரு கூட்டணி, புதிய சவால்களைக் கையாள்வதில் நாட்டின் வலிமையைக் கூட்டும். பயிர் அடிப்படையிலான வருமானத்தை மட்டுமே சார்ந்திருக்கும் முறையிலிருந்து, விவசாயியை வெளியே எடுப்பதன் மூலம் மட்டுமே, அவர்களும் மதிப்பு கூட்டல் மற்றும் பிற விவசாய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள உத்வேகம் பெறுகிறார்கள்.
- அறிவியல் மற்றும் ஆராய்ச்சியின் தீர்வுகளுடன், தினை வகைகளையும் இதர தானியங்களின் வகைகளையும் மேம்படுத்துவது இப்போது அவசியமாகிறது. பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவற்றை வளர்க்கலாம் என்பதே இதன் நோக்கமாகும்.

பாதையைக் காட்டியுள்ளது. தர்ஷனா, என்பது உண்மையில், புதிய சிந்தனையின் சின்னம், அறிவியலை வேளாண்மையுடன் இணைத்து, புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இந்தியாவை சுயசார்பு பெறச் செய்வதே இதன் நோக்கம். நீண்டகால பாரம்பரிய நடைமுறைகளை புதுமையின் உதவியுடன் மட்டுமே மாற்ற முடியும். கடந்த 7 ஆண்டுகளில் இந்தியா இந்தப் பாதையில் முன்னேறி வருகிறது. ஐசிஏஆரால் உருவாக்கப்பட்ட 35 சிறப்பு தரம் மேம்படுத்தப்பட்ட வகைகளை செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதியன்று நாட்டிற்கு அர்ப்பணித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "எப்போது அறிவியல், அரசு, சமூகம் இணைந்து செயல்படுகின்றனவோ, அப்போது, அதன் முடிவுகள் சிறப்பாக இருக்கும். விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளிடையேயான அத்தகையதொரு கூட்டணி புதிய சவால்களை எதிர்கொள்ள நாட்டின் வலிமையை மேம்படுத்தும்" என்றார். இந்த வகையான பயிர்கள் இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சிலால் நிறைய ஆராய்ச்சிகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் பருவநிலை மாற்றம் மற்றும் பயிர்களில் ஊட்டச்சத்து குறைபாடு பாதிப்புகள் ஒழிக்கப்பட்டு விடும். ராய்பூரில் புதிதாகக் கட்டப்பட்ட உயிரியல் அழுத்த மேலாண்மை தேசிய அமைப்பு வளாகத்தையும் பிரதமர் திறந்து வைத்தார். அடிப்படை மற்றும் கொள்கைரீதியான ஆராய்ச்சி நடத்தவும், உயிரியல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணத் தேவையான மனித வளங்களை உருவாக்கவும், கொள்கை ஆதரவு வழங்கவும் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ■



# உதான்

## விமானப் பயணங்கள் சாமானிய மனிதனுக்கும் கிடைக்கச் செய்தல்

*'ஹவாய் சப்பல்' அணிந்த ஒருவர் 'ஹவாய் ஜஹாஸ்' (விமானத்தில்) பயணிப்பதைப் பார்க்க வேண்டும் என்பது என் கனவு. இந்தச் சொற்கள் சாமானிய மனிதனும் 2500 ரூபாய் மட்டுமே கொடுத்து விமானத்தில் பயணிக்க முடிய வேண்டும் என்பதை நிறைவேற்றிய பிரதமர் நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.*

பீகார், தர்பங்காவிலிருந்து ஒரு விமானத்தில் தன் தந்தையுடன் பயணம் செய்த முகுந்த் ஜா, ஒரு படத்தை ட்வீட் செய்து, "என் தந்தையுடன் நான் ஒரு விமானத்தில் ஏறுவது இதுவே முதல் முறை. தர்பங்காவுக்கு விமான நிலையம் கொடுத்த நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி". முகுந்தின் ட்வீட்டிற்கு பதிலளித்த, பிரதமர் நரேந்திர மோடி "இதை அறிந்ததில் மகிழ்ச்சி. விமானத் துறையைப் பொறுத்தவரை இணைப்பு மற்றும் வசதிகளை அதிகரிப்பதற்காக நாங்கள் பணியாற்றி வருகிறோம். தர்பங்கா விமான நிலையம் பீகாரின் முன்னேற்றத்திற்குக் கணிசமான பங்களித்து வருகிறது" என்று கூறினார்.

இது தனிப்பட்ட அனுபவத்தின் ஒரு எளிய வெளிப்பாடாகத் தோன்றலாம். ஆனால் இதை நாம் முழுமையாகப் பார்க்கும் போது உதான் திட்டம் நாட்டில் விமானப் பயணத்தை எவ்வாறு மாற்றியுள்ளது என்பதை இது தெரிவிக்கிறது

தர்பங்கா போன்ற சிறிய நகரத்தில் கூட, விமான நிலையம் நீண்ட காத்திருப்புக்குப் பிறகே வந்துள்ளது. இன்று, மேலும் ஒரு டஜன் விமானங்களுடன், தர்பங்கா, பல மாநிலங்களுடன், நேரடி விமான வழித்தடங்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. சாமானிய மனிதன் தானும் விமானத்தில் பறக்கும் வகையிலான கட்டணம் இருந்தால் பறக்கலாம் என்ற கனவு இப்போது நிறைவேறி விட்டது. இப்போது வெறும் 2500 ரூபாய் கட்டணத்தில் 500 கி.மீ பயணம் செய்ய முடியும். ஒரு கிமீக்கு சராசரியாக ₹ 5 செலவாகும். டாக்ஸியில் ₹ 10 செலுத்தி ஒரு கி.மீ. பயணம் செய்வதை விட இது மலிவானது,

### உதான் திட்டத்தின் துவக்கம்

நாட்டின் தேசிய சிவில் விமானப்போக்குவரத்துக் கொள்கை முதல் முறையாக 2016 ல் அறிவிக்கப்பட்டது. இதில் உதான் திட்டம் முன்னுரிமை திட்டங்களில் முதலிடத்தில் இருந்தது. உதான் என்பது "உதே தேஷ் கா ஆம் நாகரிக்" என்பதன் சுருக்கமாகும். "சாமானிய மக்களும் விமானப் பயணம் செய்ய முடியும்" என்பதே இதன் பொருளாகும். இந்தத் தொலை நோக்குப் பார்வையுடன் உதான் திட்டம் அக்டோபரில் தொடங்கப்பட்டது. உதான் திட்டத்தின் கீழ், ஏப்ரல் 2017 இல் பிரதமர் நரேந்திர மோடி, சிம்லா-டெல்லி விமானத்தை முதன்முதலாகக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். சிறிய

# உதான், விமானத் துறையை எவ்வாறு மாற்றியது?

## முன்பு

- 2013 ஆம் ஆண்டில், சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் இந்தியாவில் விமானப் போக்குவரத்து குறித்து விரிவான ஆய்வு நடத்தியது. இதில், விமான இணைப்பு நாட்டிலுள்ள குறிப்பிட்ட சில பெரிய நகரங்களில் மட்டுமே உள்ளது என்பது தெரியவந்தது. சிறிய மற்றும் நடுத்தர நகர மக்களுக்கு பயன் எதுவும் கிடைக்கவில்லை.
- விமான இணைப்பில் 65%, விமானப் போக்குவரத்தில் 61% இந்தியாவின் 6 முக்கிய மெட்ரோ நகரங்களில் குவிந்துள்ளது என்று 2015-16 ஆண்டுக்கான ஆய்வு தெரிவிக்கிறது.

## இப்போது

- முன்னர், 6 மெட்ரோ நகரங்களுக்கு இடையில் மட்டுமே விமான இணைப்பு இருந்தது. இப்போது இந்த சுமையின் 70 சதவீதம் சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் நோக்கி நகர்ந்துள்ளது.
- விமான போக்குவரத்து அதிகரித்துள்ளதையடுத்து, விமானங்களின் இயக்கச் செலவினம் உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் 12 முதல் 13 சதவிகிதம் வரை குறைந்துள்ளது. சிறு நகரங்களிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை 5 % அதிகரித்துள்ளது

## பிற துறைகளுக்கும் வாய்ப்பு

இது இணைப்பை மேம்படுத்தியுள்ளது; சுற்றுலாவுக்கு மட்டுமின்றி வர்த்தகம், வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கும் ஊக்கமளித்துள்ளது.





### வேலைவாய்ப்பு

விமான நிலைய செயல்பாடு, விமான பராமரிப்பு, விமான போக்குவரத்து கட்டுப்பாடு ஆகியவற்றுக்கும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிவில் விமானப்போக்குவரத்துத் துறையில், பணியாளர்- விமானம் விகிதம் 100: 1 ஆகக் கருதப்படுகிறது.இதன் பொருள் - கூடுதல் விமானமொன்று அறிமுகம் செய்யப்பட்டால், மேலும் 100 பேருக்கு வேலை கிடைக்கும்.

### வணிகம்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அறிக்கையொன்றின் படி சிறந்த விமான சேவை பொருளாதாரத்தை 3% அதிகரிக்கிறது; வேலைவாய்ப்பை 6 சதவீதம் அதிகரிக்கிறது. உதான் திட்டத்தின் கீழ் சிறிய நகரங்களில், வர்த்தகமும் பயனடைந்துள்ளன. உதாரணமாக, உதான் திட்டத்தின் கீழ், அகமதாபாத்-கிஷன்கர், இந்தூர்-கிஷன்கர், டெல்லி-கிஷன்கர், ஹைதராபாத்-கிஷங்கர் வழித்தடங்களில் விமான சேவை தொடங்கப்பட்டது. இது, கிஷன்கரின் வணிகம் 3 மடங்கு அதிகரிக்க வழிவகுத்தது.

### சுற்றுலா



உதான் திட்டத்தின் கீழ் சுற்றுலாவை ஊக்குவிக்க, 46 முக்கிய சுற்றுலாத்தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆக்ரா, உதய்பூர், வாரணாசி, கோவா போன்ற சுற்றுலாத் தலங்களுடன், அகர்தலா-ஐஸால் ஷில்லாங்-கொல்கத்தா, கவுகாத்தி-பெக்யோங், திமாபூர்--இம்பால் வழித்தடங்களில் வடகிழக்கில் உள்ள இடங்களும் உதான் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அகமதாபாத்தில் ஒற்றுமை சிலைக்கு முன் உள்ள இடத்தில் சபர்மதி ஆற்றில் நீர் ஏரோட்ரோம் தொடங்கப்பட்டது. உத்தரகாண்டில் உள்ள தெஹ்ரி அணை, தெலுங்கானா நாகார்ஜுனா சாகர், அந்தமான் நிக்கோபார் ஆகிய இடங்களில் ஏரோட்ரோம்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மற்றும் நடுத்தர நகரங்களை விமான சேவை மூலம் பெரிய நகரங்களுடன் இணைப்பதுதான் உதான் திட்டத்தின் நோக்கமாகும், உதான் திட்டத்தின் கீழ், 'நிலையான இறக்கை விமானம்' மூலம் ஒரு மணி நேர பயணத்திற்கு, அல்லது ஒரு ஹெலிகாப்டர் மூலம் அரை மணி நேரப் பயணம் செய்ய சுமார் 500 கி.மீ தூரத்திற்கு 2500 ரூபாய் என்று விமான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் விமான நிறுவனங்கள் விமான வழித்தடங்களுக்கு ஏலம் எடுக்கின்றன. மிகக்குறைந்த மானியம் கேட்கிற விமான நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்படுகிறது. விமான நிறுவனம், ஒவ்வொரு விமானத்திலும் பாதி அல்லது குறைந்தது 9 அல்லது அதிகபட்சம் 40 இருக்கைகளை இந்தக் கட்டண வரம்பிற்குள் பதிவு செய்ய வேண்டும். குறைந்த கட்டணம் காரணமாக நஷ்டத்தை எதிர்கொள்கின்ற விமான நிறுவனங்களுக்கு நடைமுறைச் சாத்திய இடைவெளிகால

# புதிய அத்தியாயத்தின் துவக்கம்

- உதான் திட்டத்தின் கீழ், இதுவரை -உதான் 1, உதான் 2, உதான் 3, உதான் 3.1, உதான் 4, உதான் 4.1 ஆகிய கட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 70 விமான நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தற்போது, 5 ஹெலிபோர்ட்ஸ், 2 நீர் ஏரோட்ரோம்கள் உட்பட 53 விமான நிலையங்களிலிருந்து, 369 வழித்தடங்களில் விமான சேவை வழங்கப்படுகிறது. ஹெலிகாப்டர் மற்றும் கடல் விமான சேவைகளும் உதான் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன

வருங்காலத்திற்கான விமானம்

- உதான் திட்டத்தின் கீழ் 11 ஆபரேட்டர்கள் பயணிகளுக்கு மலிவான டிக்கெட்டுகளை வழங்குகிறார்கள். 23 செப்டம்பர் 2021 விவரங்களின் படி, 1,43,361 விமானங்கள் உதான் திட்டத்தின் கீழ் இயங்கின. பயணிகள் மலிவான கட்டணத்தில் பயணச்சீட்டு பெறும் வகையில் இதுவரை, அரசு, 1341 கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.



## சிறகு விரிக்கும் எதிர்காலம்...

- உதான் திட்டத்தின் கீழ், மலிவான கட்டணத்தில், இதுவரை சுமார் 72 லட்சம் பேர் விமானத்தில் பயணம் செய்துள்ளனர். நாட்டின் மொத்த உள்நாட்டு பயணிகள் போக்குவரத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகர விமான நிலையங்களின் பங்கு 5%அதிகரித்துள்ளது.
- உதானின் கீழ், 2024ஆம் ஆண்டுக்குள், 1000 புதிய வழித்தடங்களுடன், 100 கூடுதல் விமான நிலையங்கள் இயக்கப்படும். 30 ஹெலிபோர்ட்ஸ் மற்றும் கடல் விமானங்களுக்கான 10 நீர் ஏரோட்ரோம்கள் தொடங்கப்படும். வட-கிழக்கு மாநிலங்களில்10 விமான நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- மண்டலத்தின் சமச்சீர் வளர்ச்சிக்கு, இத்திட்டத்தின் கீழ், நாட்டின் ஐந்து புவியியல் பகுதிகளில், விமான சேவை சமமாக விரிவுபடுத்தப்படும்.
- க்ரிஷி உதான் யோஜனா திட்டத்தின் கீழ் விவசாயப் பொருட்களின் விமான மூலமான போக்குவரத்துக்காக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது குறிப்பாக வடக்கு--கிழக்கு மற்றும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு நன்மை பயக்கும்

நிதியம் (விஜிஎஃப்) மூலம் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இந்திய விமான நிலைய ஆணையமும் விமான நிலைய கட்டணத்தை தள்ளுபடி செய்துள்ளது. அதே சமயம், மாநில அரசுகளும் பாதுகாப்பு, மின்சாரம், தீயணைக்கும் வசதிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குகின்றன.

பிரதமர் நரேந்திர மோடி ஒரு எளிமையான பின்னணியில் இருந்து நாட்டின் பிரதமர் பதவிக்கு உயர்ந்துள்ளார். அவரது ஒவ்வொரு கொள்கையிலும் சாமானிய குடிமக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அவரது தொலைநோக்குப் பார்வையின் விளைவாக, நாட்டின் நடுத்தர வர்க்கத்தினர், தாங்களும் விமானப்பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற முடிகிறது. பிரதமர் மோடி கூறுவதாவது: "மிக வேகமாக வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துக்கான உலக சந்தையில் இந்தியா நுழைவதற்கு, உதான் உதவியுள்ளது" ■

# தாய்நாட்டின் மீதான பற்றே அவர்களுக்கு பிரதானமாக இருந்தது

**இந்திய விடுதலைப் போராட்டம் என்பது விடுதலைக்கான இயக்கம் மட்டுமல்ல, அது மனித வரலாற்றில் மில்லியன் கணக்கான மக்கள், காலனி ஆட்சிக்கு எதிராக எழுந்த மிகவும் தனித்துவமான நிகழ்வு. எந்தவொரு மதம், இனம் அல்லது பிரிவு போன்றவை மீதான தங்கள் விருப்பத்தை விட்டுவிட்டு, மக்கள் தேசிய நலனை மிக உயர்வாகக் கொண்டிருந்தனர். இந்திய விடுதலையின் 75 வது ஆண்டைக் கொண்டாடும் இந்தப் பவளவிழாக் காலத்தில், ம்க்களின் தியாகங்களை நினைவு கூர்வதற்கும், அவர்களின் வீரத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதர்குமான ஒரு வாய்ப்பாகும்...**



நாடு விடுதலையடைந்து 75ஆவது ஆண்டைக் குறிக்கும் விடுதலை பவள விழாவைக் கொண்டாடும் போது நாம் இந்த நிகழ்வோடு இணைந்திருக்க வேண்டும்; இதில் ஆர்வத்துடன் பங்கேற்கவும் வேண்டும். நமது தீர்மானங்களை உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் உயர்த்திக் கொண்டே இருக்கவேண்டும். இது நம் அனைவரின் கடமை. நமது விடுதலைப் போராட்டத்தை மனதில் கொண்டு, நீங்கள் எதைச் செய்தாலும் அது, நிச்சயமாக ஒரு துளி அமுதம் போலத் தூய்மையாக இருக்கும். பல இந்தியர்களின் முயற்சியால் செய்யப்பட்ட இந்த பவளவிழா கும்பம், இனி வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு உற்சாகத்தை அளிப்பதாக அமையும்.

**- நரேந்திர மோடி, பிரதமர்**

அக்டோபர் 16 இந்திய வரலாற்றில் தீர்க்கமான, முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். ஏனென்றால் இந்த நாளில் தான் வங்காளத்தைப் பிரிப்பது என்ற பிரிட்டிஷ் முடிவு சட்டமாக இயற்றப்பட்டது. இந்தப் பிரிவினை பேங்-பாங்கோ என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பிரிவினைக்குப் பின்னால் கர்சன் பிரபுவின் நோக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அதிகரித்து வரும் அரசியல் எதிர்ப்பை அடக்குவது மட்டுமல்ல; ஆனால் அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஒரு பகுதியாக, வெவ்வேறு சமூகங்களை ஒன்றுக்கொன்று எதிராகக் களமிறக்கச் செய்வதாகும். இந்த முடிவு வங்காளத்திலிருந்து மட்டுமல்லாமல், நாடு முழுவதுமிருந்து கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது. நாட்டிலும். வங்காளப் பிரிவினை மற்றும் அதனை அடுத்தடுத்த நிகழ்வுகள் நாட்டை ஒன்றிணைத்தது மட்டுமல்லாமல், இந்திய தேசிய இயக்கத்தில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. இதன் விளைவாக இந்தியா 15 ஆகஸ்ட் 1947 அன்று விடுதலையடைந்தது. வங்கப் பிரிவினை நாட்டை ஒன்றிணைத்து, சுதேசி உணர்வைத் தட்டியெழுப்பியது போல், அதே வழியில், இந்தியா விடுதலை பெற்று 75 வது ஆண்டுகளாகும் இந்த நேரத்தில், ‘பாரத் ஜோடோ‘ என்ற குறிக்கோளுடன், நாடு முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

விடுதலை பவளவிழாவின் இந்தத் தொடரில், நாட்டிற்காக, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த சிறந்த விடுதலைப் போராட்ட வீரர்களின் சாதனைகளை நாங்கள் வழங்குகிறோம்.

## நிர்மலா தேஷ்பாண்டே: காந்திய சித்தாந்தத்துடனான புகழ்பெற்ற சமூகப் பணியாளர்

**பிறப்பு: 19 அக்டோபர் 1929, இறப்பு: 1 மே 2008**

நிர்மலா தேஷ்பாண்டே நன்கு அறியப்பட்ட காந்திய செயல்பாட்டாளர், சிந்தனையாளர், எழுத்தாளர், மாநிலங்களவை உறுப்பினர் மட்டுமல்ல; அவர் வினோபா பாவேயின் பூதான் இயக்கத்துடனும் தொடர்புடையவர். நிர்மலா தேஷ்பாண்டே 23 வயதில் பூதான் இயக்கத்தில் சேர்ந்தார். வினோபா பாவே அவர்களுடன் நாடு முழுவதும் 40,000 கிலோமீட்டர் பயணித்தார். நாக்பூரில், விமலா, புருஷோத்தம் யஷவந்த் தேஷ்பாண்டே தம்பதியினருக்கு,ப் பிறந்த, நிர்மலா தேஷ்பாண்டே, தனது வாழ்க்கையை சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காகவும், பெண்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூக நீதி, மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு சேவை செய்வதற்காகவும் அர்ப்பணித்தார். அவர் தனது வாழ்நாள் முழுவதும், தொடர்ந்து மகாத்மா காந்தி காண்பித்த பாதையைப் பின்பற்ற முயன்றார். அதே நேரம், அவர் சமுதாயமும் மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார். எழுதுவதில் அவருக்கு ஒரு சிறப்பு ஆர்வம் இருந்ததால் அவர் பல நூல்களை எழுதினார். நிர்மலா தேஷ்பாண்டே திருமணம் செய்து கொள்ளவில்லை. இரண்டு முறை மாநிலங்களவைக்கு நியமிக்கப்பட்டார். அவருக்கு பத்ம விபூஷண் விருதும் வழங்கப்பட்டது.



**நிர்மலா தேஷ்பாண்டே, தனது வாழ்நாள் முழுவதும், அமைதி மற்றும் அகிம்சை கொள்கைகளை பிரச்சாரம் செய்து வந்தார்.**

## கிட்டூர் ராணி சென்னம்மா: பிரிட்டஷாருக்கு சிம்ம சொப்பனமாக் திகழ்ந்தவர்

**பிறப்பு: 23 அக்டோபர், 1778 இறப்பு: 21 பிப்ரவரி 1829**

இன்றைய கர்நாடகாவில், அப்போதைய சுதேச மாநிலமான கிட்டூரின் இந்திய ராணி சென்னம்மா, 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சுதந்திரப் போருக்கு, 33 ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் புரட்சி செய்தவர். இந்தக் காரணத்தாலேயே, அவர், இந்திய விடுதலைப் போராட்டத்தின் விடிவெள்ளி என்று அறியப்படுகிறார். இந்தியாவில், ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய முதல் ஆட்சியாளர்களுள் ஒருவர் அவர். சென்னம்மா, கர்நாடகா, பெலகவி மாவட்டத்தில் உள்ள, ஒரு சிறிய கிராமம் ககதியில் அக்டோபர் 1778, 23 ஆம் தேதியன்று பிறந்தார். தேசாய் வம்சத்தின் மன்னர் மல்லசர்ஜாவுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். அதன் பிறகு அவர் கிட்டூர் ராணியானார். சென்னம்மாவின் கணவர் 1824 இல் இறந்தார். அவருடைய மகனும் அந்த ஆண்டே இறந்தார். கணவர், மகன் இருவருமே இறந்ததையடுத்து ராணி சென்னம்மா சிவலிங்கப்பாவை தத்தெடுத்து, அரியாசனத்துக்கு, அவரை வாரிசாக்கினார். இது பிரிட்டிஷாரை எரிச்சலடையச் செய்தது. எந்த விதத்திலாவது கிட்டூரைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரிட்டிஷார் சிவலிங்கப்பாவை வெளியேற்ற ஆணையிட்டனர். இதன் விளைவாக, போர் நடந்தேறியது. ராணி சென்னம்மா தைரியமாக பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடினார். இறுதியில், ராணி தோற்கடிக்கப்பட்டார், சிறையிலடைக்கப்பட்டார். அவர் பிப்ரவரி 1829, 21 ஆம் தேதி சிறையிலேயே இறந்தார்.



**சென்னம்மா, இந்திய விடுதலைப் போராட்டத்தின் விடிவெள்ளி என்று போற்றப்படுகிறார்**

## ஆச்சார்யா நரேந்திரா தேவா, குறைகளற்ற செயல்திறன் மற்றும் எளிமையின் பிம்பமாக இருந்தார்

**பிறப்பு: 31 அக்டோபர் 1889, இறப்பு: 19 பிப்ரவரி 1956**

ஆச்சார்யா நரேந்திர தேவா இந்தியாவின் ஒரு முக்கிய சுதந்திரப் போராட்ட வீரர், அறிஞர், கல்வியாளர், சோசலிசத் தலைவர். இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர். ஆச்சார்யா நரேந்திர தேவா 31 அக்டோபர் 1889 அன்று உத்தரப்பிரதேசம் சீதாபூரில் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் பல்தேவ் பிரசாத். தாயின் பெயர் ஜவஹர் தேவி. காசி வித்யாபீடத்தில் சேர்ந்த பிறகு, ஆச்சார்யா என்ற பட்டப்பெயர் அவரது பெயரின் ஒரு பகுதியாக மாறியது. விடுதலை பெற்ற இந்தியாவைப் பார்ப்பது அவரது கனவாக இருந்தது. எனவே அவர் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் இணைந்தார். அவர் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்றார். பல முறை சிறை சென்றார். ஆச்சார்யா அவர்கள், திறமையான, உண்மையான சத்தியாகிரகியாக இருந்தார், இதன் காரணமாகவே, காந்தியடிகளே அவரை ஒரு 'மாணிக்கம்' என்று கூறினார். சமூக மாற்றத்தின் முன்னோடியாக இருந்த அவர், காந்தியின் ஆக்கபூர்வமான திட்டத்திலும் பங்கேற்றார். அவரது ஆரம்பகால வாழ்க்கையில் அலகாபாத்தில் அவர் தங்கியிருந்த காலத்தில், பால கங்காதர திலகர், லஜ்பத் ராய், பிபின் சந்திர பால், அரவிந்தோ கோஷ் மற்றும் பிற தலைவர்களினால் அவர் வெகுவாகக்கவரப்பட்டார். அவர், வந்தே மாதரம் மற்றும் ஆர்யா செய்தித்தாள்களின் ஒரு வழக்கமான வாசகர். நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும், ஆச்சார்யா நரேந்திர தேவா தொடர்ந்து தேச சேவையில் ஈடுபட்டார். ஆச்சார்யா நரேந்திர தேவா மார்ச் 1948 இல் உத்தரப்பிரதேச சட்டப் பேரவையிலிருந்து ராஜினாமா செய்து சோசலிஸ்ட் கட்சியை உருவாக்கினார். ஆச்சார்யா நரேந்திர தேவாவின் வாழ்க்கை போராட்டம், தியாகம், இன்னல்கள், மனிதகுலத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்தல் என்பதாக இருந்தது. அவர் 19 பிப்ரவரி 1956 இல் இறந்தார்.

## ஜத்தின் தாஸ் - பிரித்தானியப் பேரரசை உலுக்கிய இளம் தாதிச்சி

**பிறப்பு: 27 அக்டோபர் 1904, இறப்பு: 13 செப்டம்பர் 1929**



ஜதீந்திரநாத் தாஸ், விடுதலைப் போராட்டத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சியின் அடித்தளத்தை ஒரு முறை அல்ல, பல முறை. அசைத்த ஒரு புரட்சியாளர். அவர் வீரமரணம் அடைந்த போது, சுபாஷ் சந்திர போஸ், "மகரிஷி தாதிச்சி தனது வஜ்ரத்திற்காக, தனது எலும்புகளைத் தானம் செய்தார். அதே வழியில், ஜடின், தனது உடலை தானம் செய்தார். அவர் நவீன இந்தியாவின் இளம் தாதிச்சி" என்று கூறினார். அவர், 27 அக்டோபர் 1904 அன்று கொல்கத்தாவில் ஒரு சாதாரண குடும்பத்தில். பிறந்தார். அவரது தந்தை பங்கிம் பிஹாரி தாஸ். தாய் சுஹாசினி தேவி. மகாத்மா காந்தியின் அழைப்பின் பேரில், ஒத்துழையாமை இயக்கத்தில் ஜதின் தாஸ் பங்கேற்றார். பல முறை சிறைக்குச் சென்றார். பின்னர் அவர் பிரபல புரட்சியாளர் சசீந்திர நாத் சன்யாலுடன் தொடர்பு கொண்டார். இந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்ற புரட்சிகர அமைப்பின் உறுப்பினரானார். இந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் அமைப்பில் அவர் இருந்த காலத்தில் தான் அவர் குண்டுகள் தயாரிக்கக் கற்றுக்கொண்டார். அவர், 1928 கல்கத்தா காங்கிரசில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் உதவியாளர்களுள் ஒருவராகவும் பணியாற்றினார். பின்னர் பகத்சிங்கின் வேண்டுகோளுக்கிணங்க குண்டுகள் தயாரிப்பதற்காக அவர் ஆக்ராவுக்குச் சென்றார். மத்திய சட்டசபையில் 8 ஏப்ரல் 1929 அன்று பகத்சிங் மற்றும் பதுகேஷ்வர் தத் வீசிய குண்டு ஜதின் தாஸ் தயாரித்தது என்று நம்பப்படுகிறது. லாகூர் சதி வழக்கில் அவர் மீது விசாரணை நடத்தப்பட்டு, அவர் சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் அவல நிலை கண்டு கலங்கிய ஜதின் தாஸ், அவர்கள் ஐரோப்பிய கைதிகள் போல நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கைக்காக அவர் லாகூர் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். இந்தக் கடினமான உண்ணாவிரதப் போராட்டம் 63 நாட்கள் நடந்தது. இந்த காலகட்டத்தில், பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜதின் தாஸுக்கு உணவளிக்க பல்வேறு வழிகளைப் பயன்படுத்தினர். ஆனால் அவர் உண்ணாவிரதத்திலிருந்து பின்வாங்கவில்லை. இறுதியில், அவர் 63 நாட்களுக்குப் பின் செப்டம்பர் 13 அன்று உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது 25 மட்டுமே.

**25 வயதில் அவர் தனது இறுதி மூச்சுக்கு முன் 63 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார்.**

## அஷ்ஃபாகுல்லா கான் - ஆங்கிலேயரின் கண்முன்னேயே கருவூலத்தைக் கொள்ளையடித்தார்

**பிறப்பு: 22 அக்டோபர் 1900, இறப்பு: 19 டிசம்பர் 1927**



அஷ்ஃபாகுல்லா கான் அக்டோபர் 22 1900 அன்று உத்தரப்பிரதேசத்தின் ஷாஜகான்பூரில் பிறந்தார். ககோரி சம்பவத்தில் முக்கிய அங்கம் வகித்த அஷ்ஃபாகுல்லா கான் ஒரு பெரிய உருது கவிஞர் மட்டுமல்ல; ராம் பிரசாத் பிஸ்மிலின் நெருங்கிய நண்பருமாவார். அவர், தூக்கு மேடைக்குச் சென்ற புரட்சியாளர்களில் ஒருவர். அவருக்கு 27 வயதே நிரம்பியிருந்த போதிலும், ஒரு புன்னகையுடன் தூக்கு மேடைக்குச் சென்றவர். மகாத்மா காந்தியால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்திலும் அவர் அங்கம் வகித்தார். பின்னர், 1922 பிப்ரவரி 4 அன்று சௌரி சௌரா சம்பவத்திற்குப் பிறகு, காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்ற போது அஷ்ஃபாகுல்லாவும், மற்ற புரட்சியாளர்களும், மன வருத்தமடைந்தனர். சௌரி சௌராவில் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர்கள் காவல்துறையினருடன் மோதியதில் 22 போலீசாரும், பொதுமக்கள் மூவரும் இறந்தனர். மூன்றாண்டுகளுக்குப் பிறகு, ஆகஸ்ட் 1925, 8 ஆம் தேதி புரட்சியாளர்களின் ஒரு முக்கியமான சந்திப்பு சந்திர சேகர் ஆசாத் தலைமையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், சஹரன்பூர் லக்னோ பயணிகள் ரயிலில் கொள்ளையடிக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டது. ரயில் அரசாங்கக் கருவூலத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்தது. அடுத்த நாள் 1925 ஆகஸ்ட் 9 ஆம்.தேதியன்று ககோரி ரயில் நிலையத்தில் கொள்ளையடிப்பது என்று திட்டமிடப்பட்டிருந்தது. அஷ்ஃபாகுல்லாவும், இப்போது இந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனில் இணைந்து விட்டிருந்த அவரது கூட்டாளிகளும், புகழ் பெற்ற ககோரி ரயில் கொள்ளையை நடத்தினர். இந்தத் துணிகரமான சம்பவத்திற்குப் பிறகு, அவர் போலீசார் கண்களிலிருந்து நீண்ட காலம் விலகியிருக்க முடிந்தது. ஆனால் அவர், போலீஸ் இன்ஃபார்மராக மாறிய அவரது பள்ளித்தோழர் ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார். ககோரி சதி வழக்கின் விசாரணை மே 1926, 21 ஆம் தேதி தொடங்கியது. இறுதித் தீர்ப்பு ஜூலை 1927ல் அறிவிக்கப்பட்டது. ராம் பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபாகுல்லா கான், தாக்கூர் ரோஷன் சிங், ராஜேந்திர லஹிரி ஆகியோருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. 1927 டிசம்பர் 19 அன்று கோரக்பூர் சிறையில் அவர்கள் அனைவரும் தூக்கிலிடப்பட்டனர்

**வெறும் 27 வயதில் அவர் ஒரு புன்னகையுடன் உயிர் துறந்தார்.**

## சகோதரி நிவேதிதா சிறப்பு வாய்ந்த இந்திய மண்ணுக்காக அர்ப்பணிக்கப்பட்டார்

**பிறப்பு: 28 அக்டோபர் 1867, இறப்பு: 13 அக்டோபர் 1911**



சுவாமி விவேகானந்தரின் சீடர் நிவேதிதா. ஐரிஷ் வம்சாவளியைச் சேர்ந்தவர். அவரது இயற்பெயர் மார்கரெட் எலிசபெத் நோபல். நிவேதிதா. 28 அக்டோபர் 1867 அன்று கவுண்டி டைரோன், வடக்கு அயர்லாந்தில் பிறந்தார். மார்கரெட் எலிசபெத் நோபலுக்கு "சகோதரி நிவேதிதா" என்ற பெயர் - அதாவது 'கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்' என்பது பொருள் - சுவாமி விவேகானந்தரால் வழங்கப்பட்டது. . நிவேதிதா என்பது "பெண்களின் கல்விக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்" என்றும் பொருள்படும். இந்திய கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டு இந்தியாவைத் தமது சேவைத் தலமாக்கிக் கொண்டு, இந்தியர்களுக்கு சேவை புரிந்தார். அவர் எப்போதும் இந்தியாவைத் தமது தாய்நாடாகவே கருதினார். எனவே தான், அவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களையும் புரட்சியாளர்களையும் ஆதரித்தார். தாமும் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். ரவீந்திரநாத் தாகூர், ஜெகதீஷ் சந்திர பாசு, அபனிந்திரநாத் தாகூர் மற்றும் நந்தலால் போஸ். போன்றோருடன் அவர் தொடர்பில் இருந்தார். ஆங்கிலேயர்களின் சதி பற்றி எச்சரித்து, மகரிஷி அரவிந்த கோஷ் அவர்களைப் பாண்டிச்சேரி (இப்போது புதுச்சேரி) செல்லுமாறு அவர் அறிவுறுத்தியதாக நம்பப்படுகிறது. இந்தியக் கண்ணோட்டத்துடன் இந்திய வரலாற்றை எழுத வெண்டும் என்று, ரோமேஷ் சந்தர தத், ஜதுநாத் சர்க்கார் ஆகியோரை அவர் ஊக்குவித்தார். பெண் கல்வி பற்றி மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அதனால்தான் அவர் அப்போதைய கல்கத்தாவில் பெண்களுக்கான பள்ளி ஒன்றைத் திறந்தார். நிவேதிதா பள்ளி, சுவாமி விவேகானந்தரின் குரு ராமகிருஷ்ண பரமஹம்சரின் ஆன்மீகத் துணை அன்னை சாரதா அவர்களால் தொடங்கப்பட்டது. அவரிடமிருந்து பெற்ற உத்வேகத்தையடுத்து, மத்திய அரசு, பெண் கல்விக்கான திட்டம் "பேட்டி பச்சாவோ-பேட்டி படாவோ" திட்டத்தை நடத்துகிறது. நிவேதிதா ஒரு வெற்றிகரமான எழுத்தாளருமாவார். இந்தியர்களிடையே தேசிய உணர்வை எழுப்ப பல புத்தகங்களை அவர் எழுதினார்.

**சகோதரி நிவேதிதா பெண் கல்வி பற்றி மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்**

## 'பீஹார் கேசரி' டாக்டர். ஸ்ரீ கிருஷ்ணா சிங் - சமூக நீதியின் சின்னம்

**பிறப்பு: 21 அக்டோபர் 1887, இறப்பு: 31 ஜனவரி 1961**



காந்தியவாத மதிப்புக்களில் நம்பிக்கை கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணா சிங், ஒரு சிறந்த விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல; நவீன பீகாரைக் கட்டமைத்த கட்டிடக் கலைஞருமாவார். 'பீகார் கேசரி', 'பீகார் விபூதி' 'ஸ்ரீபாபு' போன்ற அவரது பல்வேறு புனைபெயர்கள், மக்கள் அவர் மீது கொண்டிருந்த அன்புக்கும், மரியாதைக்கும் சான்றாகும். ஸ்ரீ கிருஷ்ணா சிங் நவாடா மாவட்டத்தில் கான்வா கிராமத்தில் பிறந்தார். அவரது ஐந்தாம் வயதில், அவரது தாயார் காலமானார். ஸ்ரீ கிருஷ்ணா சிங், தேசத் தந்தை மகாத்மா காந்தியின் அழைப்பின் பேரில் அரசியலுக்கு வந்தார். இளம் வயதிலேயே விடுதலைப் போராட்டத்தில் இணைந்தார். அவர் காந்தியடிகளை, 1917ஆம் ஆண்டில் பனாரஸில் உள்ள சென்ட்ரல் இந்து கல்லூரியில் சந்தித்தார். காந்தியடிகள் சம்பரன் சத்தியாகிரகம், தொடங்கிய போது விவசாயிகள் குழுவிற்கு ஸ்ரீ கிருஷ்ணா சிங் தலைமை தாங்கினார். 1921 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி நாட்டின் விடுதலைக்காக ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய போது, அவர் தனது வழக்குரைஞர் தொழிலை விடுத்து, விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். 1930 இல் உப்பு சத்தியாகிரகத்தின் போது மிகவும் தீவிரமாகப் பங்கேற்றார். 1933 இல் கீழ்ப்படியாமை இயக்கத்தின் போது, அவர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1941 சத்தியாக்கிரகத்தின் போது, காந்தியடிகள் ஸ்ரீ கிருஷ்ணா சிங்கை பீகாரின் முதல் சத்தியாகிரகியாக நியமித்தார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு காலத்தில் அவர் சிறையிலடைக்கப்பட்டார். தமது வாழ்நாள் முழுவதும், அவர் சமூக நீதிக்காகப் போராடினார். பீகார் முதல்வராக, அவர் ஜமீன்தாரி முறையை ஒழித்தார். இது மட்டுமல்ல, அவர் தியோகரில் உள்ள பைத்யநாத் தாம் கோவிலில். தலித்துகளின் நுழைய வேண்டும் என்பதற்காக பிரச்சாரம் செய்தார். இறுதியில், அவர் வெற்றி பெற்றார். அவரது முயற்சிகள். காரணமாக, தலித்துகள் பாபா பைத்யநாத் தாம் கோவிலுக்குள் நுழைவது சாத்தியமாயிற்று.

**தமது வாழ்நாள் முழுவதும், அவர் சமூக நீதிக்காகப் போராடினார்.**



**Narendra Modi** @narendra...
India is using technology in every sphere of governance and healthcare is no exception.

Be it Aarogya Setu or CoWin, technology has been of great help in fighting COVID-19.

Likewise, telemedicine has helped several people.



**Rajnath Singh** @rajnathsingh ·
I welcome PM Shri @narendramodi on his return to India from an extremely successful and fruitful visit to the United States. His visit will certainly go a long way in further strengthening India-USA friendship and shaping the global perspective on the Indian world view.



**Amit Shah** @AmitShah ·
जनता को आपदा हेतु तैयार करना जरुरी है। आपदा के समय त्वरित रिस्पॉंड करने में 'आपदा मित्र' ही सबसे पहले सहायता कर सकते हैं।

मोदीजी के नेतृत्व में हम आपदा प्रभावित 350 जिलों में आपदा मित्र कार्यक्रम की शुरुआत करने जा रहे हैं और सभी वॉलंटियर्स के बीमा का जिम्मा भी भारत सरकार उठाएगी।



**Nitin Gadkari** @nitin_gadkari ·
पंक्ति में खड़े आखिरी व्यक्ति की जिंदगी बेहतर हो, दीनदयाल उपाध्याय जी का एकात्म मानव दर्शन का सपना पूरा हो, देश की इकॉनोमी #5TrillionDollar की बने, इसमें सहकारिता मंत्रालय की महत्वपूर्ण भूमिका होगी।
#SahkarSeSamriddhi



**Narendra Singh Tomar** @nst...
सरकार ने शहद के उत्पादन और निर्यात को बढ़ावा देने के लिए राष्ट्रीय मधुमक्खी पालन और शहद मिशन (एनबीएचएम) शुरू किया है।
इसके तहत आज गुजरात सहकारी दुग्ध विपणन संघ लिमिटेड और राष्ट्रीय मधुमक्खी बोर्ड के सक्रिय सहयोग से "अमूल हनी" लॉन्च किया।



**Anurag Thakur** @ianuragtha...
I'm happy to announce the restructuring of sports science and performance management systems in SAI towards better results in Olympics.

Over 300 sports science specialists and high performance coaches, analysts and other personnel to be hired towards targetted results.

# PM in Mann Ki Baat: No one should be left out of vaccine's circle of safety

**EXPRESS NEWS SERVICE**
NEW DELHI, SEPTEMBER 26

PRIME MINISTER Narendra Modi on Sunday greeted the people ahead of the upcoming festival season even as he cautioned them to maintain Covid protocols and to ensure that those who are yet to receive their vaccinations are also inoculated.

In his monthly Mann Ki Baat radio broadcast, recorded before he left for the US for an official visit, Modi said everyone should get the vaccine administered when his or her turn comes and should also ensure that no one is left out of this "circle of safety".

"With regards to vaccination, the country has made many such records which are being talked about the world over," he said. "Those around you who have not gotten vaccinated also have to be taken to the vaccine centre. Even after getting vaccinated, the necessary protocol generation today is giving khadi the place of pride that khadi had during freedom struggle...

"On October 2, on revered Bapu's birth anniversary, let us aim for another new record... For the festive season, every khadi, handloom, cottage industry purchase of yours should strengthen the campaign for 'Vocal for Local', it should break all old records," said the Prime Minister.

Modi dedicated this month's Mann ki Baat to World Rivers Day, which is marked on Sunday. The Prime Minister said in India, we revere rivers, but on the other hand, we pollute them. Pointing out that great progress was being made through the government's Namami Gange programme, Modi said the money collected through the e-auction of gifts which he has received (launched on September 17 and to continue till October 8), will be given to Namami Gange.

The Prime Minister also mentioned the feat of the team of eight specially-abled persons

## TRACKING THE SECOND SURGE

**574** DAYS SINCE PANDEMIC BEGAN

**NEW CASES: 26,305**
**ACTIVE CASES: 3,01,489**
**TOTAL VACCINATION: 85,60,81,527**

DAILY DEATHS 278 | TOTAL DEATHS 4,47,196 | WEEKLY CFR 0.87% | OVERALL CFR 1.34%



TESTS TODAY: 13,68,992 | TOTAL TESTS: 56,46,12,237
WEEKLY POSITIVITY: 1.83% | OVERALL POSITIVITY: 5.96%

### STATES REPORTING MOST CASES

| STATE | NEW CASES | ACTIVE CASES | WEEKLY POSITIVITY | TOTAL VACCINATION |
|---|---|---|---|---|
| Kerala | 15,951 | 1,63,776 | 15.86% | 3,50,64,877 |
| Maharashtra | 3,206 | 37,860 | 2.33% | 7,81,02,782 |
| Tamil Nadu | 1,694 | 17,285 | 1.10% | 4,41,52,468 |
| Mizoram | 1,478 | 15,788 | 16.01% | 11,05,944 |

# Corruption has come down due to schemes: PM

**DC CORRESPONDENT**
**NEW DELHI, SEPT 26**

In his monthly Mann ki baat address on Sunday, Prime Minister Narendra Modi said corruption has reduced very significantly by measures such as depositing money directly into the "Jan Dhan" bank accounts off the poor, adding that through the world's largest health assurance scheme — Ayushman Bharat scheme, more than two and a half crore economically weaker sections of society have got free treatment up to ₹5 lakh in hospital.

The PM devoted much of

poor; eases their life. You are aware of the campaign that the country started regarding Jandhan accounts. Today, because of this the rightful money of the poor is getting credited directly into their accounts and because of this, obstacles like corruption have reduced very significantly."

Modi further said, "It is true that technology can help a lot in economic cleanliness. It is matter of delight for us that even in villages, the common person is getting connected in the direction of digital transactions through fintech UPI... its prevalence has begun increasing.

## Work in Progress



# Come, make in India: Modi woos global vaccine manufacturers

**TIMES NEWS NETWORK**

PM Narendra Modi on Saturday made an important effort to put India on the front-line of the global fight against Covid-19, by inviting global vaccine manufacturers to "come and make vaccines in India".

"I, today, invite vaccine manufacture around the world — come, make vaccines in India," PM Modi said while addressing the 76th session of the UN General Assembly.

"I want to give this information to UNGA that India has developed the world's first



PTI
The Indian community greets PM Modi in New York on Saturday

siderable goodwill when the Modi government launched "Vaccine Maitri" initiative to

for those above 12 years of age, Pune-based biotechnology firm Gennova Biopharma-

# US Prez backs India's UNSC permanent seat

**Press Trust of India**
letters@hindustantimes.com

**WASHINGTON:** US President Joe Biden has reiterated America's support for India's permanent membership on a reformed United Nations Security Council (UNSC) and its entry into the Nuclear Suppliers Group (NSG) during his first in-person bilateral meeting with Prime Minister Narendra Modi at the White House.

President Biden, in his talks with Prime Minister Modi,




**MODI'S MANN KI BAAT**

# 'Turn to khadi on Gandhi Jayanti, break all records'

**OUR BUREAU**
New Delhi, September 26

Prime Minister Narendra Modi on Sunday urged people to go in for record purchases of Khadi products on Mahatma Gandhi's birth anniversary on October 2.

In his address at the 81st episode of *Mann Ki Baat*, Modi called for collective efforts to maintain the tradition of remembering rivers and suggested that a "river festival" be celebrated at least once a year across the country. On the occasion of 'World Rivers Day' today, Modi highlighted the importance of rivers.

**Push for khadi**

Modi made a big push for Khadi, ahead of Mahatma Gandhi's birthday and stressed the need to further strengthen the vocal for local programme.

"Before Bapu's birthday, we should break all records in purchasing Khadi, we should be vocal for local. With upcoming festivals, make sure all your



Prime Minister Narendra Modi

purchases are Khadi," Modi said.

He said that Bapu (Mahatma Gandhi) was a proponent of cleanliness and had made cleanliness a mass movement and associated it with the dream of independence.

"Today, the production of Khadi and handloom has increased manifold and its demand has also increased," he added.

**Economic cleanliness**

Modi also drew attention of people to 'economic cleanliness'. He talked of popularity of technology like UPI.

"In the last one month (August), there have been over 350 crore UPI transactions. In this way, we can see how fintech has gone up considerably. Now, on an average over ₹6-lakh crore worth transactions are being put through UPI. It is true that technology can help in financial cleanliness. Nowadays, people in the villages are able to transfer money through UPI," he said.

Modi said that Covid has taught all to pay attention to healthcare and natural products. He spoke of an aloe vera field in Jharkhand run by women and how sanitiser companies are flocking to them.

## Digital Health Mission launch today

**OUR BUREAU**
New Delhi, September 26

Prime Minister Narendra Modi will launch the Pradhan Mantri Digital Health Mission (PM-DHM) on Monday at 11 am via video conferencing.

Currently, PM-DHM is being implemented in pilot phase in six UTs.

"Based on the foundations laid down in the form of Jan Dhan, Aadhaar and Mobile (JAM) trinity and other digital initiatives of the government, PM-DHM will create a seamless online platform through the provision of a wide-range of data, information and infrastructure services, duly leveraging open, interoperable, standards-based digital systems while ensuring the security, confidentiality and privacy of health-related personal information. The Mission will enable access and exchange of longitudinal health records of citizens with their consent," a release said.

# PM returns after 20 meetings in 3-day US visit



PM Narendra Modi at Palam airport on Sunday PHOTO: PTI

**PRESS TRUST OF INDIA**
New Delhi, 26 September

Prime Minister Narendra Modi, who returned to India from the US on Sunday, attended 20 meetings during his 65-hour visit, government sources said.

He also had four long meetings in flights with officials on the way to and back from the US, they added.

Sharing details, sources said Modi had two meetings in flight on Wednesday on the way to the US and three in the hotel upon his arrival.

On September 23, he had five meetings with as many CEOs followed by talks with US Vice President Kamala Harris and bilateral interactions with his Japanese and Australian counterparts Yoshihide Suga and Scott Morrison, respectively. He also chaired three internal meetings.

He had a bilateral meeting with US President Joe Biden the next day and then attended the Quad meet. Sources said Modi also held four internal meetings on September 24.

As Modi left the US for India on September 25, he held two meetings in the flight back, sources said.

Modi, who landed at the Palam airport, was given a warm welcome by BJP leaders, including party chief JP Nadda.

Modi, who walked for nearly two kilometres meeting party workers and the people lined up along the road outside the airport, thanked them for welcoming him.

Citing Modi's meetings with US President Joe Biden and Vice-President Kamala Harris, besides his participation in the Quad meet and address at the UNGA, Nadda said the Prime Minister put across strongly and frankly global issues and also India's views over threats like terrorism and expansionism.

RNI No. :
DELTAM/2020/78809
October: 16-31, 2021

New India SAMACHAR Fortnightly

RNI Registered No DELTAM/2020/78809, Delhi Postal License No DL(S)-1/3551/2020-22, WPP NO U (S)-99/2020-22, posting at BPC, Meghdoot Bhawan, New Delhi - 110 001 on 13-17 advance Fortnightly (Publishing Date October 6, 2021, Pages - 48)



# ஆசாத் ஹிந்த்

நமது விடுதலைப் போராட்டத்தில் இதுபோன்ற பல மைல்கற்கள் கிட்டத்தட்ட மறக்கப்பட்டு விட்டன. ஆசாத் ஹிந்த் வடிவத்தில் இந்தியாவின் முதல் சுதந்திர அரசாங்கத்தின் உருவாக்கம் புறக்கணிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுள் ஒன்றாகும். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அக்டோபர் 21, 1943 அன்று இந்திய விடுதலைக்கு சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தியாவின் முதல் சுதந்திர அரசாங்கத்தை நிறுவினார். அந்த நேரத்தில் 9 நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்திருந்தன. 2018 ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி, ஒரு வரலாற்று முயற்சியை எடுத்து, ஆசாத் ஹிந்த் அரசின் 75 வது ஆண்டு விழாவில் செங்கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றினார்.

> இந்திய தேசிய உணர்வை முதன்முதலில் விதைத்தவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். இந்திய மக்கள், இந்தியன் என்ற கண்ணோட்டத்தில் தேசத்தை காண வேண்டும் என்று கற்றுக்கொடுத்த முதல் நபர் இவர்தான். -நரேந்திர மோடி, பிரதமர்

Editor: Jaideep Bhatnagar, Principal Director General, Press Information Bureau, New Delhi

Published & Printed by: Satyendra Prakash, Principal Director General, BOC on behalf of Bureau of Outreach and Communication

Published from Bureau of Room No-278, Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

Printed at Infinity Advertising Services Pvt.Ltd. FBD-One Corporate Park, 10th floor, New Delhi-Faridabad border, NH-1,Faridabad-121003

Tamil Vol. 2 Issue 8